சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 8 22-3-'42 Price 2 Annas.

மூன்று தலை முறைகள்.

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

ஹிந்து மஹாசபைத் தலைவர்

ஹிந்து மஹாசபைத் தலைவர் ஸ்ரீ. வி. டி. ஸவர்க்கார் பம்பாய் வந்தபோது பம்பாய் மாகாண ஹிந்து மகாசபை ஆதரவில் அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு பதிலளித்தார் (ஜி. எஸ். எ.)

தது; உடனே தன் ஜேபியில் இருந்த ஒரு பொட்டலத்தை எடுத்து ஒரு குடிக்கும் கோப்பையில் இட்டு ஷர்பத்தை விட்டான். இன்னொரு கோப்பையில் ஷர்பத்தை விட்டு தன் அருகில் வைத்துக்கொண்டான்.

“என்ன குழந்தாய் என்ன இவ்வேளையில் என்னைப் பார்க்க வந்தாய்?” என்றான் கியாஸ்.

நாஸிர் வெகு வணக்கத்துடன் எழுந்து தன் தகப்பனை அமரும்படி கேட்டுக்கொண்டான். “அவ்வளவொன்றும் பெரிய காரியமல்ல, நீங்கள் கொஞ்சம் ஷர்பத் சாப்பிடுங்கள்” என்று கூறி தன் தகப்பனிடம் ஒரு கோப்பையைக் கொடுத்து (விஷமிட்டது) தானும் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டான். கியாஸ் புன்சிரிப்புடன் கோப்பையை வாங்கிக் கொண்டான், ஆனால் அதைப்பார்த்ததும் அவன் முகம் மாரியது. நாஸிருடீனையும் கோப்பையும் மாறிமாறிப் பார்த்தான், நாஸிர் இதைக் கண்டான். அவன் உடல் நடுங்கத் துடங்கியது. ஆனால் இனி என் செய்வது ஒன்றும் அறியாதவன் போல் இருந்தான். இதைப்பார்த்தான் கியாஸுடீன் “நாஸிர் பயப்படாதே. நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன், நான் யாரோ என்று இருந்தேன். நீ என்று எனக்குத் தெரியாது. கரீம்கான் நேற்றும் இன்றைக்கும் என் ஊணவில் விஷம் இட்டுக்கொண்டு வந்தான். அவன் பின்னால் யாரோ இருக்கிறார்கள். அவன்பேரில் குற்றமில்லை என்று நான் அறிவேன். ஆனால் அது நீ என்று எனக்குத் தெரியாது. இதோ பார் என் கையில் இருக்கும் இந்த மோதிரம் தான் என்னை காப்பாற்றியது. இது இருக்கும் போது விஷமுள்ள பண்டமானால் அது எனக்குத் தெரிந்துவிடும், அதனாலேயே நான் இதுகாறும் தப்பினேன். ஆனால் இனி நான் தப்ப விரும்பவில்லை. உன் ஆசை நிறைவேறட்டும். நீயே அரசனாய் இரு. நீ விரும்பியதில் தப்பொன்றும் இல்லை. நான் இவ்வளவு காலம் சிறப்பாக ஆண்டேன். எவ்வளவு காலம் நான் ஆளுவேன், நான் தான் பேராசைக்காரன், நீ அல்ல. என்னை நீ அழிக்க எத்தனித்தது சரியே” இவ்வாறு கூறிக் கொண்டே தன்கையில் இருந்த மோதிரத்தை கழற்றி எறிந்து விட்டு கோப்பையில் இருந்த விஷத்தை ஒரு நொடியில் குடித்துவிட்டான் அரசன் கியாஸ்.

நாஸிருடீன் இதை எதிர் பார்க்கவில்லை. கியாஸ் செய்தது அவனை பிரமிக்கச் செய்தது. அவனையுமறியாமல் அவன் உடம்பு நடுங்கிற்று.

விஷத்தைக் குடித்துவிட்டு கியாஸுடீன், நாஸிரைக் கூப்பிட்டு தன் மார்போடணைத்துக் கொண்டான், ‘அல்லா உன்னைக் காப்பாற்றட்டும்’ என்று கூறி கண்ணீர் விட்டான். பிறகு கடவுளைக் குறித்து தன் கடைசி பிரார்த்தனையைக் கூறினான்: “நாஸிருடீன் என் ஆசை மகன். அவன் செய்த குற்றத்திற்காக, அல்லா, நீ அவனை தண்டிக்காதே. நான் எண்பது வருஷ காலம் சீறும் சிறப்புடனும் வாழ்ந்தேன். என் வாழ் நாளை நான் சுகமாகக் கழித்தாய் விட்டது இனி இறப்பதால் எனக்கு ஒருவிதக் கஷ்டமும் இல்லை, என் வாழ் நாள் எனக்கு இனி ஒரு சுகமும் தரப் போவதில்லை. அதனால் அதைத் தீர்க்க எண்ணிய என் மகனை தண்டிக்காதே. அல்லா அவனுக்குத் துர்மரணத்தைக் கொடுக்காதே” என்று சொல்லிக்கொண்டே தரையில் பிணமாகச் சாயந்தான். நாஸிருடீன் தன் தகப்பனுக்குத் தன் மேல் இருந்த ஆசையை எண்ணி அவன் மேல் விழுந்து புரண்டு அழுதான். ஆனால் இனி என் செய்வது? ஒரு புண்ணிய ஆத்மா அதற்குரிய இடத்திற்குச் சென்று விட்டது.

கடவுள் கியாஸுடீன் பிரார்த்தனைக் கிணங்கினார் போலும். நாஸிருடீன் 32 வருஷ காலம் மாளவ தேசத்தை கொடுங்கோலின் கீழ் ஆண்ட பிறகு பரகதியடைந்தான். அவன் உயிரை மாய்க்க எத்தனையோ பிரயத்னங்கள் வந்தன. ஆனால் அவை ஒன்றும் பலிக்கவில்லை. அவனுக்கு துர்மரணம் கிட்டவில்லை.

கஷ்டம் குறைவு ! சுகம் நிறைவு !!

ஆகாரங்களில் உள்ள வைடமின் முதலிய ஜீவ சத்துக்கள் போகாமல் தேக சௌக்கியம் அடையவேண்டுமானால்

ருக்மணி குக்கர்

ஒன்றை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள். ஒருவித பிரயாசையுமின்றி ஒரே அடுப்பில் சாதமும், 5 வித பதார்த்தங்களும் செய்து முடித்து விடலாம்.

விபர புத்தகம் இனாம். —:—:— இன்றே எழுதுக.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குத் தகுந்த குக்கர்களின் விலை ரூ. 11, 15, 20, 27, 33, 40, 46.

ருக்மணி குக்கர் கம்பெனி,
ராயபுரம் (12) சென்னை.

ஏஜண்டுகள் :

கடலூர்:—ஆர். மீனாக்ஷி சுந்தரம்செட்டியார், மளிகை & சோடா பாக்டரி, திருப்பாப்புலியூர்.
சிதம்பரம்:—C. அனந்தபத்மநாப செட்டியார், மேற்கு வாயில் வீதி.
மாயவரம்:—டீச்சர்ஸ் & பியூபில்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டி, முனிசிபல் ஹைஸ்கூல்.
கும்பகோணம்:—சுதேசி ஸ்டோர்ஸ் லிமிடெட், பெரிய கடைவீதி.
திருச்சி:—எஸ். முத்துக்குமாரசாமிப் பிள்ளை, ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ், தெப்பகுளம்.
தஞ்சாவூர்:—பெனாரிஸ் சில்க் ஸ்டோர்ஸ், கிழக்கு ராஜவீதி.
நாகப்பட்டணம்:—என். வீரப்ப செட்டி சன் & பிரதர்ஸ், ஜெனரல் மர்ச்சண்ட்.

BLACK LOCK& MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். செந்தூரத்தில் “மான் மார்க்” செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

ஆரோக்யத்தை அளிக்கும்.

குழந்தையின் குடல் மிருதுவானது. பா—பா வாடர் மிருதுவாகவும், பூராவும் வேலை செய்கின்றது. குழந்தைகளுக்கு இதைக் கொடுத்து ஆரோக்யத்துடனிருக்கச் செய்யுங்கள்.

எங்கும் விற்கப்படுவது.

Ba-Ba-Water

குழந்தைகளுக்கு அமிர்தம்.

பா - பா வாடர் மான்யுபாக்சரிங் கம்பெனி,
ஹைதராபாத், :: :: (தக்காணம்)

B W 4.

“சுதேசமித்திரன்”
வாரப் பதிப்பு ★ 22 - 3 - 1942

சென்ற வார நிகழ்ச்சிகள்

இந்திய மக்களுக்கு வைஸ்ராய் செய்தி

இந்திய மக்களுக்கு வைஸ்ராய் ஒரு செய்தி விடுத்திருக்கிறார். அவர் அதில் குறிப்பிட்டிருப்பதாவது:—

இந்நாட்டில் வசிப்பவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்தக் கக்ஷியையும், எந்த மதத்தையும், வகுப்பையும் சேர்ந்தவராயினும் சரி. நான் இச்செய்தியை விடுக்கிறேன். இன்னும் சில வாரங்களில் யுத்த முனையில் குதிக்கும்படி நீங்கள் அழைக்கப்படலாம். நாம் வசித்து வரும் நாட்டை இப்பொழுது அபாயம் அணுகி இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் செயல்புரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. வேற்றுமைகளையெல்லாம் ஒழித்து, ஒன்றுபட்டு ஆக்கிரமிப்பை எதிர்க்கவேண்டும். இந்தியச் சிப்பாய்கள் உலகின் பல பாகங்களிலும் தங்கள் தாய்நாட்டின் பாதுகாப்புக்காகப் போராடி வருகின்றனர்.

இன்று நாம் ஒவ்வொருவரும் சிப்பாயாக இருக்கக்கூடும். நிமிர்ந்து நில்லுங்கள்; தீரருக்கு ஆதரவளியுங்கள்: மனோ தைர்யமிலலாதவர்களுக்குத் தைர்யமூட்டுங்கள். துரோகிகளை ஒழியுங்கள்: நாட்டைப் பாதுகாக்க முந்துங்கள்; வெற்றியில்லாமல் சுதந்திர ஸ்தாபனங்கள் வாழ முடியாது; கலையும் ஓங்க முடியாது; அன்பும் தழைக்க இயலாது.

சீனா ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய பலருடன் நாம் சேர்ந்திருக்கிறோம். நாம் அனைவரும் நாட்டுக்கான கடமையை ஆற்றுவோம். அப்பொழுதுதான் நமக்கு வெற்றி துதரிமாகக் கிட்டும். உங்கள் தீரத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு.

* * * *

மகாத்மாஜியின் யோசனை

மகாத்மா ‘ஹரிஜன்’ பத்திரிகையில் நகர வாசிகள் வெளியேறுவதைப்பற்றி ஒரு வியாசம் எழுதியுள்ளார். நகரங்களிலிருந்து வெளியேறுவோர் கிராமங்களில் செய்ய வேண்டிய வேலைகளையும் அவர் விவரித்திருக்கிறார்.

“நகரில் அவசியமில்லாதவர்களும், வெடிகுண்டெறியப் பட்டால் நகரில் தங்க எண்ணமில்லாதவர்களும், இப்போதே வெளியேறி விடலாம். அவர்கள் தங்கள் விருப்பத்துக்கு விரோதமாக நகரில் தங்கியிருக்க வேண்டியதில்லை என்று நான் சொன்னேன். சண்டையில் கலந்து கொள்ளாதவர்கள் மற்றவர்களுக்கு ஒரு பாரமாக இங்கு இருப்பது கூடாது.

கிராமத்துக்குச் செல்வோர் கிராமவாசிகளின் உணர்ச்சியோடு போகவேண்டும். கூடியவரை அவர்கள் கிராம வாழ்க்கையை நடத்த வேண்டும். நகரிலுள்ள நிலைமையை அவர்கள் அங்கு புகுத்தப் பார்க்கக்கூடாது. அங்கு தற்காலிகமாக அவர்கள் மாளிகைகளைக் கட்டவும் முற்படக்கூடாது. ஊழியம் செய்யும் நோக்கத்துடன் அவர்கள் கிராமங்களுக்குப் போக வேண்டும். அங்குள்ளவர்களின் பொருளாதார நிலையை அறிந்து, அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும், பிச்சை கொடுப்பது போல் அவர்களுக்குப் பணம் கொடுத்துப் பயனில்லை. நிரந்தரமாக அவர்களுக்கு வேலை கொடுத்து உதவ வேண்டும். அதாவது கிராமவாசிகளிடையே அவர்கள் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். கிராமவாசிகளுடன் கலந்து கூட்டுறவு முறையில் சமூக, பொருளாதார முறையில் ராஜீய புனருத்தாரண வேலையைக் கவனிக்க வேண்டும்.

கிராமங்களுக்குச் செல்வோர் முதலில் கொள்ளையைத் தவிர்க்க வழி தேட வேண்டும். அதற்கு அஹிம்ஸா வழியிருக்கிறது. அது விளங்காவிட்டால் கிராம வாசிகளுடன் கலந்து அவர்களுடன் ஆயுதம் தாங்கியே கொள்ளைக்காரர்களையும் திருடர்களையும் சமாளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் காரியங்களில்கூட நாம் பல நாளாகச் சர்க்கார் உதவியை நாடி வருகிறோம். ‘குற்ற பரம்பரையினர்’ என்ற ஜாதியினரையும் நாம் இதுவரை சீர்திருத்தவில்லை. இந்த நெருக்கடியில் சர்க்கார் அதிகமாக ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே நகரிலிருந்து வெளியேறியவர்கள் அஹிம்ஸை முறையிலோ பலாத்கார வழியிலோ அன்றி இரண்டு வழிகளாலுமோ இந்தக் காரியத்தைக் கவனிக்க வேண்டும்.

* * * *

‘வாழ்க்கையும் அரசியலும்’

இம்மாதம் 14-ந்தேதி மாலை மயிலைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் “வாழ்க்கையும் அரசியலும்” என்பது பற்றிப் பேசினார்.

வீட்டிலிருக்கும் விளக்குக்கும் முனிசிபாலிடி விளக்குக்குமுள்ள வித்தியாசந்தான் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசம். மரத்திலுள்ள இலைக்கும் வேருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதோ அந்த சம்பந்தம் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அரசியலுக்குமிருக்கிறது. வேரிலிருந்தே இலை வருவதுபோல் அரசியலிலிருந்துதான் தனி வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது. அரசியல் தானாகவே உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. தனி வாழ்க்கை நடத்த முடியாதென்பதற்காக ஏற்பட்ட ஒரு கூட்டு வாழ்க்கைதான் அரசியல்.

வேறு தேசத்தார் நமது ஆட்சியைக் கைப்பற்றி நமக்கும் ஓரளவு சௌகரியம் செய்து கொடுத்ததால் நாம் அரசியலை மறந்துவிட்டோம். இப்பொழுது இங்கிலீஷ் காரனோடு சண்டை பிடிப்பதுதான் நமக்கு அரசியல் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். மரத்தில் உயர நல்ல பழமிருக்கிறது. அதை நாம் அரசியல் என்று நினைக்கவில்லை அதைப்பறிப்பதற்கு வைத்துக்கொண்டிருக்கும் கோலை அரசியல் என்று நினைக்கிறோம்: தற்சமயம் அது சரிதான். ஆனால் மரம் வேர் எல்லாமே நமக்குச் சொந்தமாகிவிட்டால் அரசியல் என்பதன் அர்த்தம் வேறாகிவிடும்.

அரசியலுக்கு அபத்து உண்டு. அதற்குக் காப்பு வேண்டும். யுத்தம் இப்பொழுது அருகில் வந்துவிட்டதால் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அரசியலுக்கு முள்ள சம்பந்தம் நன்றாக வெளிப்பட்டிருக்கிறது.

இப்பொழுது நமது தேசத்துக்குப் பெரிய அபாயம் வந்துவிட்டது. ஜப்பான் ஒரு பிராகாரம் இரண்டாம் பிராகாரம் என்று தாண்டி மூன்றாம் பிராகாரத்துக்கு வந்துவிட்டான்.

இம்மாதிரி சந்தர்ப்பத்தில் நாமும் மற்றவர்களைப்போல் கௌரவத்துடன் வாழவேண்டுமானால் தேசப் பாதுகாப்பை நாம்தான் செய்துகொள்ள வேண்டும். முன்பு வர்ணாஸ்ரம தர்மத்தின் கீழ் அம்மாதிரி காப்பு இருந்தது. க்ஷத்ரிய ஜாதி என்று ஒரு வகுப்பு ஏற்பட்டிருந்தது. இப்பொழுது அந்த ஜாதியைத் தவிர மற்ற

“இவர்கள் முக்யஸ்தர்கள்”



1. ஜெனரல் டக்ளஸ் மக் ஆர்தர்-பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்க தரைப் படைகளுக்கும் விமானப் படைகளுக்கும் தலைமைவகிப்பவர். 2. அட்மிரல் கிங், அமெரிக்க கடற் படையின் புதிய தலைவர். இவரிடம் இதற்கு முன்பு எவரிடமும் கொடுக்கப்படாத விசேஷ அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பஸிபிக் மஹா சமுத்திரத்திலும் இவரது அதிகாரம் இருக்கும் 3 ரியர் அட்மிரல் சேஸ்டர் நிமிட்ஸ்-பஸ்பிக் மஹா சமுத்திரத்தில் இருக்கும் அமெரிக்க கடற்படை அதிபதி. 4. ஜெனரல் டிலாஸ் எம்மான்ஸ். ஹவாயில் இருக்கும் அமெரிக்க விமானப் படையின புதிய தலைவர்.

ஜாதிகள்தான் காணப்படுகின்றன.

இப்பொழுது கலவரம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் சாத்விக முறையில் சண்டை பிடிக்கமுடியாது. அதற்கு ஜனங்கள் தயாராயில்லை. அது மிகவும் கஷ்டமான முறை. இப்பொழுது பொறுப்பு ஏற்பது கஷ்டம் தான். பிரசவ சமயத்திலிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அசாத்திய வலி! அபாயம்! படுகிற கஷ்டத்தை நினைத்தால் ஏண்டா இது வந்தது? இப்படியிருக்குமென்று தெரிந்திருந்தால் வேறு விதமாகக் காலந் தள்ளியிருக்கலாமே' என்றுகூடத் தாயார் நினைக்கும் சந்தர்ப்பம். ஆனால் நாம் மாத்திரம் வாழ்ந்தால் போதுமா? குழந்தையில்லாத வீடு எதற்குப் பிரயோசனம்? ஆகையால், தனிப்பட்ட வாழ்க்கைக்கு இன்பம் அளிக்கும் அரசியலை, அதிலுள்ள அபாயமுட்பட நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும. அழகான சந்தோஷம், சுகம் இவை தனி வாழ்க்கையிலுண்டு. இதற்குக் கரடுமுரடான அரசியல் வாழ்க்கை அவசியம்.

* * * *

சென்னை வரவு செலவு திட்டம்

சென்னை ஸர்க்கார் நிர்வாகத்தை கவர்னர் ஏற்ற பின் மூன்ருமுறையாக இப்போது வரவு செலவு திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. சென்ற மூன்று வருஷங்களாக மிகுந்த மிச்சத் தொகை ஏற்பட்டு வருவது இத்திட்டத்தில் ஒரு விசேஷம். 1942-43-ல் ஏற்பட்டுள்ள ரூ. 49-95 லக்ஷம் மிகுதித் தொகையை ஈடு செய்யச் சில புதிய திட்டங்கள் ஏற்கப்பட்டிருக்கின்றன. ஏ. ஆர். பி. வேலைக்கு அதிகப் பணம் செலவிடப்பட்டிருக்கிறது. மோட்டார் வரி மூலம் ஸதல ஸ்தாபனங்களுக்கான விகிதத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாகாணக் கடனைக் கழிக்க அமானத்து நிதியேற்படுத்தப்பட்டிருக்கிறது.

வருமான நிலை திருப்திகரமாக விருப்பினும், இச்சமயத்தில் வரிகளைக் குறைப்பதோ, அல்லது வியாபார வரி முதலியவற்றை யெடுப்பதோ சாத்தியமில்லை யெனக் கூறப்படுகிறது.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

ஹிட்லர் பிரசங்கம்

சென்ற மகாயுத்தத்திலும், இந்த யுத்தத்திலும், உயிரிழந்தவர்களது ஞாபகார்த்தமாக, இம்மாதம் 15-ந்தேதி பெர்லினில் நடந்த பிரார்த்தனையில் ஹிட்லரும் கலந்து கொண்டார்.

பொருட்காட்சி மண்டபத்தில் நடந்த பிரார்த்தனையின் பொழுது ஹிட்லர் பேசுகையில், போரில் உயிரைக் கொடுத்தவர்களின் தியாகத்திற்காகத் தமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

"ஜெர்மன் மக்கள் பல வருஷ காலம் மிக அவமானகரமான, அடிமை வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். ஆனல் இப்போது அவர்கள் தங்கள் சுதந்திரத்தையும், எதிர்கால க்ஷேமத்தையும் முன்னிட்டு தங்களது பழைய எதிரிகளுடன், போராடி வருகின்றனர்" என்று ஹிட்லர் குறிப்பிட்டார்.

"இப்போராட்டங்களில் ஜெர்மன் ராணுவத்தின் சாதனை மகத்தானது தான். ஆனல் அதை, நமது படைகளும் நமது நேச நாடுகளின் படைகளும், செய்தாக வேண்டிய வேலையுடன் ஒப்பிட்டால், அதை வெறும் சாயை என்றே சொல்ல வேண்டும். ஆனல் இனி நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு, எவ்வளவு கடுமையானதாயிருந்தாலும், அது இதுவரை நாம் நிர்வகித்த பொறுப்பைப்போல், அவ்வளவு கடுமையானதாயிராதென்பது நிச்சயம்.

ஜெர்மன் ராணுவம், வீரம் மிகுந்த தனது நேசப்படைகளுடன் சேர்ந்து மீண்டும், மீண்டும் ரஷ்யப் படைகளைத் தாக்கி அழித்து வந்திருக்கின்றது. அழிக்க, அழிக்க புதிய ரஷ்ய துருப்புகள், கூட்டங்கூட்டமாக வந்து குவிந்தவண்ணமாயிருக்கின்றன. நான்கு மாத காலத்தில் நாம் முன்னேறித் தாக்கி ஆக்கிரமித்துக்கொண்ட, பூமியின் விஸ்தீரணம் அபாரமானது. இதற்குசரித்திரத்திலேயே இணை கிடையாது.

ரஷ்யாவில் சென்ற வருஷத்தைப்போல் எப்பொழுதும், குளிர் காலம் இவ்வள்வு முன்னதாகத் துவங்கியதில்லை. விஞ்ஞான சாஸ்திரிகளும் இதை முன் கூட்டிச் சொல்ல முடியவில்லை. குளிர் காலத்தில் இம்முக்கியமான போராட்டத்தின் போக்கை மாற்ற, எதிரிகளுக்கு நான்கு மாத அவகாசம் கிடைத்தது. இதைக்கொண்டு 1812-ல் நெப்போலியனுக்கு ஏறபட்ட கதி, நமது ராணுவத்துக்கும் ஏற்படும்படி செய்துவிடலாமென்று, கிரமலின் தலைவர் (ஸ்டாலின்) நம்பிக்கை கொண்டார்.

ஜெர்மன் படையும் நேசப் படைகளும், மனித சக்தியையும் மிஞ்சிய இந்தப்பெரிய போராட்டத்தை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கின்றன. எதிரிகள் தங்கள் ஸோல்ஜர்களை, இவ்வளவு பெருவாரியாகக் காவு கொடுத்ததால், அவர்களுக்கு ராணுவத்துறையில் உபயோகமுண்டா என்பது இன்னும் சில மாதங்களில் தெரிந்துவிடும். ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம். போல்ஷ்விக் படைகள் வரும் கோடை காலத்தில் அடியோடு நிர்மூலமாக்கப்படும். போல்ஷ்விக் பேயால் ஏற்படவிருக்கும் கொடிய ஆபத்தை இப்போது அனைவரும் உணர்ந்திருக்கின்றனர். அது ஐரோப்பாவின் சமாதானத்தைக் குலைக்க விடுவதில்லையென்றும், அதை வெகு தூரத்தில், அதன் திட்டமான எல்லைக்குள்ளேயே அடைத்து வைப்பதென்றும் நாம் உறுதி கொண்டிருக்கிறோம்.

பர்மா தளபதி

பர்மாவுக்கு புதிய தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் லெப்டணன்ட் ஜனரல் ஸர் அலெக்ஸாண்டர்

இப்போழுது ஒரு புதிய உலகம் அமைக்கப்பட்டுவருகிறது. இக்கண்டத்தில் உண்மையான சுதந்திரம் நிலைக்க ஏற்பாடு நடந்து வருகிறது. இதற்கு ஒரே மார்க்கம் தான் உண்டு. நிரந்தரமாக சமாதானம் நிலைக்குமென்ற உத்தரவாதம் ஏற்படும் வரை—அதாவது அத்தகைய சமாதானத்தின் விரோதிகளை ஒழிக்கும் வரை — யுத்தத்தை நடத்துவதுதான் அவ்வழி. மற்ற தேசங்கள் தங்கள் வாழ்க்கையை வகுத்துக்கொள்ளும் முறை பற்றி ஜெர்மன் மக்கள் சிறிதும் கவலைப்படவில்லை. ஆனல் மற்ற கண்டங்களைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய விஷயங்களில் முக்கியமாக நமது விவகாரங்களில் தலையிட்டால் அதை எதிர்த்து அடியோடு தடுப்போம்.

போல்ஷ்விக் ஆபத்தை வெற்றிகரமாக எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி ஜெர்மனியர்களுக்கு உண்டு, வரும் வருஷம் சென்ற வருஷத்தைவிட, இன்னும் உன்னதமாக இருக்குமென உறுதியாக நம்புகிறோம். போராட்டம் நடக்கும் கால அளவானது, அதன் பலனுக ஏற்படவிருக்கும் மகோன்னதமான சமாதானம் நிலவும் காலத்தைவிட மிகக் குறைவு. அந்த சமாதானம் நமது ஸோல்ஜர்களின் தியாகத்திற்குத் தக்கவாறு, இருக்கும்படி செய்வதே நாஸி சர்க்காரின் எதிர்கால வேலை."

* * * *

கீழ் நாட்டில் ஐரோப்பியர் ஆதிக்கம்

'கனடா மக்களுக்குள்ள சுதந்தரமும் உரிமையும் என் நாட்டு மக்களுக்குப் போதுமானதாக இருக்கும்' என்று ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டி இம்மாதம் 15-ம் தேதி நியூயார்க்கில் தெரிவித்தார்.

ஜப்பானின் புதிய ஏற்பாட்டின் கீழ் கீழ் தேச நாடுகளின் கதி யாதாக இருக்குமென்பதைப் பற்றி இந்தியாவோ சீனவோ எப்பொழுதும் சந்தேகம் கொண்டதில்லையென்றும், ஆனல் ஐக்கிய நாடுகளின அரசியல் வாதிகள் ஜாதி நிற வேறுபாடுகளைக் கொண்ட வித்தியாஸங்கள் இருக்கக் கூடாதென்பதை அறிய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

"ஐரோப்பிய ஜாதியினர்—இதில் நான் அமெரிக்கர்களையும்

(28-ம் பக்கம் பார்க்க)

ஹிட்லர் பிரசங்கம் புரிகிறுர்

சமீபத்தில் பெர்லினில் ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் பிரசங்கம் புரிந்தபோது எடுத்தபடம். பக்கத்தில் டாக்டர் கோபல்ஸ் உட்கார்ந்திருக்கிறுர்.



அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாட்டின் டில்லிக் கிளைச் சங்கக் கூட்டத்தில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சமீபத்தில் பிரசங்கம் புரிந்தார்.

ஸ்திரீகளும் அரசியலும் ★

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் எழுதியது

★

இவ்வாரம் வெளியாகும் பகுதியில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இருபது வருஷங்களுக்கு முன்பிருந்த நிலைமையையும் தற்போது இருந்து வரும் ஸ்திதியையும் எடுத்துக் காட்டியிருக்கிறுர். அவர் முக்கியமாக ஸ்திரீகள் ராஜீயத்தில் பிரவேசித்ததைப் பற்றியே பிரஸ்தாபித்திருக்கிறுர். ஸ்திரீகள் தற்சமயம் அதிகமாக தேச கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பதை, அவர் மஹாத்மாஜி நிறைவேற்றிவைத்த அதிசயம் என்கிறுர். மிகவும் உண்மையானது! மிகவும் பொருத்தமானது! மிகவும் வாஸ்தவமானது! இந்தப்பகுதியில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி தமது அனுபவங்கள் சிலவற்றையும் நம்மிடம் கூறுகிறுர். முதலில் ஸமூக சேவையில் சற்று நாட்டம் காட்டி, பிறகு ராஜீயத்தில் ஸ்திரீகள் ஆர்வத்துடன் புகுந்த வரலாற்றை வெகு ரசமாக ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி விவரித்திருக்கிறுர்.

★

ஸமூக சேவையில் நாட்டம்

இருபது வருஷங்களுக்கு முன்னர் இந்திய ஸ்திரீகளுக்கு ராஜீய விழிப்பு ஏற்படவில்லை. படித்த பெண்டிரும் குடும்பத்திலேயே அக்கரை காட்டி வந்தனர்: தமது க்ருஹங்களை விட்டு வெளிக்கிளம்பி சேவை செய்யவேண்டும் என்ற அவா அவர்களது உள்ளத்தில் அதிகரித்த பிறகு தான், அவர்கள் சமூக சேவையில் சற்று ஈடுபடலாயினர்.

ஸ்திரீகளின் ஊழியம்

மஹாத்மா காந்தி 1930-ம் வருஷம் தண்டியில் உப்பு சத்யாக்ரஹத்தை ஆரம்பித்தபோது, அவர் ஸ்திரீகளும் தங்களது வீடுகளில் அடைபட்டிராமல், புதிய இயக்கத்தில் புருஷர்களுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும் என முறையிட்டார். இதற்கப்புறம் ஏற்பட்ட நிலைமையை, அது காந்திஜி நிறைவேற்றி வைத்த அத்புதம் என்று தான் குறிப்பிடவேண்டும். நாட்டின் நாறு பக்கங்களிலிருந்தும், ஒரு நூற்றுண்டாகவே தாங்கள் அநுசரித்து வந்த சம்பிரதாயங்களை உதறி எறிந்து, சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர, ஸ்திரீகள் முன்வந்தனர். 2000 ஸ்திரீகளுக்கு மேலாகவே சிறைவாசத்தை வரித்தனர். தீர்ப்பை தயக்கமின்றி ஏற்றுக் கொண்டனர்: ஆறு வாரம் முதல் இரண்டு வருஷம் வரை காராக்கிரஹ வாசத்தை அனுபவித்தனர்: கண்டவர் வியக்கத்தக்க விதத்தில் திருப்தியுடனும், திடமனதுடனும் தண்டனையைத் தாங்கி நின்றனர்: சிறைபுகாத அநேகரும் அந்த சோதனைக் காலத்தில் நல்லுதவி புரிந்தனர். இந்த இயக்கம் வலுத்திருந்தபோது கைதியான புருஷர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போயிற்று: இந்த சமயம் ஸ்திரீகள் புருஷர்களது வேலையை ஸ்வீகரித்து, ஆச்சர்யகரமான சகிப்புத் தன்மையைக் காட்டியதுடன், தங்களது பிரமிக்கத்தக்க ஒழுங்கு முறைகளையும், திறமையையும், ஊக்கத்தையும் நிரூபித்தனர். தற்சமயம் இந்திய ஸ்திரீகள் ராஜீய வாழ்வில் போராடக் கிளம்பியிருக்கின்றனர்: நிலைமையில் ஏற்பட்டிருக்கும் இந்த மாறுதலை உணர, பூர்வீக வரலாற்றையும் விசாரிக்க வேண்டியதவசியமாகிறது.

ஒரு கட்டுக்கதை

வீட்டில் தன்னந்தனியாக விடப்பட்டு, வெளி விவகாரத்தைப்பற்றிய அறிவே இல்லாதபடி வளர்க்கப்பட்டு வந்திருப்பது தான், இந்திய ஸ்திரீகள் சகோசத்துடனும், பிறருடன் சேர்ந்து பழக பிரியமில்லாமலும் இருப்பதற்குக் காரணமாகும். இந்த காலத்தில் தான் கல்விக்கு பிரதானம் கொடுக்கப்பட்டது. அநேகம் சிறுமிகள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படலாயினர்: இவர்களில் சிலர் பள்ளிக்கூடத்தை விட்ட பின்பு கலாசாலையிலும் சேர்ந்து கொண்டனர். ஆரம்ப பள்ளிக்கூட உபாத்தியாயினிகளாக விருந்து சொந்தத்தில் சம்பாதிக்கவும் சில ஸ்திரீகள் முற்பட்டனர். ஆயினும் வீட்டிலும் வெளியிலும் ஸ்திரீகளது நிலைமை பழையபடியே தான் இருந்தது. சிறிதளவு சுதந்திரம் வழங்கப்பட்டது: கருத்தைக் கூறவும் தடை இருந்தது. "பூர்தா" வழக்கமும், மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பாதகமான பல பழக்கங்களும் இருந்தபோதிலும், வீட்டில் ஸ்திரீகள் இட்டதுதான் சட்டம் என்றபடி யெல்லாம் கட்டுக்கதை பரவியிருந்தது.

என் கருத்து

இந்தக் கதையை நிர்த்தாரணம் பண்ண அநேகம் அத்தாக்ஷிகள் எடுத்து காட்டப்பட்டிருக்கின்றன: ஒவ்வொரு குடும்பத்திலும் வயது முதிர்ந்த ஸ்திரீயிடம் தான் உண்மையான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்க சரித்திர பூர்வமான ஆதாரங்களையும் தேடிப்பிடித்திருக்கின்றனர். இதெல்லாம் முழுத்தப்பு என்பது என் அபிப்பிராயம். வெளிக்கு படித்தவர்களாயினும், நீண்டகால சம்பிரதாயங்களையும் பழைய குருட்டு வழக்கங்களையும் புறக்கணிக்க சக்தியற்ற புருஷர்களின் வாதம் இது என்பது தான் என் கருத்து.

காரியார்த்தமான பேச்சு

சில வருஷங்களுக்கு முன்பு கூட, 14-வயது நிரம்பிய தமது புத்திரிக்கு விவாகத்தை நடத்தி வைக்கும் புருஷர்கள், இந்த விவாகத்தை நடத்தும்படி தங்கள் தாய்மார் நிர்ப்பந்தித்ததாகவும், தாம் முற்போக்கான அபிப்பிராயத்தைக் கொண்டபோதிலும், குடும்பத்தில் தலைமை வகிக்கும் அவர்களை அலக்ஷியம் செய்ய முடிவதில்லை என்றும் கூறிவந்ததுண்டு. இது மிகவும் சகஜமாக இருந்தது. அவர்களது காரியங்களிலோ அல்லது கடமைகளிலோ அவர்களது தாய்மார் குறுக்கிட்டது கிடையாது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும். கோழை மனமுள்ள பலர், விபரீதமான நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு, தம் தாயாரோ அல்லது தம் மனைவியோ கூறியதாகச் சொல்லித் தப்புகின்றனர். பிரஸ்தாபிக்கப் படுபவர் உண்மையில் இருப்பதில்லை. அது அவ்வளவும் காரியார்த்தமான பொய்ப்பேச்சு!

மஹாத்மாவின் சக்தி

இவ்வாறு அடிக்கடி சொல்லிக்கொண்டே போனதால் இதைக் கேள்விப்பட்ட ஸ்திரீகள், தங்கள் வீடுகளில் தாங்கள் அடிமைகளாகவிருந்தபோதிலும், ஏதோ தாங்கள் கோரும் உரிமை பூராவும் தங்களுக்கிருப்பதாகவே எண்ணலாயினர்: . சென்ற நூறு வருஷங்களாக சமூகச் சீர்திருத்தம் சம்பந்தமாக அதிக சேவை செய்யப்பட்டு வந்த போதிலும், சமூகத்தில் அடிமைகள் என பாவிக்கப்படுவதாக ஸ்திரீகள் நினைக்கமாட்டோம் என்கிறார்கள்: தங்களது ஸ்திதியை உணர்ந்து, உயர் நிலையை அடைய அவர்கள் ஆசைப்பட்டால் தான், சமூகத்திலும் ராஜீயத்திலும் அவர்கள் முன்னேற முடியும். சமூகச் சீர்திருத்தக்காரர்களுக்கு எதை சாதித்து வைக்க சக்தியில்லையோ, அதை காந்திஜி மந்திரத்தால் போல் என்று நினைக்கும் விதமாக, நிறைவேற்றி வைத்திருக்கிறார்.

முன்பிருந்த ஸ்திதி

இந்த காங்கிரஸ் இயக்கம் தோன்றிய நாளில், சாதாரண நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள், தேச சுதந்திரத்தையோ அல்லது சொந்த சுதந்திரத்தைப்பற்றியோ செய்யப்படும் பிரசங்கங்களை கேட்கவும் பிரியப்பட்டதில்லை. கண்ணியமும் கௌரவமும் மிகுந்த ஒருத்தியிடம் போய், தேசத்திற்கு முக்கியமான விஷயங்களில் சிரத்தை கொள்ளும்படி நான் கோரிய போது அவருக்கு வந்த கோபத்திற்கு எல்லையே இல்லை. "நான் ஏன் என் வீட்டை விட்டு ராஜீய வேலையில் ஈடுபடவேண்டும்? என் பார்த்தாவுக்கு சிச்ருஷை பண்ணி, புத்ர பாக்யம் பெறுவதல்லவா என் கடமை! தேச சுதந்திரத்தைப்பற்றி நான் ஏன் வீண் கவலைப்பட வேண்டும்?" என்று கேட்டார் அவர் என்னிடம். தனக்காவது கொஞ்சம் சுதந்திரம் பெற விரும்பக்கூடாதா என்று நான் கூறியதும் எனக்கெதிராகவே முடிந்தது. "ஒரு கௌரவமான ஸ்திரீக்கு எந்த அளவு சுதந்திரம் அவசியமோ அவ்வளவும் எனக்கிருக்கிறது. தங்கள் வீடுகளை விட்டு கிளம்பிய உங்களைப்போன்ற ஸ்திரீகள் தான் சுதந்திரத்தைப்பற்றி பேசுகின்றனர்" என்றார் அவர். நான் என் வீட்டைத் துறக்கவில்லை என்றும், என் கணவரின் யோக க்ஷேமத்திலும் என் குழந்தைகளின் சௌக்யத்திலும் எனக்கிருக்கும் சிரத்தை அவருக்கிருப்பதைவிட குறைந்ததல்ல என்றும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. அவர் விட்டுக் கொடுக்கவே இல்லை! காந்திஜி தலைமை யேற்பதற்கு முன் என்னுடைய ஐக்ய மாகாணத்தில் இத்தகைய நிலைமை நிலவி வந்தது.

சிறைவாசம் ஏற்றது

மகாத்மா காந்தி முன் வந்ததும், அவருக்கு எதிர்பாராதபடி ஆதரவு கிடைத்தது: எதிர்ப்பும் ஒருவித உபத்திரவமுமின்றி மறைந்தது. 1926-ம் வருஷம் என்னை ஆக்ஷேபித்த அந்த ஸ்திரீயும், 1932-ம் வருஷத்தில் தாம் பூர்ணகர்ப்பிணியாயிருந்தபோதும் போராடப் புறப்பட்டார். தேசசேவிகை படையில் சேர தாமாகவே முன் வந்தார்: அவர் சிறை வாசத்தையும் அடைந்தார்: சிறையில் ஒரு குழந்தை (நான்காவது என்று என் ஞாபகம்) அவருக்குப் பிறந்தது, ஒரு உத்தமி சிறையிலிருந்த போதிலும் குடும்பத்தைக் கவனிக்கிறாள் என்பதற்கு இது அத்தாக்ஷியல்லவா!

புதிய உணர்ச்சி உதயம்

சட்ட மறுப்பு இயக்கம் நின்றதும், அதில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்ட பல ஸ்திரீகள் மேற்கொண்டு என்ன செய்வது என்று திகைத்தனர், தங்கள் வீடுகளில் சோம்பேறித்தனமாகக் காலத்தைக் கழிக்க அவர்கள் விரும்பவில்லை, இந்த இயக்கம் நடந்த காலத்தில் அவர்கள் அநேகருடன் தொடர்பு கொண்டனர்: பல புதிய கருத்துகளைக் கண்டறிந்தனர்: உள்ளத்தில் உதயமான புதிய உணர்ச்சி உருப்பெறுவதற்கு குடும்ப வேலை தவிர, இதர காரியங்களையும் செய்ய அவர்கள் எதிர்பார்த்தனர்: பின்பு வாழ்க்கையிலேயே ஒருவித அத்ருப்தி தட்டலாயிற்று. வித்யாப்யாஸம் பெறாத ஸ்திரீகள் பலர் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் சேர்ந்துகொண்டனர்: இவர்களுள் அநேகர் தங்களது பெண்களுடன் உட்கார்ந்து படித்தனர், அவர்கள் பலதரப்பட்ட சமூக சேவையில் ஈடுபட்டனர்: அவர்களில் பெரும்பான்மையோர் நாட்டில் தோன்றிய புது இயக்கத்தில் சேர்ந்து மும்முரமாக சேவை செய்த பின்பு சமூக சேவையை சர்வ சாதாரணமாகக் கருதினர்: ராஜீயத் துறையில் இறங்க ஆவல் கொண்டனர்.

ஸ்தல ஸ்தாபனங்களில்

நல்ல வித்யாப்யாஸம் வாய்ந்த ஸ்திரீகள் சில வருஷங்கள் நகர சபைகளில் நியமன அங்கத்தினர்களாகவும் பதவி வகித்தனர்: ஆனல் 1935-ம் வருஷம் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற காங்கிரஸ் தீர்மானித்தபோது, காங்கிரஸ் கட்சியையும் மற்றும் இதர கட்சிகளையும் சேர்ந்த ஸ்திரீகள் பலர் போட்டியிட்டனர்: இப்பால் ஸ்தல ஸ்தாபனங்களில் திறமையுடன் அவர்கள் ஸ்தானம் வகித்தனர்.

(தொடரும்)

Vijaya Lakshmi Pandit

அடுத்த பகுதியில் ஸ்ரீமதி பண்டிட் இந்தியாவில் நடந்த பொதுத்தேர்தலைப் பற்றியும், அதற்குத் தாம் போட்டியிட்டதைப்பற்றியும், தேசத்தில் ஏற்பட்ட உணர்ச்சியைப் பற்றியும், விரிவாகப் பிரஸ்தாபித்திருக்கிறார். ஸ்திரீகளும் தங்கள் கடமையை உணர்ந்து நடந்துகொண்டால் தான் நாடு நலம் பெறும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

FREE

ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against -/5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed

LONDON COMMERCIAL CO.
P. B. 165 (S. M. M.) LAHORE (INDIA)

(E. A. B.)

கவியும் கற்பனையும்

★

சுதர்சன்
எழுதியது
★
"சர்மா"
மொழிபெயர்த்தது
★

ராஜா ஹர்ஷன் கீர்த்தி வாய்ந்த கவி. ஒரு நாள் ராஜ சபைக்கு ஒரு சந்யாசி வந்தார்: தன் மகளுக்கு கவிதை கற்பனை செய்வதைக் கற்றுக் கொடுக்கும்படி ராஜன் அவரைக் கேட்டுக்கொண்டார். நான்கு மாதங்கள் கழிந்தன: உஷா எழுதிய கவிதை ஹர்ஷன் முன் படிக்கப் பட்டது: அதில் கிடந்த காதல் ரஸத்தை அவள் எப்படி பிம்பிக்க முடியும் என்றன் மன்னவன்: முடியும் என்பதை சந்யாசி நிரூபித்தார்: கவியின் சக்தியைப் புலப்படுத்தினர்: இந்தக் கதை மிகவும் ரஸமானது.

★

உலகப் பிரசித்தி பெற்ற கவிகளோடு சேர்த்து எண்ணக்கூடியவன் ராஜா ஹர்ஷன். பாரத நாட்டில் சந்திர சூரியர்களுடன் ஹர்ஷனும் இருந்து கொண்டு தான் இருப்பான். அவனுடைய காவிய கற்பனையைக் கண்டு ஜனங்கள் இன்றும் பிரமிக்கின்றனர். அவனுடைய வாழ் நாளில் பெரும் பகுதி காவியங்கள் இயற்றுவதிலேயே கழிந்தது. அவன் கவிதையிடம் கொண்டிருந்த அளவுக்கு ராஜ்யத்தினிடம் பற்றுதல் கொண்டிருந்தது கிடையாது. "என்னுடைய உண்மையான ராஜ்யம் அதுதான். அதில் தான் நான் சிந்தனை ராஜ்ய பாரம் நடத்துகிறேன் இந்த ராஜ்யத்தை ஒருவர் பிடுங்கிக்கொள்ளக்கூடும். இது மாறக் கூடும். ஆனல் கவிதா ராஜ்யத்தில் ஒருவரும் தலையிட முடியாது. மரணத்தின் விரல்களும் அதைத் தீண்ட முடியாது" என்று ஹர்ஷன் அடிக்கடி சொல்வதுண்டு. அரசன் தன்னுடைய சிந்தனையிலேயே மூழ்கியவனய், சூரிய சந்திரர், ஜீவன் ஜோதி, காதல் யௌவனம் இவை எந்நாளும் குன்றாத அமர உலகைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தான்.

ஒரு நாள் அரசன் நந்தவனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தான். மாலைநேரம். மேற்கு திசையில் மறையும் சூரியனின் பொற்கிரணங்கள், ரோஜா மலர்களிடம் விடைபெற்றுக்கொண்டிருந்தன. ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தோழி வீட்டிலிருந்து, விடைபெற்றுச் செல்லும் போது, அவர்களுடைய குழந்தைக்கு ஏதாவது கொடுத்துவிட்டுப் போகவேண்டியது அவசியம் என்று நினைப்பதைப்போல், இயற்கையன்னையின் இந்த இரு குழந்தைகளும் தங்கள் ஈகையை வெளியிட்டுக் கொண்டிருந்தன. பூஞ்சோலைப் பெண் தன் தோழிகளின் பிரிவாற்றுமையால் வருத்தமடையலானுள். அவளுடைய அன்பு தேங்கும் அழகிய முகத்தில் துக்கத்தின் ஆழ்ந்த சாயை படிந்து கொண்டிருந்தது. ராஜா ஹர்ஷன் இயற்கையின் இந்த பாவ நாடகத்தைப் பார்த்து அதை எழுதிக் கொண்டிருந்தான்.

திடீரென்று அரசனின் அழகிய மகள் உஷா அவன் எதிரே வந்து நின்றுள். மாலை இருளில் காலை இளங்கதிர் தோன்றியதைப் போல் இருந்தது. அரசன் வேறு உலகத்தில் இருந்தான். எந்த மந்திரியோ தேசத்தின் பெரிதினும் பெரிய சம்பவங்களோ அவனுடைய இந்த ஆனந்த வனத்தில் கால் எடுத்து வைக்க முடியாது, இது அவனுடைய அரசாங்க ஆணை. ஆனல் அன்புக்கு அரசாங்க வாசலும் திறந்து விடுகிறது. அது எங்கும் போகும் தன்மையுடையது. அரசன் கோபத்துடன் தலை நிமிர்ந்தான். ஆனல் ராஜகுமாரியைக் கண்டதும், அவன் கோபமெல்லாம் புன்னகையாக மாறிவிட்டது.

உஷா, கவி ராஜனுன தன் தந்தையை அன்பு பொங்கும் கண்களுடன் நோக்கி ஒரு இனிய புன்னகையுடன் "நான் கடைசியில் உங்களிடம் வந்து விட்டேனே! நான் அரண்மனையில் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினேன். சங்கீத மண்டபத்தில் தேடினேன், சித்திரசாலையில் பார்த்தேன். ஆனல் நீங்கள்......"

சட்டென்று அரசன் கையிலிருந்த போஜ பத்திரத்தைப் பார்த்தாள், சங்கோசத்துடன் தலை குனிந்து கொண்டாள். தான் தவறு செய்து விட்டோம் என்று அவளுக்கு விளங்கியது அவள் வணக்கத்துடன் அரசனை நோக்கி "அப்பா! எனக்குத் தெரியாது......!" என்றுள்.

அரசன் அவளுடைய இந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவளுடைய வார்த்தையைப் பூர்த்தி செய்யவும் விடவில்லை. அவர் எழுந்திருந்து அவளருகே வந்தார். தந்தை அன்புடன் நடுங்கும் கைகளை அவள் சிரத்தில் வைத்து "கண்ணே! உஷா! இந்தச் சூரியனின் பக்கம் சற்றுப் பார்! அவன் தன் கிரணங்களைச் சுருட்டிக்கொண்டு கறும் போர்வையால் முகம் மூடிக்கொள்கிருன். அவனுடைய கிரணங்கள் மலர்களின் சிரங்களை கையால் வருடிக்கொண்டிருக்கின்றன. நான் உன் தலையை வருடிக்கொண்டிருப்பதைப் போல, என்னுடைய தர்பாரில் இருக்கும் கவிகூட என்னுடைய பாவத்தை அறியமுடியாது. சப்தங்களில் அழகைக் காணும் அந்தக் கண்கள் அவனுக்கு இல்லை, ஆனல் என்னுடைய சொற்களைப் பூராவும் நீ நன்கு அறிந்துகொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நீ என் மகள். உன் மனம் என் மனத்தினல் பண்பட்டது!" என்றுன்.

அரசன் கவிதையைப் படித்தான். ராஜகுமாரி கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் ஜ்வலித்தன. இதழ்களில் மலர்ந்த புன்னகையால் தன் கவிதையை மகள் பாவ பூரணமாக ரஸிக்கிருள் என்ற நம்பிக்கை அரசனுக்கு ஏற்பட்டது.

இதன் பிறகு தந்தையும் மகளும் மாலை இருளில் அரண்மனையை நோக்கி நடந்தனர். உஷாவும் தந்தையுடன் ஓடி அவன் பாதையில் செல்ல வேண்டுமென்ற பிரயத்தனத்துடன் குழந்தை யுள்ளத்தோடு "அப்பா! நான்கூடக் கவிதை எழுதக் கற்றுக்கொள்ளுகிறேன்!" என்றுள்.

தன் மகள் சொன்ன எதையும் அரசன் இதுவரை தட்டியதே இல்லை. இவளுக்கு யார் கவிதை புனையக் கற்றுக் கொடுப்பார்கள்? இவள் யௌவன மங்கை. அழகி. கவிதையின் புனிதமான சேர்க்கை நதிகளைப் பெருக்கும் கவிகள் கூட சாதாரண இன்பங்களின் ஆசை கொண்டு விடுகின்றனர். இந்த மாதிரியான விஷயங்கள் கவிசிரேஷ்டனுன அரசனுக்கு விளங்காமல் இல்லை. அவன்யோசிக்கலானுன்.

2

மழைக் காலம். வானத்தில் கறுமேகம் கூடிக் கிடந்தது. ஏழைகளின் உள்ளத்தில் நம்பிக்கை கூடிக் கிடப்பதைப் போல இந்த நம்பிக்கை மேகம் சில சமயம் மழை பெய்யும், சில சமயம் காற்றில் சிதறுண்டு விடும். ராஜா ஹர்ஷன் தர்பாரில் ஒரு அழகிய வாலிப தண்டி சந்யாசி வந்தான். அவன் அரசனிடம் "அரசே! நாங்கள் மூன்று தினங்களுக்குமேல் எங்கும் தங்குவதில்லை. ஆனல் இப்பொழுது வர்ஷ ருது ஆரம்பமாகிவிட்டது. இனி நாம் யாத்ரைசெய்ய முடியாது. நாம் இந்த மழைகாலம் நான்கு மாதமும் எங்காவது தங்க விரும்புகிறேம். நீங்கள் எனக்கு ஏதாவது ஏற்பாடு செய்யமுடியுமா?" என்று கேட்டான்.

அரசன் வாலிப சந்யாசியின் கால்களைத்தொட்டு நமஸ்கரித்தான். "ஸ்வாமின்! நானும் எனது ராஜ்யமும் உங்கள் போன்றவர்சேவைக்காகவே காத்துக்கொண்டிருக்கிறேம். மானஸரோவரில் இருக்கும் ராஜஹம்சத்தை கூட்டில் அடைத்துச் சந்தோஷமாக வைக்கமுடியாது. ஆயினும் என்னல் செய்யக்கூடிய சகல ஏற்பாடுகளையும் செய்து உங்களுக்குக் கஷ்டமில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்றுன்.

சந்யாசி கையைத் தூக்கி அரசனை ஆசீர்வதித்து "கடவுள் உனக்கு நன்மை செய்யட்டும்!" என்றுர்.

சந்யாசிக்கு அரண்மனையில் இடம் கிடைத்தது. அவன் அங்கே மழை காலத்தைக் கழிக்கலானுன். ஹர்ஷன் இடை இடையே சந்யாசியிடம் வந்து போவது வழக்கம். சிறிது சிறிதாக சந்யாசியின் நல்ல குணங்கள் அவனுக்குப் புலப்பட்டன. அவன் வெறும் சந்யாசியல்ல, சிறந்த சித்திரக்காரன். நல்ல கவி, என்பதும் விளங்கியது. இது மாத்திரம் அல்ல. அவன் சகல வித்தைகளிலும் தேர்ந்திருந்தான். அவன் எந்த விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தாலும் ஹர்ஷன் அவன் வாயைப் பார்த்துக் கொண்டிருப்பான். இந்தச் சிறு வயதில் இவ்வளவு சாமர்த்தியமும் ஞானமும் உள்ளவனை அரசன் கண்டதே இல்லை. அந்த வாலிப சந்யாசியின் மலர்ந்த முகம். அதில் நீலத் தடாகம் போல் சாந்தமான விழிகள். உலகம் இம்மாதிரி அழகைச் சிலரிடம்தான் கண்டிருக்கும். ராஜா ஹர்ஷன் சந்யாசியைச் சந்திக்கும் போதெல்லாம் அவனிடம் மதிப்பும் அன்பும் அதிகரித்தது: அவன் அந்த வாலிப சந்நியாசியைப் பலவிதப்பரீக்ஷைகள் செய்து பார்த்தான். ஆனல் சந்யாசி ஒவ்வொன்றிலும் தேறிவிட்டான். மனிதர்களிடம் குற்றங்குறைகள் இருக்கலாம், சந்யாசியிடம் ஒன்றும் இல்லை. ஒரு நாள் அரசன் வணக்கத்துடன் "ஸ்வாமி! ராஜகுமாரி கவிதை புனையக் கற்றுக் கொள்ள விரும்புகிருள். நான் எவ்வளவோ தேடினேன். ஆனல் நம்பிக்கையுள்ள ஒருவரும் கிடைக்கவில்லை." என்றுன்.

சந்யாசி பாதி வார்த்தைகள் முடியு முன்பே விஷயத்தை அறிந்து கொண்டான். சங்கோசமில்லால் "நாம் இங்கிருக்கும் வரை சொல்லிக் கொடுக்கிறேம்!" என்றுர்.

அரசனின் மனேரதம் பூர்த்தியாயிற்று: ராஜகுமாரி கவிதை கற்றுக் கொள்ளலானுள்.

3

நான்குமாதங்களுக்குப்பிறகு அரசன் சங்யாசியிடம் "ராஜகுமாரி உஷா என்னென்ன கற்றுக்கொண்டிருக்கிருள்?" என்று கேட்டான்.

சங்யாசி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன் விழிகளால் அரசனை ஒருதரம் பார்த்துவிட்டு புன்னகையுடன் "கவியின் பெண் அல்லவா! வெகு விஷயங்களைக் கற்றுக்கொண்டுவிட்டாள். இவ்வளவு குறுகிய காலத்திறகுள் வேறு ஒருவரும் இவ்வளவு கற்றுக் கொள்ள முடியாது. ஆனால் ராஜகுமாரியின் கவிதையைக்கண்டு நானே திகைத்துவிட்டேன்!" என்ருர்.

அரசனுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது." நாலுமாதத்திலேயே?" என்று கேட்டான்.

"அரசே! கவி கற்றுக்கொள்பவனல்ல. கவி கவியாகவே பிறக்கிருன். நெருப்புப்பொறிகள் சாம்பலுக்குள் மறைந்திருக்கிறது. கவிதைக்கலை கல்வியில் மறைந்திருக்கிறது. குருவின் வேலை சிறிது தான். அந்தச் சாம்பலைக்கிளறி கவிதைக் கனலைத் தூண்டிவிட வேண்டியது தான். நெருப்பு தானே எரிய ஆரம்பித்துவிடும். இதற்காக முயற்சி செய்யவேண்டிய அவசியமே இல்லை. காற்றின் வீச்சே அதற்கு நெய் ஆஹுதி செய்ததைப்போல் ராஜகுமாரியிடம் இந்தச் சங்கதிகள் முன்பே இருந்தன. நாம் அதைத் தட்டி எழுப்பினேம்: இப்பொழுது அழகான சொற்ருெடர்களுடன் பாவம் நிறைந்த கவிதை புனேயும் வித்தையில் சாமர்த்தியமுள்ளவளாகி விட்டாள்!" என்ருர்.

அரசன் சந்தோஷத்தோடும் பெருமையோடும் ஆச்சரியத்தோடும் தன் மகளை நோக்கினுன். அவள் பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உஷா!"

உஷா தலை நிமிர்ந்து தந்தையின் முகத்தைப் பார்த்து விட்டு வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

"உன்னுடைய கவிதைகளில் ஏதாவதொன்றை வாசி. வாசிக்கிருயா?"

ராஜ குமாரி முன் போலவே தரையைப் பார்த்துக் கொண்டே ஜாடையினுல் "இல்லை!" என்ருள்.

"ஏன்?"

ராஜகுமாரி பதில் சொல்லவில்லை.

"சொல் அம்மா! ஏதாவது ஒரு நல்ல கவிதையைச் சொல்!"

உஷா தலையில் இருந்த புடவையை முகம் வரை இழுத்து விட்டுக் கொண்டு மெதுவாக அப்பாவுக்குப் பிடிக்காது!" என்ருள்.

சங்யாசியால் சும்மா இருக்க முடியவில்லை. "உஷாதேவி! இது உன்னுடைய பரீக்ஷை மாத்திரம் அல்ல. என் பரீக்ஷையும் கூட. குருவின் படிப்புக்கு கண்யம் வைக்க வேண்டும்!" என்ருர்.

உஷா தன் கவிதையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். ஆனல் என்ன செய்வதென்று அவளால் நிச்சயம்செய்ய முடியவில்லை. சங்கடத்துடன் "எதைச் சொல்வேன்?" என்ருள்

"எதையாவது படி. கற்கண்டு எந்தப்பக்கத்திலும்தித்திக்கும்!"

அவள் சொல்ல விரும்பினுள். ஆனல் நா எழவில்லை. அரசன் சங்யாசியிடம் "நீங்களே படியுங்கள்!" என்றுன்.

சங்யாசி கவிதையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

"கவிதைக்குக் கவியிடம் உள்ள சம்பந்தம் புதிதாய் மணந்த பெண்ணுக்குத் தன் கணவனிடம் உள்ள சம்பந்தத்தைப் போன்றதாகும். கணவன் மனைவியைத் தொடப் பிடிக்க, அவளை ஆலிங்கனம் செய்ய விரும்புகிருன். ஆனல் புது மணப் பெண் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு ஓர் புறம் ஓடுகிருள். கவிதைக்கும் இதே நிலைமைதான், அது சில சமயம் கவியின்முன் கட்டளையை நிறைவேற்றும் வேலைக்காரனைப் போல் தலை குனிந்து நிற்கிறது. சில சமயம் அவன் பக்கம் பார்த்து பயமற்ற சிறுவனைப்போல் நகைக்கிறது. சில சமயம் வெட்கத்தினுல் முகம் கவிழ்கிறது: கவி அதனருகே செல்லும் போது மிரட்சி கொண்டு மானைப்போல் துள்ளி ஓடி விடுகிறது. இரண்டொரு வார்த்தைகள் பேசினுலே தலை குனிந்து கொள்ளுகிறது. சில சமயம் சங்கோசமில்லாமல் தன் கைகளையும் அவன் கழுத்தில் போட்டுக் கொள்ளுகிறது" என்று முடித்தார்.

'ஆஹா ராஜகுமாரியின் இந்தக் கவிதை எவ்வளவு அழகாக இருக்கிறது: எவ்வளவு பாவம் நிறைந்ததாக இருக்கிறது: புதிய கற்பனை: உயர்ந்த நோக்கம்: ஆனல் சுபாவமற்றதாக இல்லை. இந்தக் கவிதையை வேறு யாராவது எழுதியிருந்தால் அரசன் அந்த எவ்வளவோ புகழ்ந்திருப்பான். ஆனல் மகள் எழுதியிருக்கும் இந்த யௌவனக் காதலின் அமர கீதத்தைக் கேட்டு அவன் மனம் சிந்தை தேக்கியது. இந்தச் சிறு பெண் ஸ்திரீ புருஷர்கள் காதல் விஷயங்களைப்பற்றி எப்படி அறிவாள்? இந்தக்காட்சிகளை இவள் எப்படிப் பார்த்தாள்?' என்று யோசிக்கலானுன். அவன் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. அவன் அந்த வாலிப சங்யாசியின் பக்கம் குரூரமான பார்வையுடன் பார்த்து நிலைமையை உணர முயன்ருன். தங்கம் கூட நெருப்பில் விழுந்து உருகிப் போகிறது? சங்யாசி சிரித்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் சிறிதுகூடப் பயமில்லை. அவன் கண்களில் சிறிதும் சங்கோசமில்லை. அரசன் சிந்தனையிலாழ்ந்தான். இந்த முகம் பாபத்தின் மூகம் அல்ல. பாபம் இப்படித் தலை நிமிர்ந்து நிற்காது. இம்மாதிரிச் சிரிக்க தைரியம் கொள்ளாது. ஆனல் உஷா எப்படி இந்தக் காதல் கவிதை எழுதினுள்?

அரசன் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு எழுந்து மெள்ள மெள்ளச்செல்லலானுன். சங்யாசி அரசன் மனதிலுள்ளதை அறிந்து கொண்டான்.

4

மறுநாள் சங்யாசிக்கு விடை கொடுத்தனுப்புவதற்காக அரசன் அவனை சபைக்கு வரவழைத்து அவனுக்கு பொன் மோஹராக்கள் சன்மானங்கள் செய்து "இது உங்களுக்கு தக்ஷிணை!" என்ருன்,

ஒரு மாதத்திற்கு மட்டும் சரஸ விலை

100 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு விலை ரு. 5-12-0



கார்டு படங்கள்

கணவன் மனைவியின் அந்தரங்கமான நிலைகளைக் காட்டும் அழகான தோற்றங்களுடைய அபூர்வமான ஸெட், தபால் சார்ஜ் உள்பட 100 கார்டுகளடங்கிய ஸெட் 1க்கு ரூ 5/12/- பொறுக்கியெடுத்த 25 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு தபால் சார்ஜ் உள்பட ரூ. 2/10/- ஒரு சமயத்தில் 25 கார்டுகளுக்கு குறைவாக அனுப்புவதில்லை.

AMERICAN CORPORATION (S.M.W)

(B P S) DINA NAGAR (PUNJAB)

சங்யாசி பொன் மோஹராக்களை அலட்சியத்துடன் பார்த்துவிட்டு "அரசே! நீ கவிகளில் ராஜன். ராஜர்களில் கவி! இந்த தக்ஷிணை உனக்குத் தகுந்ததல்ல" என்ருர்.

அரசன் ஆச்சரியத்துடன் சங்யாசியை நோக்கினுன். ஆனல் சங்யாசி புன்னகை செய்து "நான் கேட்கும் தக்ஷிணையைக் கொடுக்க வேண்டும்!" என்ருர்.

அரசன் வணக்கத்துடன் "உத்தரவு இடுங்கள். அதை நிறைவேற்றுகிறேன்!" என்ருன்.

சபையிலுள்ளவர்கள் ஆச்சரியத்துடன் சங்யாசி என்ன கேட்கப் போகிருன் என்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

"அரசே! யாராவதுதான் எழுதிய கவிதையைப் படித்துக் காண்பித்தால் அதுவே போதும்!"

சபையிலுள்ளவர்கள் வியப்பெய்தினர். பொன்னுன சமயத்தை சங்யாசி இழந்து விட்டான் என்று எண்ணினுர்கள்.

"எதைப்பற்றிக் கவிதை பாட வேண்டும்?" என்று கேட்டான் அரசன்.

"ஏதாவது ஒரு ஏழைக்குடிசையைப்பற்றி?"

அரசன் போஜ பத்திரத்தை எடுத்துக்கொண்டு ஓர் புறம் உட்கார்ந்தான். அரை மணி நேரத்திற்கெல்லாம் கவிதை தயாராகி விட்டது.

"படி!" என்ருர் சங்யாசி.

அரசன் கவிதையைப் படிக்கலானுர். "மழை காலம். வானத்தில் கறு மேகம் குவிந்திருந்தது. இதைவிட இருண்ட மேகம் ஒரு ஏழைக் கிழவியின் மனதில் குவிந்து கிடந்தது. வானத்தில் நடு நடுவே மின்னல் வெட்டியது. ஆனல் அவள் மனம் இருண்டு கிடந்தது. கூரையிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. கீழே தரையெல்லாம் சதசதவென்றிருந்தது. எங்கும் ஒரே தண்ணீர். மாலை இருளில் ஜனங்கள் தத்தம் வீடுகளில் விளக்கேற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனல் கிழவியின் வீட்டில் விளக்கேற்ற ஒருவரும் இல்லை. அவள் விளக்கில் எண்ணைப் பசைபட்டு வெகு நாட்களாகிவிட்டன. அதன் திரிகள் அவள் கூந்தலைப்போல் வரண்டு கிடந்தன. அவள் அடுப்பு மூட்டி பல தினங்கள் ஆயின. அங்கே சிலந்தி கூடுகட்டி இருந்தது. அவள் வீட்டிலிருந்த எலிகள் ஓடிவிட்டன. பதிலுக்கு வெளவால்கள் வந்தடைந்திருந்தன.

இது கவிதையல்ல. யாரோ ஒரு ஏழை வீட்டின் நிஜத்தோற்றம். ஆனல் எவ்வளவு படம் பிடித்ததுபோன்ற காட்சி! உள்ளத்தைக் கலக்கும் உணர்ச்சிப் பொலிவு. சபையிலுள்ளவர்கள் "ஸபாஷ்! ஸபாஷ்!" என்ருர்கள். ஆனல் வாலிப சங்யாசி மௌனமாக இருந்தான்.

அரசன் அவர் பக்கம் பார்த்தான். உடனே சங்யாசி "அரசே! உன்னுடைய கவிதை உண்மையிலேயே மிக நன்ருக இருக்கிறது. பாவம் நிறைந்த கவிதை, ஆனல்..." என்ருர்.

சபையிலுள்ளவர்கள் எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர். சங்யாசி மீண்டும் "ஆனல் நீ ஒரு ராஜன் மகனல்ல' யாரோ ஒரு ஏழையின் மகன் என்றுதான் தோன்றுகிறது" என்ருர்.

சபையில் ஒரே நிசப்தம். அரசனின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவன் உடைவாள் மேல் கையை வைத்துக் கொண்டு "சங்யாசி! நீ என்ன என்னை அவமானமா செய்துகொண்டிருக்கிருய்?" என்ருன்.

"நீ அரசனுடைய மகனுக இருந்தால் இந்தக் கவிதையை எப்படி எழுத முடியும். நீ அரசனும். நீ ஏழையின் வீட்டு நிலைமையை எப்படி அறிவாய்?"

அரசன் முன் போலவே கோபமான குரலில் "காவியக் கற்பனையினுல் கவி சகலத்தையும் பார்க்க முடியும். பிறர் திறந்த கண்ணினுல் பார்க்க முடியாததை கவி மனக் கண்ணினுல் பார்க்கிருன்" என்ருன்.

சங்யாசி புன்னகையுடன் 'கவி ராஜா! நீ சொன்னது சரி. ஆனல் நீ அரசன் மகனுக இருந்தும் கற்பனையினுல் ஏழை வீட்டின் காட்சியை வர்ணிக்க முடியுமானுல், உன் மகள் ஸ்த்ரீ புருஷர், காதல் லீலைகளை ஏன் வர்ணிக்க முடியாது? நீ என்னை சந்தேகக் கண் கொண்டு பார்த்தாய். உன் கண்கள் சிவந்தன. சங்யாசிக்கு இந்திரியங்கள் தன் வசமில்லை என்று நீ எண்ணினுய். ஆனல் உன் சந்தேகம் ஆதாரமற்றது. நான் சங்யாசி. உலகில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் எனக்கு மகளைப் போல." என்று சொல்லிவிட்டு சபையை விட்டு வெளியேறினுர்.

அரசனுக்குக் கண் திறந்தது. ஆனல் அவன் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஐந்தாம் அங்கம்

முதல் காட்சி

மாலை நேரம்: ஔரங்களீப் தர்பார். சிவாஜியும் பிரஜைகளும் இருக்கின்றனர்.

சோப்தார்:—அல்லாஹோ அக்பர்! ஷர் நாம ஷர் இஸ்லாம்.

ஷாம்ஷேர்:—ஜங்பகதூர் அலம்கீர் பாதுஷா!

(அலம்கீர் பிரவேசிக்க, எல்லோரும் எழுந்திருக்கிருர்கள். அலம்கீர் சிம்மாசனத்தில் உட்காருகிருர். எல்லோரும் உட்காருகிருர்கள்.)

அலம்கீர்:—நீங்கள் எல்லோரும் இன்று ஓர் கெட்ட செய்தியை கேட்கவேண்டியிருக்கிறது. நம் சேனுதிபதி ஸெயிஷ்டகானை சிவாஜி வஞ்சகமாக ஏமாற்றியதை நீங்கள் அறிவீர்கள். அறிந்தும் இருப்பீர்கள்-நம் ஸெயிஷ்டகான் அபஜயத்துடன் திரும்பி வரவில்லை. தன் சைன்யத்திற்கே மோசம் விளைவித்த அவனைச் சரியானபடி பழிவாங்க உங்கள் யோசனையின் பேரில் மற்ற தீர்மானங்களை ஏற்பாடு செய்யவே இங்கு வந்திருக்கிருர், அவரும் நாமும் யோசனை செய்து அவ்வஞ்சகனை வஞ்சகமாகவே கைதி செய்ய எற்பாடுகள் செய்துள்ளோம், இதற்காகவே நாம் இங்குகூடியிருப்பதோடு, இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் இங்கு வருவான். அவன் நம் ஸெயிஷ்டகானை கௌரவித்ததற்குத் தக்கவாறு நாமும் அவனைக் கௌரவப்படுத்தவேண்டும். அவனை ஓர் உடன்படிக்கை ஏற்பாட்டிற்காக இங்கு அழைத்துள்ளோம். அவன் தைர்யத்தையும் அவன் செயலையும் ஒருவாறு அடக்கவேண்டியது.

(சேவகன் பிரவேசிக்கிருன்)

சேவகன்:— சர்க்கார். சிவாஜியை தாங்கள் கூறிய மரியாதைப்படிஅழைத்துவருகிருர்கள்,

(சிவாஜி வர, அவனுக்கு தக்க இடமளிக்காமல் ஓர் மூலையில் உட்கார வைக்கிருர்.)

சிவாஜி:—(தனிமையில்) என்ன! என்ன இருந்தாலும் ஓர் சிற்றரசனுக்கும் அரசனுக்கும் உள்ள வித்தியாசம்தானே இவனுக்கும் எனக்கும் உள்ளது. உடன்படிக்கை செய்யுங்கால் அவரவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்ய வேண்டியது ராஜ விஷயமாய் இருக்க, இவன் என்னை அவமானப் படுத்தவே இப்படிச் செய்திருக்கிருன்போலிருக்கிறது. (அவுரங்கஜீப்பிடம்) நமஸ்தே ஷாயின்ஷா. நாம் வந்தவிஷயத்தைப்பற்றி பேசலாமே.

அவுரங்கஜீப்:—சிவாஜி, உன்னை வெகு நாளாக காண வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. அதற்குச் சரியான சந்தர்ப்பம் இன்றே கிடைத்தது. சிவாஜி, உன் வீரத்தையும் திறமையையும் தைர்யத்தையும் நாங்கள் அறிவோம். உனக்கு இன்னெரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. (சிம்மாசனத்திலிருந்து கீழ் இறங்கி வந்து சிவாஜியின் கையைப் பிடித்து) நீ மாத்திரம் எங்கள் வம்சத்தில் ஒருவனுய் இருந்தால், சகோதர வாஞ்சை எப்படி என்றும் அறியாமல் சகோதரர்களை கொலை செய்த நான், உன்னை வாஞ்சையோடு அணைத்து கௌரவிப்பதுமல்லாமல் இந்த நாட்டிற்கு உன்னை மணியாக்குவேன்.

சிவாஜி:—ஷாயின்ஷா! கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா? இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம் தானே தங்களுக்கும் எனக்கும் உள்ளது. தாங்கள், இஸ்லாத்தைப் பரவச் செய்ய எவ்வளவு திட நம்பிக்கைகொண்டுள்ளீரோ, அது போல் நானும் என் மதத்தில் அதே பற்று கொண்டுள்ளது சகஜம்தானே.

அவுரங்கஜீப்:—சிவாஜி. என் முன்னேர்கள் ஹிந்துக்களைக் கௌரவித்து வந்தது உனக்குத் தெரியாதா? ஒருவருக்கொருவர் மணம் புரிந்து கொள்ளவில்லையா?

சிவாஜி:-ஷாயின்ஷா அதுபோல் இப்பொழுது இருக்கிறதா? இந்த ஜெஸியாவும் முகம்மதியர்கள் செய்யும் அக்ரமமும் அப்பொழுது இருந்ததா?

அவுரங்கஜீப்:—மருந்து கசக்கிறது. சாப்பிடு என்ருல் அதை உட்கொள்ள முன் வருவானு. பலாத்காரமாகத் தானே கொள்ளச் செய்ய வேண்டும்.

சிவாஜி:—ஷாயின்ஷா, என்ன இருந்தாலும் நான் என் மதத்தைச் சார்ந்தவன் தான். என் மனது உங்கள் மதத்தை ஆஸ்ரயிக்க இடம் தரவே தராது.

அவுரங்கஜீப்:—இல்லாவிடில் என்ன நேருமோ நான் ஜவாப்தாரியல்ல.

சிவாஜி:—என்ன நேர்ந்தாலும் என்ன? உங்கள் விஷயம் எல்லாம் தெரிந்துதானே வந்திருக்கிறேன்.

அவுரங்கஜீப்:—இதோ பார் சிவாஜி! கடைசி முறையாகச் சொல்கிறேன். உனக்கு எவ்வளவு வசதிகள் ஏற்படும் என்பதை உணராது பேசுகிருய்

சிவாஜி:—நீங்கள் கொடுக்கப் போகும் சௌகர்யத்தையும் உங்கள் வஞ்சக புத்தியையும் அறிந்துதானே வந்திருக்கிறேன்.

அவுரங்கஜீப்:—எளிய வஞ்சகா! யாரிடத்தில் பேசுகிருய்? அப்ஸல்கானைக் கொன்றதும் வஞ்சகமாகத்தானே. என் சேனைகளை வென்றதும் வஞ்சகமாகத் தானே.

சிவாஜி:—போர் முறையை அனுசரியாது, சமாதானம் செய்யும் விதமாய் என்னைக் கொல்ல நினைத்தது வஞ்சகமாகத்தானே. தங்கள் சேனுதிபதி ஸெயிஷ்டகானை அனுப்பி திடீரென முற்றுகையிட்டது வஞ்சகமாகத்தானே? யார் வஞ்சகர்?

அவுரங்கஜீப்:—சிவாஜி! அறிந்து பேசு!

சிவாஜி:—அறியாமலா பேசுகிறேன். அலம்கீர் நீ செய்த சூழ்ச்சி எனக்குத் தெரியாதா? என்னை வரவழைத்து என்னுடன் தீர்மானத்திற்கு வர உனக்கு மனம் உண்டா? இதை நான் அறிவேனே.

அவுரங்கஜீப்:—போதும் நிறுத்து! உன் பிரசங்கம் இங்கு வேண்டாம்!

சிவாஜி:—என் பிரசங்கத்தை நிறுத்திவிட்டேன். ஆனல் தங்கள் பிரசங்கத்தை ஆரம்பிக்கலாமே.

அவுரங்கஜீப்:—என்னுடைய சொல்லுக்கு நீ இணங்கமாட்டயே.

சிவாஜி;—இப்பொழுது நீர் சொன்னது இந்த ஜன்மத்தில்லை, வேண்டுமானுல் அடுத்த ஜன்மம் எடுத்து வருகிறேன்: வேறு என்னவோ?

அவுரங்கஜீப்:—நீ எங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதே. அதுவுமின்றி உன்நாட்டு மக்கள் எல்லோரும் எங்கள் விருப்பத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

சிவாஜி:—இத்தலை இவ்வுடலில் இருக்கும்வரை அது இயலாத விஷயம்.

அவுரங்கஜீப்:—என்ன அது இயலாத விஷயமா? ஆனல் நீ எதற்கும் சித்தமாக வேண்டியதே.

சிவாஜி:—இல்லாவிடில் நான் இங்கு வந்திருப்பேனு. உங்கள் கௌரவத்தை அறிந்துதானே வந்திருக்கிறேன்.

மோகலாய சக்ரவர்த்தி தமது பிள்ளைகள் தமக்கு எதிராகக் கிளம்பியதை அறிந்து உயிர் துறக்கிறர்: அவாது ப்ரிய புத்ரி ஜஹ்னராவை அவளது சகோதரன் அவுரங்கஜீப் சிறைப்படுத்தி வைக்கிறர்: இது தவிர அவுரங்கஜீப் எப்படியாவது சிவாஜியைப் பிடிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு செய்யும் சூழ்ச்சிகள் சில வியர்த்தமாகின்றன. சிவாஜீ சத்ரபதி எதற்கும் சித்தமாகவே இருக்கிறர். கடைசியில் தந்திரமாய் சிவாஜியைப் பிடிப்பதற்காக் அவுரங்கஜிப் ஏற்பாடு செய்கிறர்: சிவாஜியை ராஜ சபைக்கு வரவழைக்கிறர். சிவாஜியும் ஜஹ்னராவும் சந்திக்கின்றனர். இருவருக்கும் நடக்கும் சம்பாஷனையை இப் பதியில் படிக்கலாம்.

அவுரங்கஜீப்:–யாரங்கே? (சேவகன்வருகிறன்) இம்மலை எலியை கைதி செய்யுங்கள்.

சிவாஜி:—அலம்கீர்! இதற்குமேல் உன்னால் என்னை என்ன செய்யமுடியும்? நீ சொன்ன ஒரு வார்த்தைக்கு இந்த சிவாஜி இணங்கமாட்டான் என்பதை கவனத்தில் வை.

[சிவாஜி திமிர அவனை இழுத்துக் செல்லுகிறார்கள். அவுரங்கஜீப் நகைக்கிறன்.]

இரண்டாம் காட்சி

அரண்மனையில் ஓர் அறை. ரஸியாவும் ரஹமட்டும் இருக்கின்றனர்.

ரஸியா:—(பிரவேசித்து) ஜகதீசா, என்னிடத்தில் இப்படி ஏன் பாராமுகமாய் இருக்கவேண்டும்? வலுவில் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தும் மனதில் கிலேசமடைந்து இவ்வாழ்க்கை எனக்கிருந்து என்ன பயன்?

ரஹமட்:-(பிரவேசித்துத் தனிமையாய்) நான் காணவந்த காரிகையை நேரிலேயே கண்டுவிட்டேன். இதுவும் ஓர் நல்ல சகுனம்தான். ரஸியா! என்ன பீகம்ஸாப் பிடத்தில் உனக்கு இவ்வளவு பிரியம். நேரே அங்கே தான் போகிறயோ?

ரஸியா:— (வணக்கத்துடன்) ஆம் எனக்கு இப்பொழுது அந்த உத்தியோகம் தான் கிடைக்கிறது. அவருக்கு சிஸ்ரூஷை செய்யவே நான் இங்கு கொண்டுவரப்பட்டேன்.

ரஹமட்:—என்ன? நீ கொண்டு வரப்பட்டாயா? நீ முகம்மதியப் பெண் அல்லவா?

ரஸியா:—அய்யா! நான் ஓர் ஹிந்து பிராமணப் பெண். அதிலும் ஓர் அநாதை. முகம்மதிய சிப்பாய்களிடத்தில் சிக்கிய போது பாதுஷாவினல் காப்பாற்றப்பட்டு ஜெனனவில் முகம்மதியப் பெண்ணைக் கொண்டு வரப்பட்டேன்:

ரஹமட்:—என்ன! நீ ஓர் பிராம்மணப் பெண்ணு? நானும் ஓர் பிராம்மணன்தான்! நானும் சிப்பாய்களிடத்தில் சிக்கிக் கொண்டு ஜெஸியா கொடுக்க வழி இல்லாமல் முகம்மதியனக்கப் பட்டேன்.

ரஸியா:—அய்யா, தங்கள் மனம் துடிக்கவில்லையா? வீரமாதாவின் தவப் புதல்வனை சிவாஜியை அநியாயமாய்ச் சிறையிட நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதா?

ரஹமட்:—ரஸியா, நம் கையாலானதை நாம் செய்யக்கூடும். நமக்குக் கைகூடாத காரியத்தில் நாம் எப்படி பிரவேசிப்பது?

ரஸியா:—அய்யா. தாங்கள் ஓர் ஆணாக இருந்தும் தங்களால் ஆகாதது ஏதாவது உண்டா? சத்ரபதி நீர் காக்கும் சிறையிலேயே அடைக்கப்பட்டிருக்கிறர்.

ரஹமட்:—என்ன, நான் காக்கும் சிறையிலா?

ரஸியா:—ஆம்.

ரஹமட்:—அப்படியானல் ரஸியா, என் ஜன்மம் சாபல்யமாயிற்று. அம்மகானை நமஸ்கரித்தலே போதுமானது. இவ் வேண்டா மதம் என்னை விடும். நான் ஸத்கதி அடைவேன். ஆனல்...ரஸியா உன்னிடத்தில் ஓர் விஷயம்.

ரஸியா:—அது என்ன?

ரஹமட்:—நாம் எவ்வாருயினும் சத்திரபதியை ஒரு மனதாய்த் தொழுது இந்த ஆக்ராவினின்று போக ஓர் வழி செய்ய வேண்டும்.

ரஸியா:—அவருக்குத் தெரியாத வழி நீர் என்ன செய்யப் போகிறீர்?

ரஹமட்:—அப்படி ஒன்றும் நாம் பிரமாதமாய்ச் செய்யப் போவதில்லை. இருந்தாலும் அவருக்கு நம்மால் தெரியக்கூடிய விஷயங்களும் ஆகக்கூடிய காரியங்களும் உண்டு. இதை நாம் இதரருக்குத் தெரியாமல் செய்ய வேண்டும். இதற்கு நீ சகாயம் செய்வாயா?

ரஸியா:—அய்யா, கடவுள் மேல் ஆணையாய் நான் என்னல் ஆனதைச் செய்யத் தயார்.

ரஹமட்:—என் காவலுக்கு நேரமாகிவிட்டது. நான் செல்கிறேன். யாருக்கும் நாம் தான் இதை செய்கிறோம் என்று தெரியக் கூடாது. நான் போய் வரட்டுமா? (போகிறன்)

ரஸியா:—இதற்காகத் தானே எங்களை ஆண்டவன் இவ்விடத்தில் இக்கோலத்தில் வைத்திருக்கிறர். ஜகதீசா, என்ன உன் திருவுள்ளம்! அவர் கேட்குமுன் என் மனம் அவரையே நாடுகிறதே. அவர் மனதில் என்ன நினைத்திருந்தாலும் என்னிடத்தில் அவர் எவ்வளவு வணக்கத்துடன் நடந்து கொள்கிறர். எங்களை காரிய விசேஷங்களில் இணைத்த அப்பெருமானே இல் வாழ்க்கையிலும் இணைத்து வைப்பார் என்பதற்கு ஐயமில்லை. (போகிறள்)

மூன்றும் காட்சி

சிறைச்சாலையில் மாலை நேரம்:— சிவாஜி சிறையிலிருக்க அதே சிறையில் ஜஹனர் மயக்கத்துடன் இருக்கிறள்.

சிவாஜி:—ஆஹா என்ன சூழ்ச்சி! என்ன அக்கிரமம்! அழைத்ததுமல்லாமல், அவமதித்ததும் போதாமல் வஞ்சித்து சிறை செய்தானல்லவா? ஹே நயவஞ்சகா, நீ உன் மதத்திற்கு குலதேவதையாய் இருந்தால் என்ன? ராஜ நீதி தவறிய நீயா சக்ரவர்த்தி. உனக்கா இந்த சாம்ராஜ்யம்! ஆம், இவன் என்னை வஞ்சித்தது போலவே நானும் இவனை வஞ்சித்து இவ்விடத்திலிருந்து வெளியேறவேண்டியதே. மனம் பதறுகிறது. ஒரு யோசனையும் புரியவில்லையே. என் மனம் ஏன் இப்படி அலையவேண்டும்? பவானி மாதா! உன் சேய் ஆகிய என்னை ஓர் ஆளாக்கிறய்! மாதாஜியிடம் நான் விளையாட்டாகக் கூறியதை ஈடேற்றிறய். மகாராஷ்டிர வீரர்கள் என்னிடம் அன்புகொள்ளத் தூண்டிறய் பல போர்களில் ஜயமளித்தாய். இதிலும் நீயே தான் எனக்கு அபயம் அளிக்க வேண்டும். (உலாவி வரும் பொழுது சோகத்தினல் பூண்டும் துக்கத்தினல் வாடி மூர்ச்சை அடைந்தும் இருக்கும் ஜஹனரைக் காண்கிறர்.) யார் இம் மாதரசி. நோக்கும்போது சக்ரவர்த்தியின் குடும்பத்தைச் சேர்ந்தவள் போல் காண்கிறர்கள். [ஜஹனர் சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு திரும்ப எதிரில் சிவாஜியைக் காண முகத்தை மூடிக் கொள்கிறள்.] அம்மா என்னை இங்கு அடைத்தக் காரணம் தெரியாது. ஒருவேளை இச்சிறை காலியாய் இருக்கிறதென்று அடைத்திருக்கிறர்கள் போலும், தாங்கள் இங்கிருப்பது தெரிந்திருந்தால் நான் வேறு அறையிலிருக்க ஏற்பாடுகள் செய்திருப்பேன்.

ஜஹனர்:—அய்யா. தங்களைக் காணும் பொழுது. ஓர் அறிஞர் போல் தோன்றுகிறீர்கள். நான் ஓர் துர்ப்பாக்யவதி. நான் ஒருவளே இந்த சாம்ராஜ்யத்தை ஆளும் சக்கிரவர்த்தியின் உடன் பிறந்தவள். மற்றவர்கள் எல்லோரும் காலம் சென்று விட்டார்கள். ஜனங்கள் இந்த சக்ரவர்த்திக்கு ஓர் சகோதரி இருக்கிறள் என்று அறியார்கள்.

சிவாஜி:—அம்மா! தாங்களா!! இச்சக்ரவர்த்தியின் சகோதரியா!!! புரிந்தது. தாங்கள் தான் மன்னர் ஷாஜஹானின் முதல் குமாரியா?

ஜஹனர்:—ஆம்.

சிவாஜி:—[தனியாக] ஆஹா! ஹிந்துக்களிடம் இவள் ஒருவளே பற்றுடையவளாயிருந்தாள் என்று கேள்விப்பட்டேன். அதற்காகத்தான் இவளுக்கு சிறைவாசம் போலும்!

ஜஹனர்:—[தனியாக] இவர் உருவத்தை நோக்க சத்ரபதியைப் போலல்லவா காண்கிறர்! [சிவாஜியிடம்] ஐயா தாங்கள் யார்? தங்களை இச்சிறையில் அடைக்கக் காரணமென்ன?

சிவாஜி:-அம்மா, நான் ஏன்சிறையிலடைக்கப்பட்டேனென்று எனக்குத் தெரியாது.

ஜஹனர்:—தாங்கள் சத்ரபதியா?

சிவாஜி:—ஆம், இவனை ஜனங்கள் அப்படித்தான் அழைக்கிறர்கள்.

ஜஹனர்:—ஆஹா! நான் என் கண்ணரக் காண பாக்கியம் கிடைத்தது. (ரஸியா பிரவேசிக்கிறள்.)

ரஸியா:—(சிவாஜியிடம்) தங்களுக்கு அடுத்த அறையில் ஸ்நானத்திற்கு யாவும் தயார் செய்து வைத்திருக்கிறேன். தாங்கள் சென்று தங்களுடைய நித்திய அனுஷ்டானங்களை முடித்துக் கொள்ளலாம் (சிவாஜி போகிறர்.)

ரஸியா:—அம்மா நான் சொன்னது சரியாய்விட்ட தல்லவா! (தொடரும்)

இலவசம் ! இலவசம் !! இலவசம் !!!



படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போலிருப்பதுடன் 15 அவு. எடை 7'' நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல் சுடலாம். இதன் சப்தத்தால் அனைவரையும் விரட்டலாம். திருடர்கள், விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8 நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13. நெ.1111, 55 ரவைகளுடன் ரூ. 6/8. அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 1/8. பிஸ்டல் ஆயில் அணு 6. இலவசம் : ஒரு அழகிய மியூட்கை கடியாரம், ஒரு தோலா ''பாரிஸ் நியூகோல்ட்'' ஒவ்வொரு பிஸ்டலுடனும் இனமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போலிருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு :—அங்கீகரிக்கப்படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்திரவாதத்தின் கீழ் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும், 2 தோலா ''பாரீஸ் நியூ கோல்ட்''டும் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் இலவசம்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன் எழுதுங்கள்.

AMERICAN CORPORATION
(S. M. W.) DINA NAGAR (PUNJAB)

(B. P. S.)

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறன். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனை ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறன். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறன். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனேநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறன். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறள் இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர்.

4

"கங்காமாடி உங்களுடைய ஜமீன்தாரியா, அம்மா?'' என்று சாது கேட்டான்.

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டு "நான் ஒரு பெரிய ஜமீன்தாரிணி தெரிகிறதா!'' என்றுள்.

அதற்குப் பதில் சொல்ல சாதுவும் கொஞ்சம் சிரித்துவிட்டார் "பெரிய ஜமீன்தாரிணி என்ருல் அதனல் சுகம் ஒன்றுமில்லை, தாயே'' என்ருர் சாதுஜி.

அவன் பேசியதிலிருந்து அவன் நில சம்பந்தமான நிலைமையைப் பற்றி ஒருவிதமான சந்தேகம் கொண்டான் என்று தெரிந்தது. ஆனல் ராஜலக்ஷ்மி அவன் அந்தப்பேச்சை எடுக்கும்படி விடவில்லை. அவள் சரள பாவத்துடன் அவன் சொன்னதை உடனே அங்கீகரித்து "அது வாஸ்தவம் தான் ஆனந்தா! அதெல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு விலகுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது!'' என்றுள்.

"ஆமாம் திதி, அவர் சொஸ்தமடைந்ததும் நீங்கள் ஊருக்குத் திரும்பிவிடுவீர்களா?'' என்று சாது கேட்டார்.

"திரும்பிப் போவதா! அதொன்றும் இப்பொழுதில்லை''

"திரும்பிப் போகவும் முடியாது. நீங்கள் ஒதுக்கிவிட்டுப் போய்விட்டால் இந்த ஏழை மக்களுடைய கஷ்டம இன்னும பன் மடங்கு அதிகமாகிவிடும் அருகில் இருந்தால் இவர்களுடைய கஷ்டத்தை நீங்கள ஏற்றுக்கொள்ள முடியுமென்பதில்லை. ஆனல் தூரத்திலிருந்தால் அவர்களுடைய கஷ்டத்தை நீங்கள் அறிய முடியாது. ஒரு தேசத்து அரசன் தேசத்திலேயே இருந்தால், தேசத்தினுடைய ஏழை மக்கள் அவ்வளவு தூரம் சிரமத்தை அடையமாட்டார்கள். இந்தச் சிரமம் என்பதுதான் என்ன? உங்களுடைய பட்டணவாசத்திற்கு வேண்டிய ஆகார விவகாரங்களைக், கொடுப்பதால் தான் இவர்கள் இப்படி ஆகிறர்கள், என்பதைக் கண்ணல் பார்க்கலாம்''

"ஆமாம் ஆனந்தா. ஊருக்குத் திரும்ப வேண்டும் என்று உன் மனது துடிக்கவில்லையா?'' என்றுள் ராஜலக்ஷ்மி.

சாது சுருக்கமாக "இல்லை'' என்ருர்.

அவன் ஆதரவற்றவனுகத் தோன்றவில்லை. ஆனல் அவனுடைய பேச்சிலிருந்து, குடும்பம் அவனுக்குப் பிடிக்கவில்லை என்று ராஜலக்ஷ்மி கண்டு கொண்டாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு,ராஜலக்ஷ்மி கலங்கிய குரலில் "உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிருர்கள்?'' என்று கேட்டாள.

"அதான் எனக்கு இப்பொழுது வீடே கிடையாதே!'' என்ருர் சாது.

ராஜலக்ஷ்மி மறுபடியும் வெகு நேரம் சும்மா இருந்து விட்டு "நல்லது ஆனந்தா, இந்த வயதில் நீ சன்னியாசம் பெற்றுக் கொண்டது, உனக்குச் சாந்தி அளிக்கிறதா?'' என்று கேட்டாள்.

சாது சிரித்துக்கொண்டே "டே அப்பா! சன்னியாசிக்கு அவ்வளவு ஆசையா! இல்லை அம்மா. நான் பிறருடைய துக்கத்தின் பாரத்தைச் சுமக்கத்தான் பார்க்கிறேன்-அதைத்தான் அடைகிறேன்'' என்ருர்.

ராஜலக்ஷ்மி மறுபடியும் மௌனமானுள்.

"அவர் தூங்கிப் போய் விட்டாரோ என்னமோ. ஆனல் சிறிது அவர் வண்டியில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறேன். நல்லது அம்மா. எப்பொழுதாவது நான் இரண்டு மூன்று நாள் உங்கள் அதிதியாக வந்தால் அவர் கோபித்துக் கொள்வாரோ?''

"அவர் யார் உன் சகோதரர் தானே?''

சாது மெதுவாகச் சிரித்துக் கொண்டு "அப்படியானல் சரி'' என்ருன்.

"ஆமாம், எனக்குக் கோபம் வருமா வராதா என்று என்னை ஏன் கேட்கவில்லை. முதலில் ஒரு தரம் கங்காமாடிக்கு வா, பிறகு இதை எல்லாம் யோசிப்போம்''

சாது என்ன பதில் சொன்னுரோ, அது எனக்குக் கேட்கவில்லை, ஒன்றுமே சொல்லவில்லை என்று நினைக்கிறேன். சிறிது நேரத்திற்கெல்லாம் என் வண்டியில் வந்து ஏறிக்கொணடு மெதுவாக "அண்ணு விழித்துக்கொண்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

நான் விழித்துக் கொண்டே தான் இருந்தேன், ஆனல் பதில் சொல்லவில்லை. உடனே அவர் என் பக்கத்தில் கொஞ்சம் இடம் செய்து கொண்டு போர்த்திக் கொண்டு படுத்துக் கொண்டார். கொஞ்சம் நகர்ந்து, அந்தத் திக்கற்றவனுக்குக் கொஞ்சம் இடம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சமயம் தோன்றிற்று. ஆனல் நான் நகர்ந்தால் என தூக்கம் கலைந்து விட்டது என்று அவர் மறுபடியும் அந்த நளளிரவில் தேசப் பிரச்னையை ஆராய்ச்சி செய்யக்

ஸ்காட்லந்தில் பிரிட்டிஷ் படைகள் பயிற்சி பெற்று வந்தனர். யுத்த முஸ்திப்புகளுடன் ஆயுதம் தாங்கிய தோணிகளில் ஆற்றைக்கடக்க பிரிட்டிஷ் துருப்புகள் தங்களைப் பழக்கிக் கொள்கின்றனர். இந்தப் பயிற்சி ஸ்காட்லந்து ஏரியொன்றில் மன்னர்பிரான் முன்னிலையில் நடத்தப்பட்டது. ஐரோப்பாவில் போய் யுத்தம் செய்வதற்க்காகவே இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிளம்பி விடுவாரோ என்ற பயத்தினுல், என் கருணைக்கு இடம் கொடுக்காமல் இருந்து விட்டேன்.

வண்டி எப்பொழுது கங்கா மாட்டிக்குள் நுழைந்ததோ எனக்குத் தெரியாது. வண்டி எங்கள் புது வீட்டு வாசலில் நின்ற பொழுது, பொழுது விடிந்துவிட்டது என்று கண்டேன். நான்கு வண்டிகளைச் சுற்றிலும் அநேக விதமான கோலாஹலங்கள் சூழ்ந்து கொண்டன. அந்த ஊரில் ஏழைகள்தான் ஜாஸ்தி என்று ரதன முனபே சொல்லி இருந்தான். அவன் கோபத்தில் சொன்னது கூடப் பொய் இல்லை என்று கண்டேன். அவ்வளவு காலையில், குளிரிலும், ஐம்பது அறுபது பையன்களும் பெண்களும் உடையின்றியும் பாதி உடையுடனும் தூக்கத்திலிருந்து எழுந்து வந்து வேடிக்கை பார்க்கச் சுற்றிக் கொண்டார்கள். பின்னுல் பெரியவர்களுடைய கூட்டமும் வந்து கூடியது. அவர்களுடைய தோற்றத்தையும் உடையையும் பார்த்த பிறகு அவர்களுடைய ஜாதியைப்பற்றி யாருக்கு என்ன சந்தேகமிருந்தாலும் ரதனுக்கு மட்டும் சந்தேகமே கிடையாது. தூங்கி எழுந்து வந்த அவர்களுடைய முகத்தில் ஏக்கமும் நிராசையும் தான் இருந்தது, எஜமானியைப் பார்ப்பதற்காக வெகு ஆவலுடன் சில சிறுமிகள் தங்களை மறந்து முட்டித் தள்ளிக் கொண்டு ஓடிவந்தார்கள். ரதன் உடனே கோபம்கொண்டு அவர்களை அடிக்கப்போன போக்கில் வண்டிக்காரர்கள் இருவர் அங்கு இருந்திராவிட்டால் பெரிய அமர்க்களமாகிப் போயிருக்கும். தன் நடத்தைக்காக ரதன் கொஞ்சமும வெட்கப்படவில்லை அவன் என்னைப்பார்த்து "இந்த ஈன ஜாதிப்பிரேதங்களைப் பாருங்கள் பாபு! என்ன கொழுப்பு இவர்களுக்கு! தேர்க் கூட்டம்போல் வந்திருக்கிருர்களே! நம்மைப் போன்றவர்கள் இங்கே வந்திருக்க லாயக்கா பாபு?" என்ருன்.

சாது தன்னுடைய பெட்டியை இறக்குவதில் ஈடுபட்டிருந்தார். இறக்கியானதும் அதிலிருந்து லோட்டா ஒன்றை வெளியில் எடுதது அருகில் இருந்த பையன் ஒருவனைப் பிடித்து "அடே பையா, இங்கே ஏதாவது நல்ல குளம் இருந்தால் இதில் ஜலம் கொண்டுவா. 'சாயா' தயார் செய்ய வேண்டும்" என்று சொல்லிப் பாத்திரத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு எதிரே இருந்த வயதான ஆள் ஒருவனைப் பார்த்து "ஐயா, கிட்டே ஏதாவது பசுமாடு இருந்தால் காட்டு, கால்படி பால் வாங்கிக் கொண்டு வரவேண்டும். இந்தப் பாலில் டீ சரியாக வருமோ!" என்று சொல்லிக்கொண்டே என்னையும் ராஜலக்ஷ்மியையும் ஒரு முறை பார்த்தார். ஆனுல் அவள் அந்த உற்சாகத்தில் ஈடுபடவில்லை. அவள் அதிருப்தி நிறைந்த முகத்துடன் கொஞ்சம் சிரித்துக்கொண்டு, ரதனைப் பார்த்து "போ, லோடாவை சுத்தம் செய்து கொஞ்சம நல்ல தண்ணீர் கொண்டுவா!" என்ருள்.

ரதனுடைய மன நிலைமையைப் பற்றித் தான் முன்பே சொல்லி இருக்கிறேன். அதற்கும் மேலாக ஏதோ ஒரு அறிமுகமாகாத சன்னியாசிக்காக ஜலம்கொண்டு வரும் பொறுப்புத் தன் மேல் விழுந்ததும் அவனுக்குக் கோபம் தாங்கவில்லை: அவன் கோபம் பூராவும் அந்தச் சிறு பையின் மேல் பாய்ந்தது. அவன் அதடடிய குரலுடன் "நாசமாய்ப் போகிற பயலே, பாத்திரத்தை ஏன் தொட்டுத் தொலைத்தாய்? போ, சனி! பாத்திரத்தைத் தேய்த்துத் தண்ணீரில் போடு" என்று அதடடியவண்ணம் பையனை அழைத்துக் கொண்டு போனுன்.

அவன் அட்டகாசத்தைக் கண்டு சாது சிரித்துவிட்டார் நானும் சிரித்தேன். ராஜலக்ஷ்மி தானும் கொஞ்சம் வெட்கத்துடன் சிரித்துக்கொண்டு "கிராமமே ரணகளப்படுகிறதே ஆனந்தா! இரவு கழிந்ததும் சாதுக்களுக்குச் சாயா வேண்டும போலிருக்கிறது?" என்ருள்.

"கிரஹஸ்தர்களுக்கு இரவு கழிந்துவிட்டால் எங்களுக்கும் கழியாதா என்ன?" நன்ருயிருக்கிறது. ஆனுல் பாலுக்காக ஏற்பாடு செய்ய வேண்டாமா? நல்லது வீட்டிற்குள் நுழைந்து பார்ப்போம விறகு வெட்டி ஏதாவது இருக்கிறதா பார்ப்போம். அக்கா பாத்திரத்தில் நேற்றைய பர்பி ஏதாவது இருக்கிறதா அலலது வண்டியின் இருட்டில் காலியாகிவிட்டதா?" என்ருன.

ராஜலக்ஷ்மி சிரித்தாள். கிராமத்துப் பெண்கள நாலைந்துபேர் தூர நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். அந்த சமயத்தில் குமாஸ்தா காசிராம் குசாரி தடபுடலாக அங்கு வந்து சேர்ந்தார். கூட நாலைந்து பேர் ஆட்கள். ஒவ்வொருவன் தலையிலும் பெரிய காய்கறி மூட்டையும் இதர சாமான்கள் கொண்ட மூட்டையும் கையில் பால் பாத்திரம் தயிர் பாத்திரம். மீன்கள் இவைகளும் இருந்தன. ராஜலக்ஷ்மி அவருக்கு நமஸ்காரம் செய்தாள் அவர்தான் தாமதித்து வந்ததற்காக அநேக சமாதானம் சொல்லி ஆரம்பித்தார். ஆசாமியை நான் நன்ருகக் கண்டுகொண்டேன். வயது ஐம்பதுக்குமேல் இருக்கும், தேகம் கொஞ்சம் இளைத்திருந்தது தாடியும் மீசையும் நரைத்திருந்தது. நானும் அவருக்கு நமஸ்காரம் செய்தேன். அவரும் எனக்குப் பிரதி நமஸ்காரம் செய்தார். ஆனுல் சாதுஜி இந்த மரியாதைகளுக்கு வரவில்லை. அவர் சாமான் மூட்டைகளைத்தானே இறக்கி அவற்றைத் தனித் தனியாக எடுத்து வைத்து அவற்றைச் சிலாகித்துக்கொண்டிருந்தார். பாலைப்பற்றித் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். மீனைப்பற்றிப் பேசிக் கூட இருந்தவர்களுடைய ஆவலை எல்லாம தாண்டினுர்.

இந்த சாது மகாராஜ் வரப் போகிருர் என்று குமாஸ்தாவுக்குத் தெரியாது அவர் வெகு உற்சாகமாக அவரை வரவேற்ருர்.

"சன்னியாசியைப் பார்த்து பயந்து விடவேண்டாம், அவர் என்னுடைய சகோதரர்." என்று சொல்லி விட்டு மறுபடியும் சிரித்துக் கொண்டு மிருதுவான குரலில் ராஜலக்ஷ்மி "இனிமேல் காவி வஸ்திரம் அணிய வேண்டிய வேலை கூட எனக்கிருக்கிறது" என்ருள்.

அந்த வார்த்தை சாதுவின் காதில் பட்டதும், அவர் "அது அவ்வளவு சுலபமாக ஆகக்கூடிய காரியமில்லை. அம்மா!" என்று சொல்லி என் பக்கம் அறைப் பார்வையாகப் பார்த்துச் சிறிது சிரித்தார். அதனுடைய அர்த்தம் எனக்கும் தெரிந்தது. ராஜலக்ஷ்மிக்கும் தெரிந்தது.

அவள் பதிலுக்கு முகத்தைச் சுளித்துக் கொண்டு சிரித்த வண்ணம் "பார்ப்போமே!" என்ருள்.

வீட்டிற்குள் நுழைந்துபார்த்த பொழுது குசாரி மஹாசயர் எங்கள் சௌகரியத்திற்குக் குறைவாக ஒன்றும் செய்யவில்லை என்று தெரிந்தது. வெகு தடபுடலாக அவர் தானேபோய் பழைய கச்சேரி நடந்த வீட்டைக் கொஞ்சம் கொஞ்சம் பழுது பார்த்து மாற்றி வசிப்பதற்கு வெகு சௌகரியமாகச் செய்து விட்டார். உள்ளே சமையலறை, உக்கிராண அறை இவைதவிர படுப்பதற்கும் இரண்டு அறைகள் இருந்தன. மண் தரைதான். கூரையில் வைக்கோல் மேய்ந்திருந்தது. உயரமாகவும் தாராளமாகவும் இருந்தது. வெளியே உட்காரும் அறையும் வெகு சாதுரியமாக ஏற்பாடாகி இருந்தது. தாழ்வாரம் சுத்தமாக மண் பூசி 'மழு மழு' என்றிருந்தது. ஒரு பக்கம் ஒரு சிறிய கிணறு அதற்குச் சற்று தூரத்தில் சில கொடிகளும் மரங்களுமிருந்தன. ஒரு பக்கத்தில் வரிசையாக சிறிதும் பெரிதுமாக பல துளசிச் செடிகள் இருந்தன. பக்கத்தில் ஒரு மல்லிகைக் கொடியுமிருந்தது. அந்த இடத்தைப் பார்த்ததும் மனதிற்குத் திருப்தியாக இருந்தது.

பிரகாசம் கம்பெனியாரின் உயர்தரமான
அல்லாய் கோல்டு நகைகள்.
சவரன் பொன்னுக்கு ஒப்பான பிரகாசமும், பள பளப்பும் உள்ளது.
5 வருஷம் உத்திரவாதமுள்ளது.



வளையல் ஜோடி 1க்கு ரூ. 3.
கழுத்து சங்கிலி ,, ,, 7.
வங்கி ஒட்டியாணம் (பெரிய சைஸ்) 1க்கு ரூ. 20.
(கேட்லாக் இனும்.)
R. S பிரகாசம் & கோ., 187, சைனுபஜார் ரோட், ஜி. டி., மதராஸ்.

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை
"சுதேசமித்திரன்"
எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

விஷப்பாண்டு ரோகம்

★

வைத்யரத்ன பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார்

★

பலவித வியாதிகள்

'நமது தேகத்து வடிகால்கள்' என்னும் எனது முந்திய கட்டுரையைப் படித்தவர்களுக்கு வ்ருக்கங்களும் மூத்திரோத்பத்தி அவயவங்களைப்பற்றிய விஷயங்கள் நினைவிலிருக்குமென்று நம்புகிறேன். வ்ருக்கங்கள் ஸம்பந்தமான சில கோளாறுகளையும் அவற்றிற்கு ஏற்ற பரிஹார முறைகளையும் பற்றிய இக்கட்டுரையைப் படித்து இதன் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள அனுகூலம் செய்வதற்காகவே வ்ருக்கங்களின் தத்துவங்கள் முந்திய கட்டுரையில் விளக்கப்பட்டன. இப்பொழுது வ்ருக்கங்கள் (ஆங்கிலத்தில் கிட்னிஸ் எனப்படுபவை) எவ் வியாதிகளுக்கு உட்படுகின்றன என்பதைப்பற்றி ஸங்கிரஹமாகச் சிறிது இங்கு விவரிப்போம்.

வ்ருக்கங்கள் பல காரணங்களைக்கொண்டு ஏற்படும் பல விதமான வியாதிகளுக்கு வசப்படுகின்றன. அவற்றைப் பற்றிய வியாதிகள் அபாயகரமாகவும், அதிக துன்பமளிக்கக் கூடியனவாகவும் இருக்கும். இவ்வியாதிகளை முக்கியமாய் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கூறலாம். (1) வ்ருக்கங்களின் வெளிப்புறத்தைச் சார்ந்தவை:—மூத்திராச்மரி என்னும் மூத்திர மார்க்கத்தில் ஏற்படும் கற்கள் உருவமான வியாதி; மூத்திரோத்ஸங்கம் என்னும் நீரடைப்பு; முதுகின் இடையில் அல்லது கீழ்ப்புறமாய் அடி தாக்குவதால் வ்ருக்கங்களில் ஏற்படும் ஆகந்துகக் கோளாறு. (வெளிக்காரணத்தினுல் ஏற்படும் காயம் சிதைவு முதலியவை ஆகந்துகக் கோளாறுகளாம்.) ஆக இவை ஒரு வகுப்பு. (2) வ்ருக்கங்களின் உட்புறத்தைச் சேர்ந்தவை; அல்லது தாது சுத வியாதிகள்:—இரத்தத்தில் கோளாறுகள் ஏற்பட்டு அதனுல் வ்ருக்கங்களின் உட்புற தாதுக்கள் விகாரமடைய அவ்வவயவங்களின் செயலும் கோளாறைப் பெறும்.

விஷ பாண்டு வியாதி எவ்வளவு கொடிதானது என்பதை அதனுல் கோளாறு மிகவும் கேவலமாக ஏற்படும்வரை ஒரு பிணியாளியும் அறிவதில்லை; இந்த வியாதி முற்றினுல் பிராண பாயம் தவிர வேறில்லை; இந்த உண்மையைக் கற்றறிந்த வைத்தியரைத் தவிர மற்றவர் எளிதில் அறிய மாட்டார்கள். இக்காரணத்தைக் கொண்டு தான் இது சம்பந்தமாக வைத்ய ரத்ன பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார் இச்சிறந்த கட்டுரையை எழுதியிருக்கிருர்.

★

"அபிகாதம்"

முதலில் குறிப்பிட்ட மூத்திராச்மரி என்னும் (மூத்திர மார்க்கத்தில் கல்லடைப்பு) வியாதியைப் பற்றிய விவரம் மற்றொரு நிருபத்தில் கூறப்படும். மூத்திரோத்ஸங்கம் என்கிற வியாதியில் க்வீநிகள் என்கிற மூத்திர நாடிகள் ச்ரோணி என்னும் கூடகம் (இடுப்பின் உட்புறம்) கவீநீக்ரீவா என்கிற பாகங்கள் மிகவும் விரிவடைந்து வ்ருக்கத்தின் மேல் ஆவரணமாயுள்ள தாதுக்களும் விசாலமாக வளர்ந்து விடும். மூத்திர மார்க்கத்திலுள்ள சிலேஷ்மகலை என்னும் வழவழப்பான ஜவ்வுத் தோல் அழன்று போய் புண்ணும் விடுவதுமுண்டு. வ்ருக்கத்தில் வீக்கமும் சில அழுக்குகளும் சேர்ந்து விடும், வ்ருக்கம் என்கிற கிரந்தி சிறுகச் சிறுகவோ வெகு துரிதமாகவோ சீழ் கொண்டு க்ஷீணித்து விடும்; இரு வ்ருக்கங்களும் ஒரே தடவையில் இவ்வித சிரழிவைப் பெறுவது வழக்கம்; ஆனுல் ஒவ்வொன்றும் கோளாறடையும் வகையும் அளவும் சிறிது வித்தியாஸப்படுவதுண்டு. மூத்திரோத்ஸங்கத்தில் நீர் வெளிவர முடியாமல்போவதும், அது பெரிதும் சீழ்கொண்டிருப்பதும் முக்கியக் குறிகள். அபிகாதம் அல்லது அடி தாக்கி, வ்ருக்கம் வியாதிகொள்வது அடிக்கடியும் நேரிடக் கூடியதல்ல. அடி தாக்கி வியாதி கொள்வதால் மூத்திரோத்ஸங்கத்திற்கு ஏற்ற குறிகளும் ஸங்கடங்களுமே காண்பது வழக்கம். வ்ருக்கத்தின் உட்புறத்தைச் சார்ந்த வியாதியில், அவ்வவயவத்தின் தாதுக்கள் எனப்படும் சதைகள் சிதைவடைவது முக்கியக் குறி. அந்த நிலைமையில் வ்ருக்கக்கிரந்தியின் மேல் சிறிய பொரி பொரியான வளர்ச்சிகள் தோன்றி அவ்வவயவத்தில் தாதுக்ஷயம் ஏற்படும்; முடிவில் இது பெரிய வித்ரகியாகப் (சீழ்க் கட்டியாக) பரிணமித்துவிடும். வ்ருக்கங்களுக்கு அருகிலுள்ள சில அவயவங்கள் நோய் கொண்டு, அது நீடித்தும் தொடர்வதால் இக் கிரந்திகளும் வியாதியடையலாம். அர்புதம் என்கிற ஒரு வகை கிரந்தி போன்ற வீக்கமும் வ்ருக்கத்திற் காண்பதுண்டு. இந்த அற்புதம் என்பது புரைகுழல் போன்ற வீக்கம். இது முதிர்ந்து பெரிதானுல் வெளிப்புறத்திலும் பரிசீலித்துப் பார்க்கும்போது கைக்குப் புலப்படும்.

"விஷ பாண்டு"

இவ்வவயவங்கள் பாகம் என்னும் வீக்கங்கொள்வது ஓர் அபாயகரமான வியாதி. இந்த வியாதியை விஷபாண்டு என்று நம்மவர் வழங்குவர். ஆங்கிலத்தில் இதை பிரைட்ஸ் டிஸீஸ் என்றும் நெப்ரைடிஸ் என்றும் கூறுவர். முதுகில் அல்லது விலாப்பக்கங்களில் இடுப்புக்கு நேராக கடுப்புடன் கூடிய ஒரு வித வலி எப்பொழுதும் ஏற்பட்டிருப்பது இந்த வியாதியின் முக்கியக்குறிகளுள் ஒன்று. இந்தவலியானது மேலிருந்து கீழ்நோக்கியும், பின்புறத்திலிருந்து முன்புறமாகவும் கிரமமாகத் தொடர்ந்தோடும்; ஆகவே வயிற்றுப் பக்கத்திலும் கிரமமாக இந்த வலி பரவித் தொந்தரவளிக்கும். பிறகு பீஜகோசங்களிலும் நோவும் வீக்கமும் ஏற்படும். மேலும் மூத்திரத்தின் அளவும், அது இறங்கும் வகையும் நேரங்களும், அதன் தன்மையும் விசேஷமாக மாறுபாட்டையும். போகப் போக ஜ்வரக்குறி சில ஸமயத்திலாவது தொடர்ந்தாவது இருந்துவரும். துடைகள் விருவிருப்பும் மரமரப்பையும் பெறுவதுண்டு. அன்னத்வேஷமும், குமட்டலும், வாந்தியும் தோன்றும். எவருக்கு வியாதி கடுமையாயிருக்கின்றதோ அவர்களைத் தவிர மற்றவர்களுக்கு முற்கூறியுள்ள குறிகள் அனைத்தும் எப்பொழுதும் இருந்துவருவதில்லை. மிகவும் கடுமையான நிலைமையில் ரத்தம் ஸத்திழந்து, இருதயம் பலங்குன்றி, மயக்கம், கைகால் வீக்கம் முதலிய உபத்திரவங்களும் உண்டாகும்.

விஷபாண்டு ரோகம் வ்ருக்கங்கள் வீக்கங் கொள்வதாலும் ஈயச்சத்து முதலிய விஷவஸ்துக்கள் ரத்தத்திற் சேருவதாலும் கில்வழய்வுக்குக் காரணமான ஆமதோஷம் என்னும் விஷம் உடலில் அதிகரிப்பதாலும், மிதமிஞ்சிய லாகிரி வஸ்துக்களின் உபயோகத்தினுலும், மற்ற உட்புற அவயவங்களை போல வ்ருக்கங்களை க்ஷயரோகவிஷம் தாக்கிச் சீரழிப்பதாலும் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. எக்காரணங்களால் இவ்விகாரம் ஏற்பட்டபோதிலும் வ்ருக்கங்களில் தாதுக்ஷயம் ஏதோ, ஒருவரையில் காண்பதும், மூத்திரத்தில் ஓஜோதாது என்கிற ஜீவஸத்து (ஆங்கிலத்தில் அல்புமின் எனப்படுவது) வெளி வருவதும் நிச்சயம். வ்ருக்கங்கள் வியாதி கொள்ளாத நிலைமையில்கூட சிலருக்கு ஓஜோதாது என்கிற வெண் கரு மூத்திரத்தில் வெளிப்படுவதுண்டு; ஆனுலும் இந்நிலைமையில் உள்ள ஸந்தேஹத்தைக் கற்றறிந்த வைத்தியர்கள் மூலம் பரிசோதித்துத் தெரிந்துகொள்வது நலம்.

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.
சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.
ஷி வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி
புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமானுல் R.M.K.
கெற்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணுமலும், தப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானுலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரூ. 2. ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும்.
செலவு வேறு. ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி,
சித்த வைத்திய சாலை, பழனி. PALNI. (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,
,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

எல்லோரைக் காட்டிலும் சன்யாசி பாபாவுக்குப் பெருத்த உற்சாகம். சிறிதளவு பார்த்தவுடனேயே அவன் பலத்த குரலில் தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கலானன். அந்தமாதிரி ஏற்பாட்டைதான் வேறெங்கும் பார்த்ததே கிடையாது என்றன். நான் அந்தக் கூச்சலில் கலந்துகொள்ளா விட்டாலும் மனதிற்குள்ளேயே மிகவும் சந்தோஷமடைந்தேன. ராஜலக்ஷ்மி தன்னுடைய சகோதரனுக்காகச் சமயல் அறையில் சாயா தயாரித்துக் கொண்டிருந்தாள். ஆகையால் அவளுடைய முகபாவம் கண்களில் தென்படவில்லை. என்றாலும் அவளுடைய மனநிலை அங்கிருந்தவர்கள் யாருக்கும் தெரியாமல் போகவில்லை. ரதன் மட்டும் தான் ஒரு மாதிரியாக இருந்தான்: அவன் முன்போலவே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு மூலையில் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

டீ தயார் செய்து முடிந்தது. சாதுஜி மிஞ்சியிருந்த முதல் நாள் தின்பண்டங்களுடன் மௌனமாக இரண்டு டம்ளர் சாயா சாப்பிட்டு விட்டு எழுந்தார். பிறகு என்னைப்பார்த்து "வாருங்களேன், போய் கிராமத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு வருவோம். அணைக்கட்டு கூட தூரத்திலில்லை. அப்படியே ஸ்நானம செய்துவிட்டு வருவோம். அக்கா வாருங்களேன, ஜமீன்தாரியை சுற்றி பார்த்துவிட்டு வருவோம். இங்கே பெரிய மனிதர்கள் அதிக மிருப்பதாகத் தெரியவில்லை, ஆகையால் அதிகமாகச் சங்கோசப் படவேண்டுவதில்லை. நல்ல சம்பத்து. பார்க்கிறதிற்கு ஆசையாக இருக்கிறது" என்றார்.

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டு "அது தெரியும் எனக்கு! சன்யாசிகளுக்கே அதுதானே சுபாவம்" என்றள்.

எங்களுடன் கூட சமயல் காரப் பிராமணன் ஒருவனும் மற்றொரு வேலைக்காரனும் வந்திருந்தார்கள். அவர்கள் சமையல் செய்ய ஆயத்தமானார்கள்.

"இல்லை மகாராஜ், தப்பிப் போய் மீன் சம்பந்தமான சாப்பாட்டை உங்களுக்கு அளிக்க எனக்குத் தைரியமில்லை. ஆகையால் ஸ்நானம் செய்து விட்டு வந்து நானே சமைக்கிறேன்" என்று சொல்லி அவள் எங்களுடன் புறப்பட ஆயத்தமானள்.

அதுவரையில் ரதன் ஒரு பேச்சுக்கூட பேசாமல் எதிலும் கலந்துகொள்ளாமல் இருந்தான். நாங்கள் வெளியே புறப்படும் சமயத்தில் அவன் மிகவும் நிதானமான குரலில் "அம்மா, அந்த அணைக்கட்டில் நீங்கள் இறங்கி ஸ்நானம் செய்யக் கூடாது என்று [illegible] சொல்லுகிறேன்" என்றான். "அதில் பயங்கரமான அட்டைகள் இருக்கின்றனவாம். [illegible] சொல்லுகிறார்கள்" என்றன். நிமிஷத்தில் ராஜலக்ஷ்மியினுடைய முகம் வெளுத்துப் போய் விட்டது.

"இங்கே அவ்வளவு அட்டைகள் இருக்கிறது என்று சொன்னது யார்?" என்றள். ரதன் தலையை ஆட்டி "ஆமாம் அம்மா, அப்படித்தான் கேள்வி" என்றன்.

சாது உடனே "அப்படியா! குளங்களை கூடக் குளிக்கிறீர்களோ?" என்றார்.

ரதனுடைய மனோபாவத்தையும் ஜாதியையும் சாது முன்பே அறிந்திருந்தார். அவர் சிரித்துக்கொண்டு "அம்மா அவன் பேச்சைக் கேட்காதீர்கள். அட்டைகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைப் பார்த்து விடலாம்!" என்றார்.

ஆனல் அவனுடைய 'அக்கா' மேலே ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை. அட்டைகள் என்று சொன்னதும் அவள் அப்படியே அசைவற்றுப் போய் "இன்று வேண்டாம் ஆனந்தா, புது இடம். நன்றாக அறிந்து தெரிந்துகொள்ளாமல் அசட்டு தைரியமாக ஏதாவது செய்வது நல்லதல்ல. ரதன், நீ எழுந்திரு அப்பா. இரண்டு குடம் ஜலம் கொண்டு வந்து விடு!" என்றள்.

"எனக்கு உத்திரவு உனக்கு உடம்பு சரியில்லை. நீ கண்ட ஜலத்தில் குளிக்கக்கூடாது. வீட்டிலேயே இரண்டு சொம்பு விட்டுக் கொண்டு வாயைமூடிக் கொண்டிரு!"

சாது சிரித்துக் கொண்டே "அப்படியானல் நான் தானு மிச்சம்? என்னை மட்டும் தானு அந்த அட்டைகள் இருக்குமிடத்திற்கு அனுப்புகிறய்?" என்றார்.

அவர் சொன்னதில் விஷயம் ஒன்றுமில்லை. ஆனல் திடீரென்று ராஜலக்ஷ்மியினுடைய இரு கண்களும் ஜ்வலிக்க ஆரம்பித்தன. அவள் சிறிது நேரம் மௌனமாகத் தன் அன்பு நிறைந்த பார்வையை அவன் பால் செலுத்திவிட்டு "நீ சகோதரப்பற்றுக்கு மீறிப்போனவன். பெற்ற தாயார் தகப்பனர் பேச்சைக் கேட்காதவன அறிமுகமாகாத ஏதோ ஒரு சகோதரி பேச்சைக் கேட்கப்போகிறய்?" என்றள்.

புறப்படுவதற்குத் தயாராக இருந்த சாது சட்டென்று நின்று "அறிமுகமாகாதவன் என்று அந்தப்பேச்சைச் சொல்ல வேண்டாம் அக்கா! உங்கள் எல்லோரையும் அறிந்து கொள்ளவேண்டும் என்று தான் வீட்டை விட்டுக் கிளம்பினேன். இல்லாவிட்டால் எனக்கு என்ன அவசியமிருக்கிறது சொல்லுங்கள்?" என்று சொல்லி அவர் வேகமாக வெளியே போய்விட்டார். நானும், அவரைப்பின் தொடர்ந்தேன்.

இருவருமாகச் சேர்ந்து கிராமம் பூராவும் சுற்றித் திரிந்தோம். [illegible]

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன

"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம்- இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிருர்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாருமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோல "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2 ஜதை தோடுகள் 2 மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும். இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத் தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக் இனம்.

London Commercial Co.,

(EAB) Post Box 165. (S.M.M) LAHORE (India)

காலம் கழித்தார்கள். தெருவில் ஓடும் நாய் எபபடியோ பிறந்து எப்படியோ சில வருஷங்கள் கழித்து எப்படியோ சாகிறது. அதேமாதிரி இவர்கள் யாதொரு சொத்துமின்றிக் காலம் கழிக்கிருர்கள். இவர்களுடைய கஷ்டமும் ஏழ்மையும் எல்லாவிதமான ஈனத்தனமும் எனக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு சகஜமாகவும் இயற்கையாகவும் படுகிறது! இவ்வளவு பெரிய இழுக்கைப்பற்றி மனதில் கொஞ்சங்கூட வெட்கமில்லை! ஆனல் சாது என் முகத்தைக் கவனித்தாரோ என்னமோ, அது எனக்குத் தெரியாது. அவர் திடீரென்று "அண்ணு, இதுதான் நம்முடைய உண்மையான வாழ்க்கையின் சித்திரம். ஆனல் மனதில் வருத்தப்படவேண்டிய அவசியமில்லை. இவர்கள் ஒவ்வொரு நாளும் கஷ்டம் அனுபவிக்கிருர்கள் என்று நினைக்கிருேம். ஆனல் அப்படியில்லை!" என்ருர்.

நான் கோபமும் ஆச்சரியமும் அடைந்து "நீங்கள் என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்?" என்றேன்.

"என்னைப்போல நீங்களும் நாடு பூராவும் சுற்றியிருந்தால் நான் சொல்லுவது உண்மை என்று உங்களுக்குத் தெரியும். உண்மையில் யார் துக்கம் அனுபவிக்கிருர்கள் தெரியுமா அண்ணு! ஒருவருமில்லை. அதற்காக நாங்கள் இவர்களை கைவிட்டு விட்டோமா? வெகுநாள் இடைவிடாமல் முயன்று பார்த்திருக்கிருேம்" என்று சொல்லி சாது சிரித்தார். ஆனல் நான் அவருடன் சிரிக்க முடியவில்லை. அவர் சொன்னதை அர்த்தம் செய்து கொள்ள முடியாமல் வெட்கமடைந்து போனேன். "இந்தவருஷம் ஜலமில்லாததால் தைமாதம் அறுக்க வேண்டிய தானியம் பாதி 'சாவி'யாகப் போய்விட்டது."

"அண்ணு பகவான் இப்பொழுது தன் பிரஜைகளின் மத்தியில் எவ்வளவு கஷ்டத்தைச உண்டு பண்ணியிருக்கிருர்! அவர்களால் என்ன செய்ய முடியும்? ஜமீன்தாரிகளைக் கட்டிக்

இந்தியா கவர்ன்மேண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பெற்ற

வைத்தியரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Examiner in Medicine & Clinics.)

(Govt. Diploma Examination, Etc)

(Sastriar in Govt. Medical Dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்த்தர பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனம்.

வைத்திய ஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் :: மதராஸ்.

விமானப் படை யெடுப்பைத் தடுக்க



டோப்ருக்கில் வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் விமானப் படையெடுப்பு எதிர்ப்பு பீரங்கிகளில் ஒன்று. இவை பிரதி தினமும் அநேகம் எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்துகின்றன.

கொண்டு கஷ்டப்படுவதை விட அவர்களோடு கஷ்டப்படுவது மேல்" என்ருர்.

நான் மனதிற்குள் பெருமூச்சு விட்டுக்கொண்டு யோசித்தேன். ஜமீன்தாரியும், பிரஜையும் நமக்குத்தானே. ஆனல் முதலிலேயே இந்த பதில் கொடுத்திருக்க வேண்டும் என்று சும்மா இருந்துவிட்டேன்.

அந்தச் சிறிய கிராமத்தைச் சுற்றிக்கொண்டு குளித்துவிட்டு வீடு திரும்பியபொழுது மணி பனிரெண்டு அடித்துவிட்டது. எங்களிருவருக்கும் சாப்பாடு போடுவதற்காக அவள் காத்திருந்தாள். சமையல் பூராவும் அவளே செய்தாள்.

சாது வெகு சாவதானமாக ஆகாரம் செய்தார். சாப்பிட்டுக்கொண்டே 'அக்கா, செல்வம் இருப்பது உண்மையில் நல்லது தான். அதை விட்டு விட்டுப் போவது வெறும் அகங்காரம் தான்" என்ருர்.

"விட்டு விட்டுப் போனல்தான் உங்களை நாங்கள் ஆதரிக்கிருேம்" என்ருள் ராஜலக்ஷ்மி.

சாது சிரித்துக்கொண்டே "சன்னியாசி பக்கிரிகளுக்கு ஒருக்காலும் இடம்கொடுக்கக் கூடாது. இந்தமாதிரி கிராமம் வேறெங்குமில்லை. அதிலும் இந்தமாதிரி வீடு எங்குமில்லை. ரிஷி ஆசிரமம் போலிருக்கிறது" என்ருர்.

அண்டக்கூடாத ஒருவீட்டையும் ஆசிரமத்தையும் ஒப்பிட்டுக் கூறுவதை கேட்டு ராஜலக்ஷ்மி என்னைப்பார்த்து "இந்த ஊர் பூராவும் கீழ் ஜாதியினர்கள் தான் வசிக்கிருர்கள் என்று கேள்விப்படுகிறேன். ஒரு சொம்பு ஜலம் கூட யாரிடமிருந்தும் வாங்க முடியாது. இங்கு வெகு காலம இருக்க முடியாது என்று நினைக்கிறேன்" என்ருள்.

சாது கொஞ்சம் சிரித்தார். ஆனல் நான் மௌனமாக இருந்தேன். ஏனென்ருல் ராஜலக்ஷ்மி போன்ற கருணை நிறைந்தவள் கூட ஏதோ ஒரு பழக்கத்தின் காரணமாக இவ்வளவு வெட்ககரமான வார்த்தையைச் சொல்லக்கூடுமென்று எனக்குத் தெரியும். சாதுவினுடைய சிரிப்பு எனக்கு அர்த்தமாயிற்று. ஆனல் என்னைப் புண்படுத்தவில்லை. வாய் பேசாவிட்டாலும் நான் மனதிற்குள்ளேயே அவளை நோக்கி "லக்ஷ்மி, மனிதர்களுடைய செயல்கள்தான் அசுத்தமாகவும் ஏற்கக் கூடாதனவாகவும் இருக்கின்றன. மனிதர்கள் அப்படி இல்லை. இல்லா விட்டால் பியாரி ஒருக்காலும் இன்று ராஜலக்ஷ்மியினுடைய ஆசனத்தில் வந்து அமர்ந்திருக்க முடியாது; மனிதனை நான் மனித சரீரம் தான் என்று ஒரு நாளும் எண்ணினது இல்லை, இந்தப் படிப்பினை எனக்குக் குழந்தைப் பருவம் முதல் அநேக தடவை ஏற்பட்டிருக்கிறது. ஆனலும் இதை யெல்லாம் வாய்திறந்து அவளிடம் சொல்லவில்லை. சொல்லவேண்டும் என்ற விருப்பமும் எனக்கில்லை."

இருவரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்திருந்தோம். எங்களுக்கு வெற்றிலைப் பாக்கு அளித்து விட்டு ராஜலக்ஷ்மியும் சாப்பிடப் போனள். ஆனல், ஒரு மணி நேரங் கழித்து சாதுஜியைக் கண்டு அவள் எப்படித் திடுக்கிட்டாளோ அப்படியே நானும் திடுக்கிட்டேன். அதற்குள் அவன் எங்கேயோ போய் ஒரு ஆளைக் கூப்பட்டுக் கொண்டு வந்து. மருந்துகள் இருந்த அந்தப் பெரிய பெட்டியை அவன் தலையில் தூக்கி வைத்துத் தானும் புறப்படத் தயாராகவிருந்தான்.

முதல் நாளே பேசின பேச்சுத்தான். ஆனலும் இன்று நாங்கள் அதை மறந்துவிட்டோம். ராஜலக்ஷ்மியினுடைய ஆதரவைத் துறந்து சாதுஜி நிச்சயமற்ற மற்றோர் இடத்திற்கு இவ்வளவு சீக்கிரமாகக் கிளம்பிவிடுவான் என்று நான் எண்ணவே இல்லை. நட்பின் இணைப்பு அவ்வளவு சுலபமாக அறுபடுவதல்ல. ராஜலக்ஷ்மியும் அவ்வாறுதான் எண்ணிக்கொண்டிருந்தாள் போலிருந்தது.

அவள் வருத்தத்துடன், "நீ, போகப்போகிறயா என்ன, ஆனந்தா?" என்று கேட்டாள்.

"ஆமாம் திதி புறப்படுகிறேன். இப்பொழுதே புறப்படாவிட்டால் நான் போய் சேருவதற்குள் இருட்டிவிடும்"

"அங்கே எங்கே தூங்குவாய்? எங்கே தங்குவாய்? உனக்கு வேண்டியவர்கள் யாரும் அங்கில்லையே?"

"போனல் தெரிகிறது"

"மறுபடியும் எப்பொழுது திரும்புவாய்?"

"அதையும் இப்பொழுது சொல்ல முடியாது. காரியம் அதிகமாக இல்லாவிட்டால் என்றுவது திரும்ப முடியும்,"

ராஜலக்ஷ்மியினுடைய முகம் முதலில் சுண்டிப் போய் விட்டது. பிறகு அவள் தன் தலையை வேகமாக ஆட்டி ஒரு நாள் திருமபுவாயா?-ஒருக்காலும் முடியாதா!" என்றுள்.

ஏன் முடியாது என்பது தெரியுமாதலால் சாது பதிலுக்கு வரண்ட சிரிப்பொன்று சிரித்துவிட்டு "போவதின் காரணத்தைத் தான் உங்களிடம் சொன்னேனே திதி" என்ருர்.

"சொன்னயா, பலே, அப்படியானல் போ" என்று சொல்லி விட்டு அழுது கொண்டே வேகமாக உள்ளே போய் விட்டாள்.

கணநேரம் சாதுஜி ஸ்தம்பித்துப் போய் நின்றுகொண்டிருந்தார். பிறகு என்னைப் பார்த்து வெட்கிய முகத்துடன் "நான் போக வேண்டியது மிகவும் அவசியம்" என்ருர்.

நான் தலையை அசைத்து "தெரியும்" என்று மட்டும் தான் சொன்னேன். அதற்கு மேல் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஏனென்ருல் சிநேகத்தினுடைய ஆழம் சிறிதுகாலமானலும் குறைவதில்லை. இது கவிகள் கற்பனை செய்யும் விஷயம் மட்டுமலல. வாழ்க்கையில் உண்மையாகவே நேரிடுகிறது. ஒருவர் போகவேண்டும் என்று சொல்லும் கட்சி எவ்வளவு உண்மையோ அதேமாதிரி போகக்கூடாது என்று தடை செய்பவர்களுடைய கட்சியும் உண்மை.

"நான் போகிறேன் அங்கே காரியம் முடிந்து விட்டால் மறுபடி வருகிறேன். ஆனல் இப்பொழுது அதைப்பற்றி அறிய வேண்டுவதில்லை" என்ருர் சாதுஜி.

"அப்படியே ஆகட்டும்!" என்றேன் நான்.

சாதுஜீ ஏதோ சொல்ல வாயெடுத்து அறை பக்கம் பார்த்துப் பெருமூச்சு விட்டுச் சிறிது சிரித்தார். பிறகு மெதுவாக "வங்காள தேசம் ஒரு ஆச்சரியகரமான பிரதேசம். இதில் போகிற பொழுதே தாய் மார்களும் சகோதரி மார்களும் கிடைக்கிருர்கள்" என்றுசொல்லிவிட்டு வேகமாக வெளியே போய்விட்டார்.

அதைக்கேட்டு நானும் பெருமூச்சுவிட்டேன். 'வாஸ்தவம் தான்' என்று நினைத்தேன். தேசத்திற்காக தாய், சகோதர சகோதரிகளைவிட்டு வெளிவந்தவனுக்கு எங்கோ ஒரு சகோதரி ஏன் இவ்வளவு உபசாரம் செய்கிருள்!

(தொடரும்)

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை		ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனம். முன்பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்.

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

மாருதி

ஜன்ம நக்ஷத்திர பலன், தினசரிக் குறிப்பு-அதிருஷ்ட எண், ரேஸ், பஞ்சு, நூல், பொன், கோதுமை ஷேர் மற்றும் எல்லா வஸ்துக்களின் மார்க்கெட் எதிர்காலம், இதில் வெளி வரும். மாதப் பதிப்பு பிரதி 1 அணு. எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டு தேவை.

மாருதி ஆபீஸ், திருத்தணி.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

மிஸஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனம்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி

பல வியாதிகளைத்தடுக்கவும் . குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஊட்ட | **ஜிஞ்சப்** | அஜீர்ண, பித்த சமனி

உஷ்ண சமனி | **கூலாயில்** | ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

மூடு மந்திரம் ★ ★

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி பேச்சு வன்மை மிகுந்தவர். கேட்டோர் மனதைக் கவரும் சக்தியுண்டு. அதற்குக் காரணம் என்ன? உள்ளும் புறமும் ஒத்திருப்பது தான். கருத்தை வெளியிடவே பாஷையைப் பிரயோகிக்கிறார்; கருத்தை மறைக்கவல்ல. இந்தியப் பிரச்னையில் அவர் மௌனம் சாதித்து வரும மர்மம் இது தான். பேசினால் உள்ளக் கருத்து வெளிவந்து விடும். இந்தியாவைப்பற்றி அவர் கொண்டுள்ள அபிப்பிராயம் என்ன என்பதைப் பூர்வாசிரமத்தில் வெளியிட்டிருக்கிறார் மாறுதலுண்டா? மாறியிருந்தால் பேசத் தயங்கத் தேவையில்லை. பேசாமலே இது வரை காலம் கழித்து வந்தார் பேசவேண்டிய நிர்ப்பந்தம் பிறந்து விட்டது. மனமொப்பி மாறவில்லையென்றே அஞ்சுகிறோம்.

சர்ச்சில் அறிக்கை 12-ம் தேதியன்று வெளியாகியது. வெளியாகுமுன் ஏதேதோ ஜோசியம் சொன்னார்கள். பலிச்சக்கரவர்த்தி பூதானம் அளித்ததைப் பலர் நினைத்துக் கொண்டார்கள். வாமனர் கையை நீட்டியதுதான் மிச்சம்: தாரை விழவில்லை: துவாரம் அடைத்துக்கொண்டு விட்டது. சங்கல்பத்திற்கு அறிகுறி துலங்கவில்லை. அறிகையின் வாசகம் உஷாராக வரையப்பட்டிருக்கிறது. அவரவர் இஷ்டப்படி அர்த்தம் செய்து கொள்ளலாம். முடிவு கூறவில்லை முடிவுக்கு புற்கூட்டியே பலம் கட்டிக்கொள்ள மந்திரி வரப்போகிறார். வரும மந்திரி ஸர் ஸ்டேபோர்டு க்ரிப்ஸ்.

கிரிப்ஸிடத்தில் பலருக்கு நம்பிக்கையுண்டு. தாராளமான மனது; திடமான அபிபபிராயம்; முற்போக்கின் முன் அணியில் நிற்பவர். அவர் இஷ்டப்படி முடிக்க சுவாதீனம் உண்டா? அதில் தான் சந்தேகம் தட்டுகிறது. அறிக்கையின் வாசகத்தைக் கவனியுங்கள். தானாகக் கடமையைச் செலுத்த முன் வந்ததாகக் கூறப்படுகிறது!

சர்ச்சில் கோஷ்டியினர் வேண்டி வரவில்லை என்ற அர்த்தம் த்வனிக்கிறது. தூதுவருவதன் நோக்கமென்ன? முடிவுக்கு இயன்ற அளவு ஆதரவு தேட! ஆதரவு இந்துக்களிடமிருந்து மாத்திரம் அல்ல; சிறுபான்மையோருடையவும் முக்கியமாகமுஸ்லிம்களுடைய ஆதரவையும் பெற. தூதை நிறைவேற்ற யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம் என்று கேள்விக்கு விடையளிக்கப்பட்டிருக்கிறது. சுவாதீனம் அந்த அளவு தானா? தூதின் கருத்தை நிறைவேற்ற சுவாதீனம் உண்டா?

இந்த அறிக்கையிலிருந்து கொள்ளக்கூடிய ஆறுதல் ஒன்றுதான் உண்டு. அது நபரை யொட்டியது. க்ரிப்ஸுக்கு ஏக தேசம் நம்பிக்கை யில்லா விட்டால் புறப்படமாட்டார். பிரிட்டிஷ் மந்திரி சபையில் அவர் வேண்டா விருந்தினர். பீவர் புருக்கைத் துறந்து கிரிப்ஸைச் சேர்க்க நிர்ப்பந்தம் பிறந்ததை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இந்தியப் பிரச்னையைப் பற்றி

ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ்

ஸர் ஸ்டேபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவுக்கு விசேஷ அலுவல் மேல் வருகிறார். இந்திய நிலைமையைச் சமாளிப்பதற்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒருமித்த முறையில் சில பிரேரணைகளைத் தயாரித்திருக்கிறார்கள். இந்தப் பிரேரணைகளுக்கு இந்தியரது சம்மதத்தைப் பெறுவதற்காகவே ஸர் ஸ்டேபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவுக்கு உத்தியோக முறையில் விஜயம் செய்கிறார். ஸர் கிரிப்ஸ் வைசிராயையும் சேனாதிபதியையும் ராணுவ நிலைமை பற்றிக் கலந்து ஆலோசிப்பார். இந்திய அரசியல் சீர்திருத்தம் பற்றி பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை ஏகமனதுடன் செய்த புதிய முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு இந்தியத் தலைவர்களுடன் ஸர் கிரிப்ஸ் விவாதிப்பார்.

முதல் தடவை வந்தபோது

பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையில் ஸ்தானம் வஹிக்கும் ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ் சில வருஷங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்திருந்தார். அச்சமயம் அவர் அநேக தலைவர்களை சந்தித்துப் பேசினார். பம்பாயில் ஜனாப் ஜின்னாவை அவர் வீட்டில் ஸர் க்ரிப்ஸ் போய்ப் பார்த்துப் பேசினார்.

மந்திரி சபையில் அபிப்பிராய பேதமிருந்ததாகவும் செய்திகள் கூறிவந்தன. முடிவு மத்தியஸ்தமாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதற்கு சப்புக்கட்ட வழிதேடியிருக்கிறார்கள். க்ரிப்ஸ் அக்ஷதையை தானே போட்டுக் கொண்டார். காரணமில்லாமல் முன் வந்திருக்க மாட்டார். அரைகுறைப் பிரேரணைகள் இங்கே ஏறாது என்பது அவருக்குத் தெரியும். முடிவுக்கு பலம் தேட இயலா விட்டால் முடிவை மாற்ற பலம் தேடவும் சந்தர்ப்பம் உதவும் என்று நினைத்திருக்க வேண்டும்: அதுவே நம்பிக்கை யளிக்கிறது.

திருவெண்காடு

★

க்ஷேத்திரத்தின் மகிமை

★

நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மகரிஷிகள் ஒரு சமயம் உலகநன்மையை உத்தேசித்து ஒரு வேள்வியைச் செய்தார்கள். அவ்வேள்வியைப் பார்க்க எல்லா முனிவர்களும் வந்தனர். சூதமுனிவரும் அங்கு தோன்றினார் வேள்வி இனிது முடிந்தது. அங்குள்ள மகரிஷிகளனைவரும் சூதபுராணிகரை நன்கு உபசரித்தார்கள். "தங்களிடமிருந்து பல புண்ணிய கதைகளைக் கேட்டு ஆனந்தமடைந்தோம், ஆயினும் இன்னும் கேட்கவேணும் என்று ஆவல் இருந்து வருகிறது, அருள்புரிய வேண்டும்" என்று சூதரைப் பிரார்த்தித்தார்கள்.

"பிறருக்கு உரைப்பதிலும் மற்றவர்களிடமிருந்து கேட்பதிலும் எனக்கு அளவற்ற ஆசையுண்டு, ஆகவே ஸந்தோஷமாய் கேளுங்கள் என்றார் சூதர்."

முனிவர்கள் "எதைத் தெரிந்து கொண்டால் பிரயாஸமின்றி மோக்ஷத்தை யடையலாமோ அவ்வுபாயத்தை உபதேசிக்க வேண்டும்" என மொழிந்தனர். மேலும் சூதர் சொல்லியதாவது "சோழவள நாட்டில் காவிரிப் பூம் பட்டிணத்திற்கருகாமையில் திருவெண் காடென்றொரு ஊரிருக்கிறது, இது மிகவும் பெரும் புண்ணியஸ்தலம். இதில் சிவனுக்கு மிகப்பிரியமுண்டு. கைலாஸத்தையும் மறந்து சிவபிரான் பார்வதியுடன் ஆனந்தம் கொண்டு உலகத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினால் புவநேத தாண்டவத்தை இங்கு செய்கிறார், இது காசி முதலாகிய க்ஷேத்திரங்களில் மிகச்சிறந்தது. ஆகவே இவ்வெண்காட்டில் உள்ள சிவபெருமானை தரிசிப்பதாலும் வெண்காட்டை நினைப்பதாலும், இதில் பிறப்பதாலும், மறிப்பதாலும், இவ்விடத்திலேயே தங்கி பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பதாலும் லகுவாய் முக்தி கிடைத்து விடுகிறது" இதைக் கேட்டு முனிவர்கள் பேரானந்தம் கொண்டு, "அத்தகைய திருவெண்காட்டின் மகிமையை எங்களுக்கு சொல்லுங்கள்" எனப் பிரார்த்தித்தனர்.

சூதர்:-வெண்காடில் மோக்ஷம் மட்டும் ஸுலபமல்ல. இம்மையில் ஸகலபோகங்களும் கிடைக்கின்றன. இந்த சரீரத்துடன் வெகு காலம் ஜீவித்திருக்கலாம். யம பயம் வேண்டாம். இதற்கு சுவேதன் என்ற அரசனும் சுவேதகேது என்ற முனி குமாரனின் கதையே உதாஹரணமாகும். இவ்வெண்காட்டிலுள்ள சிவனையே உபாஸித்து பிரும்மாதி தேவர்களும் தம் தம் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டனர். இவ் வூரில் வேறொரு விசேஷமும் உண்டு. சிவன் தாம் அகோரமூர்த்தியாக அவதரித்து அசுரர்களை கொன்று தேவர்களை அனுக்கிரகித்தார். இவ்வூருக்கிரு புறத்திலும் பெரும் புண்ணியம் வாய்ந்த காவிரி நதியானது பிரவஹிக்கிறது. இவ்வூரில் பல புண்ணிய தீர்த்தங்களுண்டு. அதில் முக்கியமானவை முக்குளமும் மணிகர்ணிகையுமே. எக்காரியங்களிலும் தேவர்களும், எந்த விநாயகரின் அருளைப் பெற்று காரியத்தின் பலனை அடைகிறார்களோ, அவ்விதமே யானும் முதலில் இத்தல விநாயகராகிய, விலங்கு தெறித்த விநாயகரின் மஹிமையைக் கூறுகிறேன்.

பட்டணத்தடிகள்

இத் தலத்தில் இவருக்குப் பெரிய வாரணப் பிள்ளையார் எனப் பெயர். இத் தலத்துக்கு வந்த ஒவ்வொருவரும், இவரை முன்பு வணங்கிய பின்னரே முக்குளங்களிலும், ஸ்நானம் செய்து மறுபடியும் விநாயகர் முதலாக ஈசுவர தரிசனம் செய்வது வழக்கம். இவர் தன்னை தரிசித்தவர்களை ஸர்வ பந்தங்களிலிருந்தும் விடுவிக்கிறார். இதற்கு சேந்தனாரே உதாஹரணமாகும்" என்று சூதர் சொல்ல-அதைக் கேட்ட ரிஷிகள் "சேர்ந்தனர் என்பவர் யார் அவருக்கு எவ்விதம் பந்த மேற்பட்டது. அவரை விநாயகர் எவ்விதம் விடுவித்தார்" எனக் கேட்டனர்.



மிகுந்த புண்ய க்ஷேத்ரமான திருவெண்காட்டுக் கோவிலும் குளமும்.

சூதர்-முன்னொரு ஸமயம் குபேரன் சிவனிடம் சென்று அவரை வணங்கினான். மானிட போகம் உலகில் சிறந்தது, எனவே நானும் அம்மானிட போகத்தை கொஞ்ச காலம், அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். பரமசிவனும் காவிரிப் பூம்பட்டிணத்தில், சிவ நேசன் என்னும் வேளாளச் செட்டி குலத்தில், பிறப்பாயாக என்று சொல்லி மறைந்தனர். குபேரனும் அவ்விதமே சிவநேசனுக்குப் புத்திரனாகப் பிறந்தான் சிவநேசனும் வெண்காட்டுப் பெருமானைதரிசித்து, அதன் பலனாகப பிறந்தமையால் அக்குழந்தைக்கு வெண்காடர் எனப் பெயர் சூட்டினா. வெண்காடரின் இளமைப் பருவத்திலேயே விதி வசத்தால், தகப்பனாகிய சிவநேசன் சிவபதமடைந்தார். சிவநேசனின் மனைவியாகிய ஞான கமலை, கணவனின் வியோகத்தையும் கருதாது வெண்காடரை, கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள் வெண்காடரும் பால்ய வயதிலேயே, செந்தமிழ்க் கடலின் கரை கண்டனர். இவருக்கு இயற்கையவே சிவனிடமும், சிவனடியார்களிமும் பக்தி யுண்டு,

கனவில் சிவதரிசனம்

ஒரு நாள் தன்னிலத்தில் தாயாரும் வெண்காடரும், நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். விடிய ஐந்து நாழிகையிருக்கலாம். வெண்காடர் முன் சிவன் தோன்றினார்: 'வெண்காடரே' என்று அருமையாக அழைத்தார். 'திருவோணம் கூடிய ஸோமவாரத்தன்று பிரதோஷமாகையால், நாளைய தினம் நீ வெண்காடு செல்ல வேண்டும். அங்கோர் முதிய வேதியர் சிவலிங்கமும் விநாயகக் கடவுளையும் கொடுத்து, அதன் பூஜை விதியையும் பஞ்சாக்ஷர மந்திரத்தையுமுபதேசிப்பார். பெற்றுக்கொள்வாயாக' என்று சொல்லி மறைந்தார். உடனே வெண்காடர் எழுந்து ஆனந்தம் கொண்டார். தாயிடம் கனவை அறிவித்தார். திருவெண்காடு வந்தடைந்தார். காவிரியிலும் முக்குளங்களிலும் மூழ்கினார். திருக்கோயிலில் முதிய வேதியராகிய தன் குருநாதனைக் கண்டார். எட்டு அங்கங்களினாலும் வணங்கினார். கனவை தான் கண்டபடி தெரிவித்தார். வேதியரும் வெண்காடருக்கு சிவ தீக்ஷை செய்வித்தார். பஞ்சாக்ஷர மந்திரத்தையும் உபதேசித்தார். விநாயகக் கடவுளையும் சிவலிங்கத்தையும் வெண்காடர் கையிற் கொடுத்து, பூஜாவிதியையும் சொல்லி, அவ்விடம் விட்டகன்றார். வெண்காடரும் கடவுளைப் பெற்று பேரானந்தமடைந்தார். ஈசுவரனைத் தரிசனம் செய்துவிட்டு, காவிரிப்பூம் பட்டிணமடைந்தார்.

திருமணம்

இப்படியிருந்து வரும் நாளில் ஞானகமலை தன் புதல்வனின் யௌவன பருவத்தைக் கண்டு, அவ்வூரிலேயே உள்ள சிதம்பரம் செட்டியாரின் அருமைப் புதல்வியாகிய, சிவகலை என்பவளை வெண்காடருக்கு திருமணம் செய்து வைத்தாள். வெண்காடருக்கு நாற்பது வயதாகி விட்டது. புத்திர சம்பத்து ஏற்படவில்லை. அது கண்டு மிகவும் வருந்தினார். தனதுமந்திரியாகிய சேந்தனுரை அழைத்தார். நான் மனைவியுடன் திருவிடைமருதூர் போகிறேன. நான் வரும் வரையில் என் இல்லத்திலேயே இருந்து, எனது காரியங்களைச் செய்வீராக" என்று உத்திரவிட்டார்.

வெண்காடர் திருவிடைமருதூரடைந்தார். அங்கு கடும் தவம் புரிந்தார். அவருக்கு முன் சிவன் தோன்றினார். "வெண்காடரே! உன் தவத்தால் ஸந்தோஷமடைந்தோம். உனது எண்ணம் அறிந்தோம். நாளைய தினம் இவ்வூரருகாமையிலுள்ள, ஒரு நந்தவனத்தில் ஒரு வேதியனும் அவரது மனைவியும் இருக்கிறார்கள். அவர்களிடம் ஓர் அழகிய குழந்தை இருக்கிறது. அதிகப் பொன் கொடுத்து அக்குழந்தையை "நீ பெற்றுக்கொள்வாயாக" என்று சொல்லி திருக்கோயில் லிங்கத்திலே மறைந்தார்.

சிவபிரான் அதே சமயத்தில் சிவ பக்தியிலீடுபட்டு, சிவனடியார்களுக்கு அன்னமிடத் தன்



திருவெண்காடு க்ஷேத்திரத்தின் மற்றொரு தோற்றம்.



ஸ்ரீ நடராஜரின் ஆநந்தத் தாண்டவம் ; கோவிலில் இந்த அத்புத சித்திரம் இருக்கிறது.

கையில் பொருள் இல்லாது வருந்தும் சிவசர்மருக்கும் கனவில் தோன்றினுர். "நான் ஓர் குழந்தை வடிவத்துடன் உங்களிடம் இருக்கிறேன். அக்குழந்தையை வெண்காடரிடம் கொடுத்து பொருள் பெற்று முன் போலவே சிவனடியார்களுக் கமுத்ளிப்பாய்" என்று கூறி குழந்தை வடிவம் பெற்று "குவா குவா" என்றுகத்தினுர். திடீரென தம்பதிகள்விழித்து பக்கத்தில் குழந்தையைக் கண்டார்கள். ஆனந்தக் கடலில் மூழ்கினுர்கள். குழந்தையை எடுத்துக் கட்டிக்கொண்டார்கள். உலகில் நாமே சிறந்தவர். நமக்கு சிவனே குழந்தையாகத் தோன்றினுர் என்று ஆனந்தித்து, குழந்தைக்கு மருதவாணன் எனப் பெயர் சூட்டினர்.

மருதவாணனைப் பெறுதல்

பொழுது விடிந்தது. சூரியனும் தோன்றினுன். வெண்காடரும் ஸ்நானம் செய்து நித்திய கர்மாக்களை முடித்துக் கொண்டார். அதற்குள் சேந்தனுரும் வெண்காடரின் உத்திரவுப்படி பொருளுடன் வந்து சேர்ந்தார். மூவரும் நந்தவனம் சென்று அங்கு குழந்தையுடன் தம்பதிகளைக் கண்டனர். வெண்காடர் தம்மனைவியுடன் அவர்களை வணங்கினுர். தம் விருப்பத்தையும் தெரிவித்தார். தம்பதிகளும் குழந்தையைகொடுக்க மனம் வருந்தினர். ஆயினும் சிவனுணையைச் சிறமேற்கொண்டு ஒருவாறு ஒப்புக்கொண்டனர் வெண்காடரும் சிவசர்மரிடம் பெரும் பொருள் கொடுத்து, குழந்தையாகிய மருதவாணனைப் பெற்றுக்கொண்டனர். வெண்காடர் குழந்தையைக் கட்டியணைத்து தன் மனைவி சிவகலையிடம் கொடுத்தார். 'இது சிவனருளே' என்றெண்ணி பாலூட்டினுள். பிறகு வெண்காடர் திருவிடைமருதூரிலேயே அன்று தங்கினுர், அன்று சிவதரிசனம் செய்து சிவனடியார்களுக்கு அன்னமளித்தார்.

காவிரிப்பூம்பட்டினம் திரும்புதல்

மறு நாள் அழகிய குதிரைகள் பூட்டிய ரதத்தின் மீதேறி சிவகலையும் வெண்காடரும், குழந்தையுடன் காவிரிப்பூம்பட்டிணம் வந்து சேர்ந்தனர். அதற்குள் சேந்தனுரும்தோரணங்களினுல் பட்டிணத்தை அலங்கரித்து பட்டிணத்து ஜனங்களுடன் எதிர்கொண்டழைத்தார். அது கண்ட வெண்காடர் ரதத்திலிருந்து இறங்கி, பெரியோர்களை வணங்கினுர். அவர்களும் ஆசீர்வதித்தனர். பிறகு எல்லோருடனும் தன்னில்லத்தை அடைந்து, நல்ல முகூர்த்தத்தில் ஜாதகர்மாவைச் செய்து மருதவாணன் என்ற பெயரினுலேயே குழந்தையை அழைத்தனர், தன் இனத்தாருக்கும் ஊரிலுள்ளவர்களுக்கும், ஆடையாபரணங்கள் கொடுத்து விருந்தளித்தார்.

பிறகு மருதவாணனுக்கு கல்வி கற்பிக்கும் பொருட்டு, சில உபாத்தியாயர்களை நியமித்தார். மருதவாணரும் சிறுவயதிலேயே சர்வ கலைகளையும் நன்கறிந்து கொண்டார். இவ்விதம் சில ஆண்டுகள் கடந்தன. மருதவாணர் தகப்பனை நமஸ்கரித்து "நமது குல தர்மத்தின் படி மரக்கலமேறி பொருள் சம்பாதிக்கப்போகவேண்டும், இல்லையேல் கைப்பொருள் அழிந்துவிடும், உத்திரவு கொடுங்கள்" என வேண்டினுர்.

கப்பல் யாத்திரை

உடனே வெண்காடர் சில வியாபாரிகளுடன், இவரைச் சேர்த்து வேண்டிய பொருள் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினுர். கடலில் நெடுந்தூரம் சென்றதும், அவரவர்கள் ஒவ்வோரிட மிறங்கினுர்கள். மருதவாணரும் ஓரிடமிரங்கி பொருள்களனைத்தையும், கோவில் கட்டுவதிலும் சிவனடியார்களுக்கு உதவுவதிலும் செலவழித்தார். அதுவுமன்றி தன் கப்பலில் வரட்டியையும், அவல்கடலையையும், ஏற்றி வைத்திருந்தார்.

வேறிடம் சென்றிருந்த வணிகர்களும் பொருள் ஸம்பாதித்து தம் தம் மரக்கலமேறி மருதவாணரின் சமீபம் வந்தனர். மேலும் அவர்கள் மருதவாணரைப் பார்த்து "நீங்கள் என்ன ஸம்பாதித்திருக்கிறீர்கள்?" என்று கேட்க, மருதவாணர் வரட்டியையும் அவல் கடலையையும், காண்பித்தார்,

பிறகு அவ்வணிகர்கள் "மருதவாணருக்கு புத்திமாருட்டம் ஏற்பட்டிருக்கிறது ஆகவே நாமிவரை விட்டு பிரிவது ஸரியல்ல" என்றெண்ணி காவேரிப்பூம்பாட்டினத்தை நோக்கி கப்பலைச் செலுத்தினுர்கள் மருதவாணர் அவர்கள் கர்வத்தையடக்கவேண்டுமென்றெண்ணி, வெகுநாள் நீடித்த மழையும் புயலும் அடிக்கும்படிச் செய்தார். அதனுல் மரக்கலம் வழி தடுமாறி, காற்றின் வசம் வெகு தூரம் சென்று விட்டது. அதிக நாள் மழை பெய்ததால் வணிகர்களின் ஆகாரம் பெரும் பாகம் செலவழிந்து விட்டது. விறகுகள் செலவழிந்து விட்டன. அவர்கள் மருதவாணரிடம் சென்று, "விரட்டி கொஞ்சம் கொடுங்கள்" என்று கேட்க, அதற்கு மருதவாணர் இடைக்கு இடை பொருள் பெற்றுக்கொண்டு சீட்டும், அவர்களுடைய முத்திரையிட்டு பெற்றுக் கொண்டு, விரட்டிகளைக் கொடுத்தார். பிறகு கொஞ்ச நாளில் எல்லோரும், காவிரிப் பூம்பட்டிணம் வந்து சேர்ந்தனர்.

திரும்பி வந்தது

வெண்காடரும் தனது புதல்வன் வருவதை அறிந்தார். தானே துறைமுகம் சென்ருர். எல்லோரும் தத்தம் பொருள்களுடனிறங்கினர் அதிலொருவனேடி வந்து, "ஐயனே, உமது புதல்வன் மருதவாணன் மனத்தெளிவின்மை காரணத்தால், பொருள்களனைத்தையும் வீண் செலவு செய்துவிட்டு, விரட்டியையும், அவல் கடலையையும், கொண்டு வந்திருக்கிருன்" என்று கூறினுன்.

வெண்காடர் மருதவாணரிடம் சென்று, அவனை மார்போடணைத்து தன்னில்லம் சேர்ப்பித்தார். காவலர்களினுல் மருதவாணர் வெளியே போகாதிருக்கும்படி, பார்த்துக் கொள்ளச் சொல்லி துறைமுகம் சென்ருர் கப்பலில் உள்ள பெட்டிகளை எடுத்துப் பார்த்தார். விரட்டிகளும் அவர் எழுதிக் கொடுத்த ஓலைச் சுருளும் இருந்தன. விரட்டியைப் பெட்டியில் வைக்க யாது காரணம் என ஆலோசித்தார். ஒரு விரட்டியை ஒடித்தார். சூரியனுக் கொப்பான ஒளி வாய்ந்த, மாணிக்கக் கற்கள் இருக்கக் கண்டார். வணிகர்களின் பேச்சினுல் குழந்தையை என்னவோ எண்ணினேமே, நமது புதல்வன் மிகவும் புத்திமான் என்று சிலாகித்தார். மருதவாணரிடம் ஆசை கொண்டு விரைவில் வீடு வந்துசேர்ந்தார்.

மருதவாணரின் மறைவு

அதற்குள் மருதவாணர் ஒருபெட்டியைத் தாயிடம் கொடுத்து "இதைத் தந்தையிடம் கொடுங்கள்" என்று சொல்லி மறைந்தார். வெண்காடரும் தமது இல்லம் வந்து சேர்ந்தார். புதல்வனைக் காணவில்லை. காவலர்கள் திக்குற்றனர். இப்படியிருக்கும் தருவாயில் சிவகலை தன் கணவனிடம் வந்து "நம்து குழந்தை இப்பெட்டியைக் கொண்டு வந்திருக்கிருன். இதை உங்களிடம் கொடுக்கச் சொல்லி, வெளியில் சென்றிருக்கிருன்" எனக் கூறி கணவனிடம் பெட்டியைக் கொடுத்தாள்.

வெண்காடர் அம்மரப்பெட்டியைத் திறந்தார். அதில் காதற்ற ஊசியும், ஒரு ஓலைச் சுருளும், இருக்கக் கண்டார். ஓலைச் சுருளை எடுத்துப் படித்தார். அதில் "காதற்ற ஊசியும் வராது காணும் கடை வழிக்கே" என்று வரைந்திருந்தது. அதைப் படித்ததும், மூன்று வித ஆசைகளும் அவரை விட்டகன்றன.

உடனே வெண்காடர் தமது மந்திரியாகிய சேந்தனுரை வரவழைத்தார். "என் பொருள் யாவற்றையும் எல்லோருக்கும் கொடுத்துவிடு" என்று உத்திரவிட்டார். சேந்தனுரும் தன் கடமை என்று, அவரது பொருள்களை ஜனங்களுக்கு வாறி விட்டார்.

வெண்காடர் துறவியானது

வெண்காடர் தன் ஆடை ஆபரணங்களை களைந்தெறிந்தார். இதைக்கண்ட தாய் மிக வருந்தினுள். பட்டிணத்தடிகளைக் கூப்பிட்டாள். "எனக்கு வயதாகி விட்டது. என் உத்திரக் கிரியைகளை முடித்து பின்னர் உன் விருப்பப்படி செய்யலாகாதா." என்று சொல்ல அதற்கிணங்கி "இவ்வூரிலேயே இருப்பேன்" என்று கூறி வெளிக் கிளம்பினுர். அவரது மனைவியும் அவருடன் கிளம்பினுள். வெண்காடர் அவளுக்கு பல ஸமாதானங்கள் கூறி, அவளை அனுப்பி விட்டு அவ்வூரிலேயே தங்கினுர். சில தினங்கள் கழிந்ததும் பட்டிணத்

(28-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி

★

தந்தையின் அன்பு

★

தணிகாசலம்

ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவருக்கு சுந்தரம் என்ற குமாரன் இருந்தான். மிக செல்லமாக வளர்ந்து வந்தான். நாளடைவில் பல சிநேகிதர்களுடன், துர் நடவடிக்கைகளில் செலவு செய்து வந்தான். நல்ல யுக்த வயது வந்ததும், அவனுக்கு தகப்பனுர் விவாகம் செய்து வைத்தார். எனினும் அவனுடைய துர் நடவடிக்கைக்கான செலவுகள் குறையவில்லை. அவன் தகப்பனுர் விருத்தாப்பியராதலால், தன் சொந்த ஆஸ்தியில் கால் பாகம், அவன் பேரில் எழுதி வைத்தார்.

இப்படியாக சுந்தரம் அமோக செலவு செய்து வந்ததின், விளைவாக அவனுக்கு தன் தகப்பனுர் கொடுத்த, ஆஸ்தியெல்லாம் போய் கடனுளியானுன். இவன் செயல்களின் காரணமாக, அவன் தகப்பனுருக்கு மனவேதனை உண்டாயிற்று. அதன் விளைவாக அவர் நோய் கண்டு, மரணவஸ்தையில் படுத்தப் படுக்கையாய் இருந்தார். அத் தருவாயில் அவர் தன் குமாரனை யருகில் அழைத்து "சுந்தரா, உன



க்கு எந்த காலத்தில் அவமானம் நேருகிறதோ, அக் காலத்தில் நீ நமது மாளிகைக்கு வடமூலையிலுள்ள, ஒரு அறையின் மச்சியில் தொங்கவிடப் பட்டிருக்கும் கயிற்றைக் கொண்டு தூக்கிட்டுக்கொள். மானம் போய் உயிர் வாழாதே." என்ருர். பின்பு சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர் துறந்தார். அவருக்கு செய்ய வேண்டிய அந்திய கிரியைகளை சுந்தரம் செய்து முடித்தான்.

சில நாட்களுக்கு பிறகு சுந்திரத்திற்கு கடன் வாங்கியதின் நிமித்தம், கடன்காரர்கள் அவன் பேரில் நீதிபதியிடம் மனுசெய்து பொன் பொருள் சொத்துக்கள் எல்லாவற்றையும், தங்கள் கடனுக்காக ஸ்வீகரித்து விட்டனர்.

ஆதலால் இப்போது சுந்தரன் ஏகாங்கி ஆனுன். மனைவி குழந்தைகளை தன் மாமனுர் வீட்டிற்கு அனுப்பி விட்டான். தன் தந்தை சொல் கவனத்திற்கு வந்தது. உடனே தன் மாளிகைக்கு வடக்கு மூலை ஒரு அறைக்குச் சென்று பார்த்தான். தந்தை சொற்படி மச்சியிலிருந்து; ஒரு கயிறு தொங்க விடப்பட்டிருந்தது. முதலில் சற்று தயங்கினுன், பின்பு ஒருவாறு மனம்தேறி தன்னையும் உலகத்தையும் மறந்தான். கயிற்றை தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு தூக்



கிட்டுக் கொண்டான். ஆனுல் அவன் சாகவில்லை. ஏனெனில் மச்சுக் கூட்டில் கட்டப்பட்டிருந்த கயிறுடன், மச்சுக் கூட்டு கதவு திறந்து விழ சுந்தரம் கழுத்தில் மாட்டிக் கொண்ட, கயிறுடன் தரையில் நின்ருன். உடனே மச்சுக் கூட்டிலிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. சுந்தரத்தின் கழுத்தில் மாட்டியிருந்த, கயிறு இறுகாததினுல் அவன் இறப்பதற்கு ஹேதுவில்லை. ஆகையால் அவன் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்து பார்த்தான். அதில் அவன் தகப்பனுர் கையொப்பம் இருந்தது. அதில் இருந்தது பின்வருமாறு:—

"மைந்தனே! நீ மிகவும் செலவாளியும் துர்த்தனுகவும் நடந்து கொண்டதின் நிமித்தம், உனக்கு என் ஆஸ்தியில் கால் பாகம் கொடுத்தேன். மிகுதி மூன்று பாகத்தையும் உனக்கு பின்னுல்வரும் துன்பத்தைக் கருதி நம் தோட்டத்தின் மூலையிலுள்ள இந்த அறையில் புதைத்திருக்கிறேன். மச்சியிலுள்ள கயிறு கதவுடன் நீ தூக்கிட்டுக் கொள்ளும் போது திறந்து, இந்த காகிதம்விழும். நீ மற்ற மூன்றுபாக ஆஸ்தியையும் பெற்று, துர்பழக்கங்களை விலக்கி, இனி மேலாவது புத்திமானுய் நடந்து கொள்வாயாக" என்றிருந்தது இதைக் கண்ட சுந்தரம் தன் தந்தையின் நன்றியை எண்ணி ஆனந்தம் கொண்டான். தன் கழுத்திலிருந்த கயிற்றை விலக்கி, அந்த அறையில் பூமியைத் தோண்டினுன். ஒரு பெரிய பாத்திரத்தில் பொன், பொருள், ஆபரணங்கள், நாணயங்கள் நிறைய இருந்தன. அதைக் கொண்டு தன் தன் மனைவி மக்களுடன் புத்திமானுய் நெடு நாள் சுகமாக வாழ்ந்து வந்தான்.

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி ஏன் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய மாயக் கண்ணுடியின் உதவியால் நீங்களே எஜமானுகிவிடுவீர்கள். இந்த மாயக் கண்ணுடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகையைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். நீங்கள் ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானுலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, ஜோதிஷர் உதவியை நாடாமலே நடந்தவைகளையும், நடக்கப்போவதையும் கண்டறியலாம். இதைக் கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும், சிநேகிதர்களுடனும் கூடப்பேசலாம். உங்களுக்குச் சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்க முடியும். இதைவைத்துக்கொண்டால் யுத்தத்தில்வெற்றி, வியாபாரம் கல்யாணம் முதலியவற்றில் வெற்றியடையலாம். புதையல் இருக்குமிடத்தையும் கெட்டுப்போன சாமான்களும், அதிர்ஷ்டநம்பர்களும் கண்டுபிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். விலை ரூ. 2/8. ஸ்பெஷல் ரூ. 4/8. போஸ்டேஜ் தனி. இன்றேஒன்றுக்குஎழுதுங்கள். பர்மா, சிலோன் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

SHRI MAHAMUNI JYOTISH ASHRAM, (S. M. W) DINA NAGAR. PUNJAB.
(B P S)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்
Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். போன் 86257.
திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தேப்பக்குளம்.

கே. சுவாமிநாதன் & கோ
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.





பதியும் கதியும் விதியால் வரலாம்

ப்ரியதர்ஸிகை

மஹாமஹோபாத்யாய
★ ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார் ★

கி. பி. ஆரும் நூற்ருண்டின் இறுதியில் கன்யாகுப்ஜ தேசத்தை ஆண்டு வந்த மஹாராஜ கவி ஹர்ஷ வர்த்தனன் எழுதிய மூன்று ரூபகங்களுள் இந்த "ப்ரிய தர்சிகை" என்ற நாடிகையும் ஒன்று. இதில் நான்கு அங்கங்கள் உள்ளன. இங்கு மொழிபெயர்த்திருப்பது இரண்டாமங்கம். இதில் நாயகன் வத்ஸராஜன் உதயணன். நாயிகை ப்ரியதர்சிகை. இவள் அங்க தேசத்தரசனுடைய பெண். இவளை வத்ஸராஜனுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தான் இவளுடைய தகப்பன். கலிங்கநாட்டரசன் தனக்குத் தரும்படி நிப்பந்தித்தான், அங்க நாட்டான் மறுக்கவே இருவர்க்கும் போர் நிகழ்ந்தது. அப்பொழுது அங்க நாட்டானின் கஞ்சுகி, இந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வத்ஸராஜனிடம் செல்லப் புறப்பட்டான். வழியில் அங்க நாட்டானின் நண்பனன விந்தியகேது என்ற காட்டரசனுடைய வீட்டில் தங்கிவிட்டு, ஸ்நானம் செய்ய அகஸ்திய தீர்த்தம் சென்ருன். அப்போது விந்தியகேதுவை எதிர்க்க வத்ஸராஜனுல் அனுப்பப்பட்ட ஸேனுபதி விஜயஸேனன் விந்தியகேதுவைக் கொன்று இந்தப் பெண்ணைச் சிறைப்படுத்தி உஜ்ஜயினிக்கு அழைத்து வந்தான்: அரசனும் இவளை அரசியிடம் ஒப்படைத்தான். இது முன்பு நடந்த விருத்தாந்தம்.

விதூஷகன் வருகிருன்:

விதூஷகன்:—"நியமத்துடன் உபவாஸ வ்ரதம் கொண்டிருக்கும் மஹாராணி வாஸவதத்தை ஸ்வஸ்திவாயனம் (க்ஷேமத்தைக் கருதி அந்தணர்க்கு அளிக்கும் கொழுக்கட்டை முதலியன) கொடுக்க என்னை அழைக்கப் போகிருள்" என்று இந்தீவரிகை சொல்லிப்போனுள். ஆகையால் தாராகிருஹம் என்னும் தோட்டத்துக்குப் போய் அங்குள்ள வாவியில் ஸ்நானம் செய்துவிட்டுத் தேவியினருகு சென்று வைதிக வேஷம் போடவேண்டும். இல்லாவிடில் என் போன்றவர்களுக்கு அரமனையில் தானம் வழங்குவார்களோ? (திரைப் பக்கம் நோக்கி) ஓ! எனது உயிர்த்தோழன் அரசன், தேவியின் பிரிவால் வருந்தும் மனத்தை ஆற்றி விநோதிப்பிக்க தாரா கிருஹ உத்தியானத்தை நோக்கியே வருகின்ருன். ஆகவே, அவனுடன் கூடவே சென்று என் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும்.

(காதற்சோர்வுடன் அரசன் வருகின்ருன்.)

அரசன்:—எனது ப்ரியையான வாஸவதத்தை இப்பொழுது வ்ரதோபவாஸம் செய்து வருவதால் இவளுடைய உடம்பு இளைத்திருக்கிறது: முகம் வெளுத்து விடியற்காலை வெண்மதி போல் ஒளிகுறைந்து காண்கிறது. இவளால் மெதுவாகத்தான் பேச முடிகிறது. மங்களார்த்தமான ஆபரணம் மட்டுமே அணிந்து கொண்டிருக்கிருள், என்னைக் காண இவளுக்கும் பேரவா பிறந்திருக்கலாம், இந்நிலைமை முற்காதல் நிலைமையை (பூர்வாநுராகம்) ஒத்திருக்கின்றது, இத்தகைய தேவியைக் காண எனக்கு எண்ணம் எழுகின்றது,

விதூஷகன்:-(அருகுசென்று) நண்பா! உனக்கு க்ஷேமம் உண்டாகுக, நீ மேன்மைபெற்று வளருக,

அரசன்:—(பார்த்து) வஸந்தகா! மிகவும் ஸந்தோஷமுள்ளவனுகக் காணப்படுகின்ருயே, காரணம் என்ன?

விதூஷகன்:— அரசி அந்தணனை அர்ச்சிக்கப்போகின்ருள்.

அரசன்:—அதனுல் என்ன?

விதூஷகன்:- (கர்வத்துடன்) ஏய்! நான் இப்பேர்ப்பட்ட பிராமணனல்லவா? ஸாதாரண பிராமணனு? நான்கு வேதம் ஐந்து வேதம், ஆறு வேதம் கற்றறிந்த பிராமணர்கள் ஆயிரக் கணக்காக அரண்மனையில் இருக்கையிலும் தேவி என்னையன்ருே முதன் முதல்வாயனை பெற வீரவழைக்கின்ருள்.

அரசன்:—(நகைத்து) வேத எண்ணிக்கையைச் சொன்னதிலிருந்தே உனது பிராமணத்தனம் வெளியாகின்றதே! ஏ மஹாப் பிராமணு! வா. தாரா கிருஹோத்தியானம் போவோம்.

விதூஷகன்:—உனது கட்டளைப்படியே.

அரசன்:—முன்பு நட.

விதூஷகன்:-வா. போவோம். (நடந்து, கண்ணுற்று) தோழா! இதோ பார்—இந்த உத்தியானம் எத்துணை அழகாயிருக்கின்றது? இங்கு உட்கார இட்டிருக்கும் கற்பாறை மீது இடைவிடாது பூமாரி பொழிகிறது, மகிழ மலர்ஜாதிப்பூ இவைகளின் பரிமளத்திலீடுபட்டு வண்டுகள் இவற்றின் மீது வதியவே பாரம் தாங்கமாட்டாது அம்மலர்கள் உதிர்கின்றன. தாமரை மலர்களைத் தடவிவரும் காற்று வலிதாக வீசுகையால் செம்பருத்தி மொட்டுகள் மலர்கின்றன. பச்சிலை மரங்கள் அடர்ந்து நிற்பதால், இங்கு வெய்யில் வெளிச்சம் விழுவதில்லை.

அரசன்:—நண்பா! நன்கு நவின்ருய். இதோ பார்! தரை முழுதும் ஸேபாலிகை மலர்களின் காம்புகள் விழுந்து, நிலமே பவளக் கொடியின் சிறு சிறு துண்டுகளால் மூடப்பட்டாற்போலக் காண்கின்றது. ஏழிலைப் பாலைப் பூக்களின் பரிமளம் யானையின் மத ஜல வாஸனையைப் போலக் கமழ்கின்றது. வண்டுகளெல்லாம் மலர்ந்த தாமரைப் பூப்பொடி படிந்து பொன்னிற் பெற்றவைகளாய் அம்மலர்களிலுள்ள தேனைப் பருகி மதம் பூண்டு மதுரமாக முரலுகின்றன.

விதூஷகன்:—தோழா! இதோ பார்! ஏழிலைப் பாலை மரத்திலிருந்து புஷ்பங்கள் இடைவிடாது இலைகள் வழியாக விழுவதைப் பார்த்தால், 'மழை நீர்த்துளிகள் இலைகளிலிருந்து சொட்டுகிருப் போலத் தோன்றுகிறது.

அரசன்:—நன்கு கவனிக்கின்ருய். இதோ பார்! பசும்புற்றரை மரகதமேடை போல் விளங்குகிறது. இந்தப் புல்தரை மீது செம்பருத்திப் பூக்கள் விழுந்திருப்பது, தம்பலப் பூச்சிகள் தங்கியிருப்பதை ஒத்திருக்கிறது.

இரண்டாம் காட்சி

இந்தீவரிகை என்ற சேடியும், ஆரண்யகை (வனத்திலிருந்து வந்தவள்) என்ற ப்ரியதர்சிகையும் வருகிருர்கள்.

சேடி:—"அடீ! இந்தீவரிகே! இன்று நான் அகஸ்திய மஹர்ஷிக்கு அர்க்கியம் கொடுக்க வேண்டும். ஆகையால் நீ போய் ஸேபாலிகை மலர் கொய்து கொண்டு சீக்கிரமாக வா. இந்த ஆரண்யகையும் தாராகிருஹோத்யானத்திலுள்ள வாவியிலிருந்து தாமரைப் பூக்களை, ஸூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பாகவே பறித்து வரட்டும்." என்று தேவி (வாஸவதத்தை) கட்டளையிட்டிருக்கிருள். ஆரண்யகைக்கோ அந்த தடாகமிருக்குமிடம் தெரியாது. அவளைக் கண்டால் இரக்கமுண்டாகிறது. ஆகவே அவளை அவ்விடத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறேன். அடீ! ஆரண்யகே! இப்படி வா.

ஆரண்யகை:-(உள்ளம் பதறி கண்ணீருதிர்த்து, மனத்துள்) அம்மாதிரி சிறந்த குலத்தில் பிறந்து அன்னியரை ஆக்ஞாபித்துக் கொண்டிருந்த நான், இப்பொழுது இதரரிடும் கட்டளைக்கு இணங்கி நடக்க வேண்டியவளாயிருக்கிறேன். தெய்வம் எது தான் செய்யாது. அல்லது தெய்வத்தை இகழ்வானேன். என் மீதன்ருே குற்றம்! இந்நிலைமையை அறிந்து நான் என் உயிரை விட்டிருக்க வேண்டாமோ. இப்பொழுதோ இது செய்ய முடியாது, இவ்வாறு வேலைக்காரியாக இருந்தாலும் இருக்கலாமேயன்றி, எனது உயர்ந்த வம்சத்தை வெளிப்படுத்தி என்னைத் தாழ்த்திக் கொள்ளலாகாது. வேறு கதி இல்லை. இட்ட கட்டளையை ஈடேற்றுகிறேன்.

சேடி:—ஆரண்யகே! இப்படி வா.

ஆரண்யகை:—இதோ வருகிறேன். (தளர்ச்சியுடன்) தோழீ! இன்னும் எவ்வளவு தூரத்திலிருக்கிறது தாமரைத் தடாகம்?

சேடி:—இதோ கிட்டவே இருக்கிறது. ஸேபாலிகைப் படர்ப்பினுல் காண முடியாமல் மறைந்திருக்கிறது வா. இதில் இறங்குவோம். (இருவரும் இறங்குகின்றனர்.)

அரசன்:—நண்பா! என்னமோ ஆலோசித்துக் கொண்டிருக்கின்ருயே? நான் சொன்னது காதில் விழவில்லையா!

விதூஷகன்:-(கோபத்துடன்) நீ அதையும் இதையும் பார்த்துக் கொண்டு மலங்கிய மனத்தை மகிழ்விக்கின்ருய். பிராம்மணனை எனக்கோ ஸ்வஸ்திவாயனை வேளை மீறிப் போகிறது. ஆதலால் நான் வாவியில் குளித்து விட்டுத் தேவியினருகு செல்ல வேண்டும்.

அரசன்:—அடே அசடே! நாம் தான் வாவிக்கரைக்கு வந்து விட்டோமே தெரியவில்லையா? எல்லாப் பொறிகளும் இன்பமுறுகின்றனவே. தையலார் தண்டையொலியை ஒத்த ஹம்ஸங்களின் இனிய தொனி காதுகளை ஸுகப்படுத்துகின்றது, கரையிலுள்ள மரங்களின் இலைகளிடையில் புலப்படும் மாளிகை வரிசை, கண்களைக் களிப்பிக்கின்றது. தாமரை மலர்களுடைய நற்பரிமளம், மூக்குகளுக்கு ஸுகத்தை அளிக்கின்றது. நீர்த்துளி நிறைந்த காற்று உடலைத் தடவி உகப்பை உண்டாக்குகின்றது. வா, வாவியருகு செல்வோம். (நடந்து கண்ணுற்று) தோழா! பார்! மலர்ந்த தாமரைப் பூக்கள் நிறைந்து மனதைக் கவரும் இந்த வாவி உத்தியான தேவதையின் கண்ணே இது என்று ஐயுறுமாறு விளங்குகிறது இதனைக் கண்ட மாத்திரத்திலேயே என் உள்ளம் உகக்கின்றது.

விதூஷகன்:—(வியப்புடன்) அதோ ஒரு காரிகை காணப்படுகிருளே. இவள் யார்? வண்டு போல் கருத்து வாஸனை நிரம்பிய கூந்தலும், பவளக் கொடி போன்று சிவந்த தளிரொத்த உள்ளங்கையும், கொடிபோல

நீண்டு மெல்லிய கையும் உடையவளாயிருக்கின்ருளே! உத்தியான தேவதையே நம் கண்ணிற்படுமாறு இங்ஙனம் ஸஞ்சரிப்பதாயிருக்குமோ?

அரசன்:—(ஆவலுடன் பார்த்து) தோழா! ஒப்புயர்வின்றி விளங்கும் இவளது ரூபத்தைப் பார்த்தால் பலவித ஸந்தேஹங்கள் உதிக்கின்றன. எனக்கும் ஒன்றும் புரியவில்லை. பூலோகத்தைக் காணக் கருதி பாதாளத்திலிருந்து கிளம்பி வந்த நாககன்னிகையோ இவள்? இல்லை, இல்லை நான் முன்பு பாதாள லோகம் சென்றிருக்கிறேன். இத்தகைய ரூபவதி அங்கு கிடையாது. நிலாவே இவ்வுருவெடுத்து இங்கு வந்திருக்குமோ? இல்லை இல்லை. பகலில் நிலவு நிலவாது. இவள் கையில், தாமரைப்பூ இருப்பதை ஆலோசித்துப் பார்த்தால் ஒரு ஸமயம் இவள் லக்ஷ்மியாயிருப்பாளோ என்ற எண்ணம் எழுகின்றது.

விதூஷகன்:—(கவனித்துப் பார்த்து) நம் தேவியின் வேலைக்காரி இந்தீவரிகையும் கூட வருகின்ருள். நாம் இந்தக் கொடிப் படர்ப்பில் மறைந்து கொண்டு பார்ப்போமே, (இருவரும் அவ்வாறே செய்கின்றனர்.)

சேடி:-(தாமரையிலை யொன்றைப் பறித்துக் கொண்டு) அடீ! ஆரண்யகே! நீ தாமரைப் பூக்களைப் பறித்தெடுத்துவா! நான் இந்த இலையில் ஸேபாலிகை மலர்களைக் கொய்தெடுத்துக் கொண்டு தேவியருகு செல்கின்றேன்.

அரசன்:—நண்பா! பேச்சுக் குரல் கேட்கின்றது. கவனித்துக் கேட்போம், ஒரு சமயம் இதிலிருந்தே விஷயம் வெளியாகக் கூடும்.

(சேடி போகத் தொடங்குகிருள்)

ஆரண்யகை:— இந்தீவரிகே! நீ இல்லாமல் நான் மட்டும் தனித்திருக்க முடியாது.

சேடி:—(குறுநகையுடன்) தேவியின் எண்ணப்படி காரியம் நிறைவேறுமானுல், நீ வெகு காலம் என்னை விட்டுப் பிரிந்து தானிருக்க நேரிடும்.

ஆரண்யகை:—(வருத்தத்துடன்) தேவியின் எண்ணம் என்ன?

சேடி:— "விந்தியகேதுவின் பெண்ணுக்கு மணம் புரிய வயது வந்தால் என்னிடம் தெரிவிக்கவேண்டும்" என்று அரசர் தேவியிடம் சொல்லியிருக்கிருராம். இப்பொழுது இவளுக்குத் தக்க வயது வந்திருப்பதால் இந்த விஷயத்தை மஹாராஜாவுக்கு நினைவூட்டவேண்டும். அவர் இவளுக்குத் தகுந்த புருஷனைப் பற்றிச் சிந்திப்பார். என்று அரசி பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன்.

அரசன்:— (ஸந்தோஷத்துடன்) ஓ ஹோ! இவள் விந்தியகேதுவின் பெண்ணு! (பச்சாத்தாபத்துடன்) நான் நெடுநாளாக ஏமாந்து போய்விட்டேன் தோழா! கன்னிகையை காண்பதில் குற்றமொன்றுமில்லை. இப்பொழுது அச்சமின்றி அமைதியாக இவளைப் பார்ப்போம்.

ஆரண்யகை:— (காதுகளைப் பொத்திக்கொண்டு, கோபத்துடன்) அம்மா! நீ போ. ஒவ்வாத வார்த்தைகளை உளறிக்கொட்டும் உன்னுல் ஒரு பயனுமில்லை.

(சேடி கொஞ்ச தூரம் சென்று ஸேபாலிகை மலர் கொய்கின்ருள்.)

அரசன்:—ஆ ஹா! இவளுடைய உள்ளடக்கத்தைக் கவனித்தால், இவள் நற்குடியில் பிறந்தவளென்பது நன்கு வெளியாகிறது.

(ஆரண்யகை தாமரைப்பூ பறிக்கின்ருள்.)

விதூஷகன்:—நண்பா! பார் பார்! ஆச்சரியம், ஆச்சரியம். இவள் பூப்பறிக்கையில் இவளுடைய கைகளின் காந்தி ஜலத்தில் பரவவே, இதனுல் ஏற்கெனவே உள்ள தாமரைப்பூக்களின் காந்தி தாழ்ந்து விடுகிறது.

அரசன்:—உண்மை, உண்மை. இவள் சந்திரமூர்த்தியைப் போலக் காணப்படுகின்ருள். இவளுடைய கண்ணிலிருந்து, அமுதம் பெருகுவது போல் காந்தி சொட்டுகிறது, இவளுடைய மேல் வஸ்திரம் நழுவவே, மேக மறைவிலிருந்து வெளிப்பட்ட சந்திரமூர்த்தியையொப்பப் புதியவளாக இவள் புலப்படுகின்ருள், இவளுடைய கரஸ்பர்சம் நேர்ந்தும் தாமரைப் பூக்கள் குவியாதிருப்பது அத்புதம். (கரம்=கை, கிரணம்)

ஆரண்யகை:—(வண்டுகள் மொய்ப்பதினுல் சிரமம் அடைந்து) அந்தோ! அந்தோ! இந்தப் பொல்லா வண்டுகள் தாமரையை விட்டுக் குவளை மலரை நோக்கி ஓடி வந்து என்மீது விழுந்து என்னைக் கஷ்டப்படுத்துகின்றனவே, மேல் ஆடையால் முகத்தை மூடிக்கொண்டு, (பயத்துடன்) தோழி! இந்தீவரிகே! சீக்கிரம் வந்து என்னைக் காப்பாற்றுக, இந்தத் துஷ்ட மதுகரங்கள் என்னை ஆக்ரமிக்கின்றன!

விதூஷகன்:— அடே! தோழா! உனது மனோரதங்கள் பூர்த்தி பெறுகின்றன, அந்தக் கர்ப்பதாஸியின் மகள் (இந்தீவரிகை) திரும்பி வருவதற்குள் நீ வாய் திறவாமல் மெல்ல இவளருகு போ. இவளும் ஜலத்தில் காலடியோசையைக் கேட்டு இந்தீவரிகை வருகிறதாகவே நினைத்து உன்னையே இறுகத் தழுவிக்கொள்வாள். (கர்ப்பதாஸி—பிறவியடிமை.)

அரசன்:—நன்று, தோழா! நன்று. இந்த ஸமயத்துக்கு ஏற்றவாறே கூறினுய். (செல்கிருன்)

ஆரண்யகை:—(காலடிச் சப்தம் கேட்டு) இந்தீவரிகே! விரைந்து வா. விரைந்து வா. துஷ்ட வண்டுகள் என்னைக் கஷ்டப்படுத்துகின்றன. (அரசனைக்கட்டிக்கொள்கிருள். அரசனும் ஆரண்யகையைத் தழுவுகிருன். ஆரண்யகை முகத்திலிருந்து வஸ்திரத்தை எடுத்துவிட்டு அரசனைக் கண்ணுருமல், வண்டுகளைப் பார்க்கின்ருள்.)

அரசன்:—(தன் உத்தரீயத்தால் வண்டுகளை ஓட்டிவிட்டு) அம்மா! பயந்தவளே! வருத்தப் படாதே. இந்த வண்டுகள் உனது வதன கமலத்தின் வாஸனையில் பேராவல்கொண்டு வந்து விழுகின்றன. நீ அச்சப்பட்டு உனது அகன்ற கண்களை

வார்பட இரும்பு தண்ணீர் வளர்ச்சிக்கும் தொட்டிகள்



THE 'TYPHOON'



THE 'MONSOON'



THE 'ELEPHANT'

இந்தியாவில் தயாரிக்கப்படும் மூன்று வித தண்ணீர் தொட்டிகளைப் படத்தில் காணலாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறந்தவைகளுக்குச் சமமானவை.

"டைபூன்" "மான்சூன்", தொட்டிகளில் கொசு பூராது. ஜே.ஸி. எஸ். டபிள்யூ. விதிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டவை.

"யானை" மார்க் தொட்டிகள் மலிவானதாயும், திறமையுள்ளதாயும் தேவையென விரும்புவோர்க்கென்றே ப்ரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டவை.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

41 வருட அனுபவம் உள்ளது.
இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.
தாது புஷ்டிக்கி நிகறற்றது

பழநி ஆர். எம். கே. **தங்க மாத்திரை.**

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்
இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100—வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத க்ாமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ 10
25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் ,, ரூ. 5
(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி,**
சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.
68, செட்டியார் தெரு, கொழும்பு.

மிரள மிரள விழித்துப் பார்வையைச் செலுத்துவதால் அவை அங்குக் கருங்குவளைப் பூக்கள் காணப்படுவனவாகக் கருதுகின்றன. இவ்வாறு இருக்க, அவை எவ்வாறு விலகிப் போகும்?

ஆரண்யகை:—(அரசனைக் கண்டு, பீதியுடன்) இந்தீவரிகை அன்ரு? (அஞ்சி, அரசனை விட்டகன்று நின்று) இந்தீவரிகே! சீக்கிரம் வா, சீக்கிரம் வா, என்னை ரக்ஷிக்கவேணும்

விதூஷகன்:—அம்மா! பூமி முழுவதும் காக்கவல்லமை பெற்ற வத்ஸராஜன் உன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கையில், ஒரு சேடி இந்தீவரிகையைக் காப்பாற்றக் கெஞ்சுகின்ருயே!

(அரசன் முன் சொன்னதையே சொல்கின்ருன்.)

ஆரண்யகை:—(அரசனைக் கண்ணுற்று, காதல் கொண்டு, வெட்கத்துடன், மனத்துள்) இவர்தானு அந்த மஹாராஜர். என் தகப்பனுர் என்னை இவர்க்குத்தானே கொடுக்க உறுதி கொண்டிருந்தார் என் தந்தையின் சிந்தனைசாலச் சிறந்தது.

(மனக்குழப்பத்துடன் நிற்கின்ருள்.)

சேடி:— ஆரண்யகையைக் கெட்ட வண்டுகள் மிகவும துன்புறுத்திவிட்டன. நான் விரைந்துசென்று அவளை ஆசுவாஸப்படுத்தவேண்டும். அடீ! ஆரண்யகே! பயப்படாதே, இதோ வந்துவிட்டேன்.

விதூஷகன்:-அடே! தோழா! விலகு, விலகு. ஓடிவா, அதோ இந்தீவரிகை வருகின்ருள், இந்நிலைமையை அவள் கண்டால் அப்படியே அரசியிடம் அறிவித்துவிடுவாள், (விரலால் சுட்டிக்காட்டி) ஆதலால் நாம் இந்த கதளிகிருஹத்துட்சென்று சிறிது நேரம் தங்கியிருப்போம், (இருவரும் அவ்வாறு செய்கின்றனர்.)

சேடி:-(அடுத்துவந்து, ஆரண்யகையின் கன்னங்களைத் தடவிக்கொடுத்து) தோழீ! வண்டுகள் வந்து மொய்த்தது, தாமரை போன்ற உனது முகத்தின் குற்றம்தான். இருக்கட்டும், போவோம், வா, பகல சாயுங்காலம் ஸமீபித்துவருகிறது,

(இருவரும் புறப்படுகின்றனர்.)

ஆரண்யகை:— (கதளி கிருஹத்துக்கு எதிராக நின்று, பார்த்துக்கொண்டே) ஸகி! இந்தீவரிகே! தடாகஜதம் மிகவும் குளிர்ந்திருந்தமையால் எனது துடைகளிரண்டும் விரைத்துவிட்டன, ஆகையால் மெல்ல மெல்ல நடந்து செலவோம.

சேடி:—அவ்வாறே. (இருவரும் சென்றனர்)

மூன்ரும் காட்சி

விதூஷகன்:—ஏய்! வெளிக்கிளம்புவோம், வா, அந்த வேசி மகள் இந்தீவரிகை, அவளையும் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டாள்,

அரசன்:— (பெருமூச்செறிந்து) ஸகே! வஸந்தகா! நற்பாக்கியமில்லாதார்க்கு இச்சை இடையூறின்றி ஈடேறுது, (பார்த்து) தோழா! காண்க, காண்க—இந்தத் தாமரைகள் இதழ் குவிந்து தண்டில் முள்ளுடன் நிற்பது, அவளுடைய மெல்லிய தளிர்க்கை தொட்ட ஸுகத்தால் கண் மூடி மயிர் சிலிர்த்து விளங்கும். ஒரு காதலன் நிலையைக் காட்டுகின்றது போலும், (நெட்டுயிர்த்து) வஸந்தகா! மறுபடியும் அவளைக்காண வழி என்ன?

விதூஷகன்:— ஏய்! நீயே பொம்மையை உடைத்துவிட்டு அழுகின்ருய். இந்த மூர்க்கப் பிராமணனுடைய வார்த்தை உன் காதில் ஏறுவதில்லை.

அரசன்:—நீ சொன்ன எதை நான் கேட்கவில்லை?

விதூஷகன்:— இப்பொழுது உனக்கு எல்லாம் மறந்துபோய் விட்டது. "மௌனமாகப் போய் அணுகியிரு" என்று நான் சொன்னேன். நீயோ மிக்க நெருக்கடியான காரியத்தில் இறங்கியும் மௌனமாயிராமல், பொய்ப்புலமைத் திமிர் பிடித்து ரஸிகத்தனம் காட்டக் கருதி "அம்மா. அஞ்சாதே. வருந்த வேண்டாம்" என்பன போன்ற கொடுஞ் சொற்களைக் கொட்டி அதட்டி அவளை நடுங்கச் செய்துவிட்டாய். இப்பொழுதோ அழ ஆரம்பித்திருக்கின்ருய். மீண்டும் காண வழி வினவுகின்ருய்.

அரசன்:—அடே! முழு மூர்க்கா! அவள் ஆறுதலடைய நான் சொன்ன வார்த்தையை அச்சுறுத்தும் பேச்சாக நினைக்கின்ருயே!

விதூஷகன்:— "மூர்க்கன் எவன்" என்பது தான் நன்ருகத் தெரிகிறதே! இது கிடக்கட்டும். இதைக் தீர்மானிப்பதால் வரும் பயன் ஒன்றுமில்லை. ஸூரியன் அஸ்தமிக்கும் காலம் அணுகி வருகிறது. ஆகையால் அரண்மனைக்குத் திரும்புவோம். வா.

அரசன்:—(பார்த்து) ஆம். பகல் முடிவு பெறும் காலம் இது. ஆ ஹா ஹா! இப்பொழுது பகலொளி, (தினச்ரீ) என் இனியாளை யொப்பக், கமலவனக் காந்தியைக் கைப்பற்றிக் கொண்டு சென்றது. ஸூரிய பிம்பத்திலும் என் மனதிலும் ராகம் (செந்நிறம், காதல்) பெருத்துக் காண்கிறது. சக்ரவாகப் பறவை, என்மாதிரி, தனது துணைவியை நினைத்துக் கொண்டு கமலக்கயக் கரையில் கலங்கி நிற்கின்றது. எனக்கு எப்படியோ, அப்படியே உலக மனைத்துக்கும் திசைகளெல்லாம் காரிருள் சூழ்ந்துகண்ணிற்படுகின்றன.

(எல்லாரும் சென்றனர்)

இலந்தைப்பழக்காரன்

(பின் பக்கத் தொடர்ச்சி)

பளபளவென்று மின்னிய அவ்வெள்ளி இலந்தைப் பழங்களைக் கண்டு அரசன் மகிழ்ச்சியடைந்தான்.

"கூடையை எடுத்துக் கொள்" என்று அவன் பணியாளை நோக்கிக் கூற, அவன் அதைத் தன் தலையில் வைத்துக்கொண்டான். இருவரும் அரண்மனைக்கு வெளியே சென்றனர்.

மந்திரி செய்த ஏற்பாட்டின்படி கூடையைச் சுமந்த ஆள் அரசனின் ஆசை நாயகிகள் இருந்த தெருவுக்குள் நுழைந்தான். மானேஜி அவன் பக்கத்தில் கம்பீரமாய் நடந்தான்.

என்ன மனோரம்யமான காட்சி! அந்தத் தெரு முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது, ஒவ்வொரு வீட்டிலும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. தரையில் அழகிய கோலம் போடப்பட்டிருந்தன. இலந்தைப் பழம் விற்க வந்த ராஜா தங்குவதற்காக முத்துப் பந்தல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது,

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒரு அழகிய ஸ்திரீ ஸர்வாபரண பூஷிதையாய், புன்னகை அரும்பிய முகத்துடன் நின்ருள். அவள் கையில் ஒரு வெள்ளிப்படி இருந்தது. அதில் வெள்ளி அரிசி நிரம்பியிருந்தது.

ஒவ்வொரு வீட்டிலும் இலந்தைப் பழம் விற்க வந்த மனோஜிக்குச் செய்யப்பட்ட மரியாதைகளைப் பற்றி விவரிக்க இங்கு இடமில்லை. அந்தத் தெருவை கடப்பதற்குள் அவன் கூடையிலுள்ள இலந்தைப் பழங்கள்—நாலைநதைத் தவிர, மற்றவை எல்லாம்—காலியாயின. அவனது பட்டுப்பை நிறைய வெள்ளி அரிசி இருந்தது.

அன்று தான் செய்த வியாபாரத்தில் திருப்தி யடைநத அரசன் தனது பட்டமகிஷியின் மாளிகை வாசலில் நின்று, "இலந்தைப் பழம் வாங்க வில்லையா" என்று கூவினுன்.

பட்டமகிஷி பார்வதிபாய் மகா உத்தமி. நற் குணங்களுக்கு இருப்பிடம். காமாதுரனை அவளது கணவன் அவளுககு எவ்விதத்திலும் ஏற்றவனன்று ஏதோ: பூர்வஜன்ம கர்மத்தின் பயனுலேயே அவனுக்கு அவள் மகிஷியாய் வாய்த்தாள் என்று சொல்ல வேண்டும்.

மனோஜியின் கோமாளித்தனத்தை அவளது தாதி உரைத்ததைக் கேட்டு மனம் நொந்த அவள், ஒரு பொற் கிண்ணியில் சில நவரததினங்களை எடுத்து வைத்து, "இவற்றைக் கொடுத்து விட்டு இரண்டு பழங்கள் பொறுக்கி வா" என்று உத்தரவிட்டாள்.

ஆனுல் தாதி கொடுக்க வந்த காணிக்கையை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை, "உன் யஜமானியை வரச் சொல். நாம் காத்துக் கொண்டிருக்கிரேம்" என்ருன் மானேஜி.

மறு வார்த்தை பேசாமல் அரசி அங்கு வந்தாள். ஆனுல் குனிந்த தலை நிமிரவில்லை கூடையில் நவரத்தினங்களை போட்டுவிட்டு இரண்டு இலந்தைப் பழங்களை எடுத்துக் கொண்டு மறைந்தாள்.

மானேஜி ராவ் குதூகலத்துடன் தன் அரண்மனைக்குத் திரும்பினுன். ஆனுல் அன்று அவனது பட்ட மகிஷி பார்வதிபாய்க்கு வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டது. ஈசுவரத்தியானத்திலேயே அவள் தனது எஞ்சிய வாழ் நாட்களை கழித்தாள். அவளது குணத்தையும் சீலத்தையும் போற்ருதவர்கள் யாரும் இல்லை.

"கேட்டயா, இந்தக் கதையை சற்று நேரத்துக்கு முன் தெருவில் போன இலந்தைப் பழக்காரனைப் பார்த்தவுடன் எனக்கு ராஜா மானேஜி ராவின் ஞாபகம் வந்தது. அவன் இலந்தைப் பழம் விற்ற விநோதத்தை உனக்குச் சொல்லியும் விட்டேன். கதை எப்படி இருக்கிறது?" என்ற விணுவுடன் தம்பியண்ணு முடித்தார்.



பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested. ½ Dram Re. 1 4. 1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:- DADHA & Co., P. T. Madras.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

I.D.L. 12. டானிகாப் (F) இருமல், க்ஷயம், சுவாசத்திற்கு டானிக்
I.D.L. 42. டிகாசோ ரக்தசுத்தி, ரக்தவிருத்தி, உஷ்ணசமன டானிக்
I.D.L. 22. மகரத்வஜம் பலவிருத்திக்கும் ஆரோக்யத்திற்கும்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

இலந்தைப் பழக்காரன்

★

சிறு கதை - 'நியாயவாதி'

பிற்பகல் நேரம் எனினும் வெய்யிலின் கடுமை குறையவில்லை. திண்ணையில் நான் சமாசாரப் பத்திரிகையை படித்துக்கொண்டிருந்தேன். யுத்தச் செய்திகளில் ஈடுபட்டிருந்தது என் மனம். எதிர் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு விச்ராந்தி செய்துகொண்டிருந்த தம்பியண்ணு தெருவை நோக்கிக் கொண்டிருந்தார். வீதியில் ஒருவன் இலந்தைப்பழம் விற்றுக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்த சிறுபையன்களும் பெண்களும் அவனது கூடையிலிருந்த பழங்களை வாங்குவதில் மும்முரமாயிருந்தனர். அந்த வியாபார ஆரவாரம் என் செவிகளை துளைத்தது. "இது என்ன கூச்சல், தலைவேதனை!" என்றேன்.

தம்பியண்ணு "ஆமாம் உனக்கு இலந்தைப்பழம் பிடிக்காவிட்டால் தெருவிலுள்ளவர்களுக்கு பிடிக்காமல் போய்விடும் என்று நினைத்தாயா! இலந்தை பழக்காரனின் வியாபாரம் நின்று போகுமா? நல்லது ஒரு கேள்வி, ஹிட்லராவது முஸோலினியாவது இலந்தைப்பழம் விற்றிருக்கிருர்களா?" என்று வினவினுர்.

"நல்லகேள்வி இது! உலகத்தைப் பங்கு பிரித்துக் கொள்வதே கருத்தாயுடைய அவர்களுக்கு இலந்தைப்பழம்தானு ஒரு லக்ஷியம்? ஏன் இப்படி கேட்கிறீர்?" என்று நான் பதிலுக்கு வினவினேன்.

"இலந்தைப்பழக்காரனைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு பழைய கதை ஞாபகம் வந்தது. அதை உன்னிடம் சொல்லியே ஆகவேண்டும்" என்ருர் தம்பியண்ணு.

சிவனே யென்று நான் சமாசாரப்பத்திரிகையை மடித்து அப்பால் வைத்தேன். தம்பியண்ணு கூறிய கதை பின்வருமாறு:—

இங்கிலீஷ்காரனது ஆதிக்கம் ஏற்படுவதற்கு முந்திய காலம் அது, நமது பிராந்தியத்திலுள்ள தஞ்சாவூரை மகாராஷ்டிர மன்னர்கள் ஆண்டு வந்தனர். சத்ரபதி சிவாஜியின் குடும்பத்திலிருந்து தோன்றி விளங்கிய அவர்களது வீரத்தையும் ஆட்சித்திறமையையும் பற்றி அதிகம் கூற வேண்டுமா? தர்ம சாஸ்திரத்தில் சொல்லப்படும் நீதிமார்க்கத்திலிருந்து வழுவாமல், குடியேறிய அவர்கள் பிரஜைகளது விசுவாசத்தைப் பெற்றதில் யாதொரு விந்தையுமில்லை.

அவ்வளவு சிறப்புப் பெற்ற வம்சத்தில் வந்தவன் ராஜா மானேஜி ராவ்சாகேப் அவன் பாலியத்திலேயே பட்டத்துக்கு வந்துவிட்டான். எனினும் அவனுக்கு அரசாங்க காரியத்தில் சிறிதும் சிரத்தையில்லை. அவற்றை தனது மந்திரி மல்லாரி ராவிடம் விட்டு விட்டான்.

தீரத்தில் மானேஜி தனது முன்னோர்களுக்கு பின்னடைந்தவனல்ல. ஆனுல் அவனிடமுள்ள ஒரு தோஷமே அவனை அரசு செலுத்த யோக்கியதையற்றவனுகச் செய்தது. அது என்ன வெனில் சிற்றின்பத்தில் அவனுக்குள்ள அபார பிரேமையே.

இப் பிரபஞ்சத்தில் ஸ்திரீ சுகத்துக்கு மிஞ்சிய போகம் வேருென்றுமில்லை என்பது அவனது சித்தாந்தம். அழகிய மங்கையரின் வாஸம் அவனுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது. தனது ஆயுட்காலம் பூராவையும் கேளிக்கையிலும், கோலாஹலத்திலும் செலவழிக்க விரும்பிய அவனுக்கு இதர விஷயங்களில் புத்தி செல்லுமா?

இப்படி சிற்றின்ப வேட்டையில் இறங்கிய அவ்விளவரசனுக்கு அகப்பட்ட ஆசைநாயகிகளது தொகை ஒரு கணக்கில் அடங்காது. பஞ்சாவூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள அழகிய பெண்கள் எத்தனையரோ அவனது அபிமானத்துக்குப் பாத்திரமாயினர்.

வெகு சீக்கிரத்தில் அரண்மனைக்கு அருகாமையிலே ஒரு அழகிய வீதி நிர்மாணிக்கப்பட்டது. அதில் கட்டப்பட்ட மாடமாளிகைகளில் மானேஜியின் ஆசைநாயகிகள் வசிக்கலாயினர். அவர்கள் ஒவ்வொருத்திக்கும் தனி மாளிகை. அவளது சம்ரக்ஷணைக்கு தனி மானியம். அவர்களது உண்டி, உடைவகைகளிலும், நகை நட்டு விஷயங்களிலும் மானேஜி ராஜா யாதொரு குறைவும் வைக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட இரவை அரசன் யாருடைய மாளிகையில் கழிக்கப்போகிருன் என்பது கடை வீதியில் பஹிரங்கமாகும் விஷயம். ஏனெனில் அன்று ஒருகிடையிலும் சந்தணம், பன்னீர், புஷ்பம், எதுவும் இராது. எல்லாம் அரண்மனை உத்தரவால் மானேஜி விஜயம் செய்ய விரும்பிய மங்கையின் மாளிகையில் குவிந்துவிடும்.

ராஜாங்க அலுவல்களைப் புறக்கணித்த அவ்வரசனுக்கு வாய்த்த மந்திரியான மல்லாரி ராவ் சிறந்த அறிவாளி. ராஜதந்திரத்தில் நிபுணன். யஜமான விசுவாசம் கொண்டவன், மானேஜி பெயரளவில் அரசனேயன்றி வேறல்ல. ராஜ்ய நிர்வாகம் பூராவும் மல்லாரியிடம் இருந்தது. மகா சாமர்த்தியசாலியான அவனது ஆட்சி மிகவும் சிறப்பாகவே நடைபெற்றுவந்தது. அரசனுக்கு அவன் எவ்விதமான கவலையும் வைக்கவில்லை. யாதொரு விசாரமும இன்றி மானேஜி. நக்ஷத்திரங்களிடையே சஞ்சரிக்கும்சந்திரன் போல் தனது ஆசை நாயகிகளிடை தன் மனப்போக்கின்படி உல்லாஸ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

ஒருநாள் பிற்பகல் அரசன் தனது மாளிகையின் உப்பரிகையிலுள்ள வெளி மாடத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவனருகே மந்திரி மல்லாரி ராவ் நின்று கொண்டிருந்தான். ஏதோ முக்கியமான சமாசாரத்தைத் அவன் அரசனிடம் தெரிவித்துவிட்டு விடை பெற்றுக் கொள்ள நின்ருன். அப்பொழுது மானேஜியின் நாட்டம் அரண்மனையின் வெளியேயுள்ள மைதானத்தின்மீது சென்றது. அங்கு தென்பட்ட காக்ஷி அவனது கவனத்தை ஆகர்ஷித்துவிட்டது.

அவன் கண்ட காக்ஷி இது தான்.

ஒரு இலந்தைப் பழக்காரன் கூடையை தரையில் வைத்து விட்டு நின்ருன். அவனைச் சுற்றிலும் பெண்கள் கூடியிருந்தனர். தாங்கள் கொண்டு வந்த அரிசியை அவனிடம் கொடுத்து விட்டு தங்களுக்குத் தேவையான பழங்களை வாங்குவதில் அவர்கள் மும்முரமாய் இருந்தனர். ஒருத்திமேல் இன்னெருத்தி விழுந்து கூடைக்காரனிடமிருந்த பழங்களைக் கைப்பற்ற விரும்பினர்.

உப்பரிகையிலிருந்து அந்த காக்ஷியைக் கண்ட மானேஜியின் உள்ளத்தில் பொருமையும் ஆத்திரமும் போராடின. வெளியே கூடையுடன் நின்ற பழக்காரன் ஒரு அற்ப மனிதன் தான்! எனினும் அவனைச் சூழ்ந்த பெண்களின் கும்பலைப் பார்க்கப் பார்க்க அரசனின் பொருமை கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. தாங்க முடியாத ஆத்திரத்துடன் அவன் மந்திரி பக்கம் திரும்பினுன்.

"மல்லாரி! நாளைக்கு நான் ஒரு காரியம் செய்தே ஆகவேண்டும்?" என்ருன் அரசன்.

"மகாராஜா!"

"நாளைக் காலை நான் "தெருவில் இலந்தைப் பழம் விற்கப் போகிறேன்" என்று மானேஜி தனது தீர்மானத்தைத் தெரிவித்தான்,

"மகாராஜாவின் சித்தம்" என்ருன் மந்திரி.

மல்லாரிராவ் விஷயத்தை ஒரு நொடியில் அறிந்துகொண்டான். வெளியே நின்ற இலந்தைப் பழக்காரனின் அப்போதைய நிலைமையைக் கண்டு பொருமைகொண்டு மானேஜி தானும் அவனைப் போல் பழம் விற்க எண்ணங் கொண்டான் என்ற விஷயம் மந்திரிக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற மனப்பான்மை கொண்ட அவ்வரசன் அப்படியே மறுநாள் செய்து தான் தீருவான் என்பதும் மல்லாரிக்குத் தெரியும்.

ஆனுல் ஒரு அரசன்—ஒரு ராஜ்யத்தின் அதிபதி—தெருவில் இலந்தைப் பழம் விற்பது என்ருல் அது விந்தைக்கும் கேலிக்கும் இடமாகுமன்ரே?

ஒரு ராஜாவுக்கு சாமான்ய மனிதனிடம் பொருமை ஏற்பட்டால் அவன் என்ன செய்வான்? ராஜா மானேஜி ஒரு இலந்தைப்பழக்காரனைப் பார்த்து பொருமைப் பட்டான். அதற்கப்புறம் அவன் செய்தது விநோதமானது. மந்திரி ராஜாவின் இஷ்டப்படி நடந்து கொண்டதும் வேடிக்கையானதே. கதையைப் படித்தால்தான் விஷயம் துலங்கும்.

பிரஜைகள் அதைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அந்த விநோதமான சமாசாரம் பிற அரசர்களுக்கு எட்டிவிட்டால் அவர்களது அவமதிப்புக்கு இலந்தை பழம் விற்ற அரசன் இலக்காகாமல் இருப்பானு? அவனுக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டது என்பது எங்கும் உறுதியாய்விடும் என்பதில் என்ன சந்தேகம்?

விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்தான் மதியூகியான மல்லாரிராவ்: முடிவில் அவனுக்கு ஒரு யுக்தி புலப்பட்டது. "அதுதான் சரி, அதுதான் திருப்திகரமான ஏற்பாடு" என்று அவன் தன்னுள்ளே சொல்லிக்கொண்டான்.

உடனே அவன் அரண்மனையைச் சேர்ந்த வெள்ளித் தட்டானை வரவழைத்தான். "இரவுக்குள் ஒரு மூட்டை நிறைய வெள்ளி அரிசியும், ஒரு கூடை நிறைய வெள்ளி இலந்தைப் பழங்களும் செய்தாக வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

அன்றிரவு மானேஜியின் அபிமான ஸ்திரீ ஒவ்வொருத்திக்கும் ஒரு வெள்ளிப் படி நிரம்பிய வெள்ளி அரிசி மந்திரியால் அனுப்பப்பட்டது. அத்துடன் வந்த பணியாள் "நாளைக் காலை மகாராஜா இங்கே இலந்தைப் பழம் விற்க வருவார். இந்த அரிசியை அவரிடம் சமர்ப்பித்து விட்டு அவரிடமிருந்து கொஞ்சம் இலந்தைப் பழங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்ருன். புதிய இலந்தைப் பழக்காரனை வரவேற்க அவனது அபிமான ஸ்திரீகள் எல்லாரும் தயாராக இருந்தனர்.

மறு நாள் பொழுது விடிந்தது. மானேஜி ஸ்நானபானம் முடித்துக்கொண்டபின் மந்திரியை வரவழைத்து "மல்லாரி, நேற்றுச் சொன்னபடி நான் இலந்தைப் பழம் விற்க வேண்டும். அதற்குத் தயார் செய்திருக்கிருயா?" என்ருன்.

மந்திரி ஒரு பணியாளை அழைத்தான். அவன் ஒரு வெள்ளிக் கூடையுடன் வந்தான். அதில் வெள்ளி இலந்தைப் பழங்கள் நிரம்பி இருந்தன.

"மகாராஜாவால் விற்கப்படுவதற்கு தகுதியான பழங்கள் இவை" என்ருன் மல்லாரி.

(முன்பக்கம் பார்க்க)

மேற்குப் பாலைவனத்தில் எடுத்த படம்



...டெர்னவுக்குப் போகும் ரஸ்தாவில் இந்தியத் துருப்புகளும் சாமான் லாரிகளும் செல்கின்றன.

பரிஹார முறை.

விஷ பாண்டு ரோகத்தைப் பரி சோதிப்பதிலும், பரீக்ஷித்து உண்மை நிலைமையறிந்த பிறகு அதைப் பரிஹரிக்க வேண்டிய முறையிலும் வைத்தியர் வெகு நிபுணராகவும், கைதேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். இதன் ஆரம்ப நிலைமையில், சிலருக்கு நடு நிலைமையிலுங்கூட, இவ்வியாதி மிகக் கொடியதாக மாறுமென்கிற யோசனை தோன்ருத வகையில் இதனுல் ஏற்படும் குறிகளை வெகு ஸாமானியமாகவே அவர்கள் எண்ணும்படி இருக்கும். தகுந்த வைத்திய பரிசோதனைக்குப் பிறகு விஷ பாண்டு. (வ்ருக்க வீக்கக் கோளாறு) என்று தெரிந்தால், உடனே ஏற்ற பரிஹாரத்திற்கு வகை தேடிக் கொள்ள வேண்டும்.

இந்த ரோகத்தில் மூத்திரம் நன்ருக அப்போதைக்கப்போது வெளிப்படவும், இருதயம் பலம் பெறவும், ரத்த ஓட்டம் நன்கு நடைபெறவும் முதலில் உபாயம் தேட வேண்டும். இதற்கு ஜலமஞ்ஜரீ ரஸமும், லோஹ ரஸாயனமும் வெகு சிறந்த ஔஷதங்களாம். வேளைக்கு 10 அல்லது 15 நெல் லெடை வீதம் ஜலமஞ்ஜரீ ரஸத்தைத் தேனில் கலந்து, நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறை உபயோகிக்க வேண்டும். லோஹரஸாயனம் என்னும் மருந்தை சாப்பாட்டுக்குப் பிறகு வேளைக்கு 2 அல்லது 3 தேக்கரண்டியளவாகச் சிறிது ஜலத்தில் கலந்து தினத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை உட்கொள்வது நலம். இந்த வியாதியில் மலச்சிக்கல் பொதுவாகவே தொடர்ந்து தொந்தரவு அளிக்குமாகையால் ஸைந்தவாதி க்வாதம் என்கிற கஷாயத்தையாவது ஸ்ரம்ஸநவடி என்னும் மாத்திரையையாவது தகுந்த அளவில் உட்கொண்டு, அப்போதைக்கப்போது மலபந்தத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும். ஸித்தயோக ரஸம் என்னும் மருந்து இவ் வியாதியில், சிலருக்கு வெகு சீக்கிரத்தில் குணமுண்டு பண்ணியிருக்கிறது. கோக்ஷுராதி கஷாயத்துடன் சிலாஜது பஸ்மத்தை வேளைக்கு 5 முதல் 10 நெல் லெடை வீதம் இவ்வியாதியில் உபயோகிப்பதும் பல ஸமயங்களில் நற்பயன் தருவதுண்டு.

செய்ய வேண்டியவை

இப்பிணியாளருக்கு ஜீர்ண சக்தியே மிக்க மந்தப்பட்டுப் போம். ஆகவே எளிதில் ஜீர்ணமாகக்கூடிய திரவமான வாற் கோதுமைக் கஞ்சி, நெற்பொரிக் கஞ்சி, பழரஸங்கள் ஆகியவற்றையே உணவாகக் கொடுத்து வர வேண்டும். வியாதி தணிந்து ஜீர்ண சக்தி நல்ல நிலைமைக்கு வருமளவும் கனமான எவ்வுணவும் உட்கொள்ளக்கூடாது. இது வெகு பலமாக விருத்தியாய் வ்ருக்கங்கள் சிரழியும் வரையில் பிணியாளி தனக்கு ஏற்பட்டிருப்பது வெகு சீக்கிரத்திலேயே பிராணுபாயம் விளைவிக்கும் கள்ள வியாதி யென்பதை அநேகமாய் உணருவதில்லை. இந்த வியாதியில் ரத்தத்திலிருந்து வெளியாகவேண்டிய அசுத்தங்கள் அவ்வப்போது வ்ருக்கங்களால் பிரித்து வெளிப்படுத்தும்படி அவ்வவயவங்களுக்குச் சக்தியில்லாமற் போவதால் விஷச் சத்துக்கள் நாள்தோறும் ரத்தத்திலும் வேறு தாதுக்களிலும் மேன்மேலும் சேர்ந்து போய் விஷப் பாண்டு எனும் மிகக் கடுமையான நோய் விருத்தியாய் பிணியாளியை மாய்த்துவிடும் என்னும் உண்மையைக் கற்றறிந்த வைத்தியரைத் தவிர்த்து மற்றவர் அறிந்துகொள்வது எளிதல்லவென்பதை விளக்கவே இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

வைத்திய ரத்னம் பண்டித
எம. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய
மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்
ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்
பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்
எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள் தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணிஅனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்
இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்ருல்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்
க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனுல் சுகமடைந்திருக்கிருர்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்
தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்
எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக் கணக்கானபேர்சுகமடைந்திருக்கிருர்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணு 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)
"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"
11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்.

கன்னடக் கதை

குடலின் அழைப்பு

★ ஸ்ரீ எ. என். கிருஷ்ண ராவ்

எழுதியது

'உஸ்மான்...உஸ்மான்'

தூங்கிக்கொண்டிருந்த புத்திரனிடமிருந்து பதில் வரவில்லை.

'உஸ்மான்....மேரா பேட்டா'

"தாதா..."

"உடோஜி..."

புத்திரன் முழித்துக்கொண்டு தகப்பனுரின் முகத்தை பார்த்தான். விசாலமான மற்றும் குண்டான முகத்தில் மின்னிக்கொண்டிருந்த பெரிய கண்களில் கண்ணீர் ததும்பப் பார்த்தான். தகப்பனும் புத்திரனைப் பார்த்தான். தூங்குபவன் போல் முகத்தைப் போர்வையால் மூடிக்கொண்டு இரவெல்லாம் அழுதழுது சிவந்து போயிருந்த பிள்ளையின் கண்களில் ஒளிந்துகொண்டிருந்த துக்கத்தை கிரகித்துக்கொண்டான். பிறந்த ஆறு மாதத்திற்குள் தாயாரை இழந்த தனயனை மிகவும் பரிவுடன் போஷித்து முன்னுக்கு கொண்டு வந்தான், புத்திரனின் வளர்ச்சியைப் பார்க்கும் ஆனந்தத்தில், குடலை கிழிக்கும்படியான ஏழ்மையின் சகிக்கமுடியாத வேதனையையும் மறந்திருந்தான். தன் முன்னல் நிற்பவன் தன் புத்திரன்...தான் இருபது வருஷங்களாக, எடுத்து வளர்த்து போஷித்த புத்திரன். தன்னுடைய வாழ்விற்கு வெளிச்சத்தை அளித்த மகன்! நினைக்க நினைக்க முகம்மதினுடைய நீண்ட நரைத்த தாடியானது துக்க பிரவாகமான கண்ணீரால் நனைந்து போயிற்று.

எவ்வளவோ தடவை இந்த பாழும் வாழ்விலிருந்து பையனை விடுவித்து அவனை நான்கு பேர்களுக்கு சரிசமானமாகக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தான். விடியிற்காலம் எழுந்து, நிரம்பாத வயிறை நிறப்புவதற்காக, தோளின் மீது சிதாரை தாங்கியவண்ணம், மார்க்கெட்டின் அருகிலோ அல்லது ஜனங்கள் கூடுமிடத்திலோ துண்டைப் பரப்பிவிட்டு உட்கார்ந்து, கபீர் மீரா முதலியவர்களின் பாடல்களை தொண்டை கிழிந்து போகும்படி பாடிப்பாடி சூர்யாஸ்தமனப்பொழுதிற்கு சேகரமாயிருக்கும் சில்லரை காசுகளை சேர்த்தெடுத்துக்கொண்டு, அதன் மூலம் அன்றைய பசியை ஆற்றிக்கொள்ளும் வாழ்வு, முகம்மதிற்கு போதும் போதும் என்ருகிவிட்டிருந்தது. "மாலைப்பொழுதிற்கு என்ன கதியோ? நாளைக்கென்ன கதியோ? நோய் வாய்ப்பட்டால் அப்பொழுது என்ன செய்வதோ?" எனும் கவலையின்றி இரண்டு பொழுதும் வயிற்றை நிரப்பும்படியான வேலையில் புத்திரனைப் புகுத்த வேண்டுமென்ற பேரவா இருந்தது அவனுக்கு. அதுவும் சில நாட்களுக்கு முன்பு நிறைவேறியது. அழகான ரூபம், மிருது மதுரமான குரல், பழக்க வழக்கங்களில் இசைந்திருக்கும் ஒருவித காம்பீர்யமான தோற்றம், இவை அனைத்தும் சுற்றுப்பிரயாணமாக வந்திருந்த "கலகத்தா பாரசீக நாடகக் கம்பெனியின்" கவனத்தை உஸ்மான்மீது இழுத்தது, பேச்சுவார்த்தை நடந்த பின்பு, மாதம் 50 ரூபா சம்பளத்திற்கு உஸ்மான் கம்பெனியில் சேருவதென்று நிச்சயமாயிற்று. தனது முன்னேற்றத்திற்கு காரணமான தகப்பனை விட்டு செல்லவேண்டும்! ஆனுல் உஸ்மானுக்கு ஒரு திருப்தி; தான் சம்பாதிக்கும் பணத்தை தகப்பனுக்கு அனுப்பிக் கொடுத்து அவன் சில நாட்களாவது சௌக்கியமாக இருக்கும்படிச் செய்யலாமே என்பது தான்.

புத்திரனை விட்டகன்றதால் ஏற்பட்ட விரகவேதனையானது முகம்மதை இரண்டொரு நாட்களிலேயே அரைஉயிராக்கி விட்டது. ஆனுல் மேகக் கூட்டங்களின் மீது அவ்வப்போது மின்னலின் வெளிச்சம்தோன்றுவதுபோல் அவனுடைய வரப்போகும் சுகத்தை நானு கெடுப்பது? நாளைக்கு என் உஸ்மான் ஒரு பெரிய கவாய் ஆகலாம் அல்லவா!" என்று அவன் உள்ளத்தில் சமாதானம் நிலவும்.

ரயில் வண்டித்தொடர் புறப்படும் சமயம். தகப்பனும் பிள்ளையும் கட்டியணைத்துக் கொண்டு கண்ணீரால் ஒருவரை ஒருவர் அபிஷேகம்செய்து கொண்டிருந்தனர். ரிஷிபோன்ற கிழத்தகப்பன்: அழகே வடிவான வாலிபத் தனயன், இருவரும் துக்கக் கடலில் மூழ்கிக் கிடந்தனர். புத்திரனின் உள்ளம் நிறைய தகப்பனின் சிந்தனை. தகப்பனின் உள்ளம் நிரம்ப தனயனின் சிந்தனை. இதன் நடுவில் தட்டுத்தடுமாறிய குரலில் "தாதா..."என்ருன் தனயன்.

"பேட்டா" என்ற மறுமொழியானது கிழவனின் ஹ்ருதயத்தைப் பிளந்து கொண்டு வெளியே கிளம்பிற்று. விதியின்றி இருவரும் பிரிந்தனர். ரயில் வண்டித் தொடர் மெதுவாகப் புறப்பட்டது......ரயில் வண்டியுடனேயே முகம்மதும் மகனையே கண்கொட்டாமல் பார்த்த வண்ணம் ஓடினுன். பையன் குனிந்து தகப்பனின் தாடியை தடவிக்கொண்டே "தாதா... தாதா..." என்று தழதழத்த குரலில் கூப்பிட்டான். கால்கள் சோர்ந்து போகவே முகம்மத் நின்று விட்டான். ரயில் வண்டித் தொடர் வெகு வேகமாக கண்களுக்கு எட்டாத தூரம் போய் விட்டது. முகம்மத் காலைப் பிடித்துக்கொண்டு மெதுவாகத் திரும்பினுன். அவன் வாயில் மூன்றே வார்த்தைகள். மந்திரம் ஜபிப்பது போல், நின்று நின்று ஸ்பஷ்டமாக வெளி வந்து கொண்டிருந்தன: அவன் சமீபத்தில் சென்று கொண்டிருந்த வழிப்போக்கர்கள், கிழவனை ஓர் பித்தனைப் பார்ப்பது போல் பார்த்து சிரித்துக்கொண்டு போனுர்கள். ஆனுல் குனிந்த தலையை நிமிராமல் முகம்மத் முன்னுக்கு நடந்தான். அவன் வாயிலிருந்து மட்டும் தங்குதடையின்றி "பேட்டா...தாதா.....குதா......" என்னும் மூன்று வார்த்தைகள் மட்டும் கிளம்பிக் கொண்டே இருந்தன.

2

கல்கத்தாவின் "பாரசீக நாடக கம்பெனி"க்கும் உஸ்மானுக்கும் நட்பு உண்டாகி ஐந்து வருஷங்களாயின. இப்பொழுது அவன் ஐந்து வருஷங்களுக்கு முன்பு வயிறு வளர்ப்பதற்காக சேர்ந்த ஏழை உஸ்மான் அன்று: கம்பெனியின் பிரதான நடிக சிரேஷ்டனுன கவாய் உஸ்மான் கான் சாகேப்: நாடக மேடை சாம்ராஜ்யத்தின் சிம்மாதனத்தை ஒரே அடியாய்த் தாவிய உஸ்மானுக்கு தனது பழைய வாழ்க்கை நாளடைவில் மறந்து கொண்டு வந்தது. தான் தன் தகப்பனைப் பிரிந்து வந்தது முதல் இந்த ஐந்து வருஷங்களும் கல்வி பயிலுவதற்காக பட்ட கஷ்டத்தின் நினைவும் மறந்து போய் விட்டது. தனது தற்பொழுதைய நல்ல நிலைமைக்கு தகப்பனுரின் பொறுமையும் அளவற்ற அன்பும், தியாகமும் தான் காரணமென்ற நினைவும் மழுங்கிக் கொண்டே வந்தது. தனது கௌரவம் எந்த நிலைமையிலிருக்கிறது, வருங்காலத்தில் மேலும் மேலும் எந்த நிலைமைக்கு ஏறப் போகிறது என்னும் கவனத்திலேயே அவனது பூர்ண லக்ஷியமும் லயித்திருந்தது. இவ்விதமாக ஐந்து வருஷ விடாமுயற்சியால் "கவாய்" பதவிக்கு உஸ்மான் ஏறி தனது கம்பெனியின் தலைவருடையவும் மற்றும் இதர முக்கியஸ்தர்களுடையவும் பூர்ண ஆதரவையும். அன்பையும் ஆகர்ஷித்து விட்டான். உஸ்மானின் இனிய குரலின் மாதுர்யமான சங்கீதத்தில் அனைவரும் மெய் மறந்தனர், உஸ்மானே ஓரோர் தடவை தனது சங்கீதத்தில் தானே மெய் மறந்துவிடுவான். நாடக மேடைக்கு உகந்த சௌந்தர்யமும் அவனிடம் இருந்ததால், உஸ்மான் முன்னேற்றமடைவதற்கு மிகவும் அனுகூலமாகவிருந்தது. மஜ்னூன், பர்ஹாத், சுலேமான், துஷ்யந்தன் முதலான சிருங்காரப் பிரதான பாத்திரங்களில் நடித்து உஸ்மான் நல்ல பெயர் பெற்ருன்.

முந்திய பிச்சைக்கார நிலைமை முடிந்தது; இன்று உஸ்மான் ஒரு கௌரவ புருஷன். அவன் கூறும் ஒருசிறிய வார்த்தையைக் கூட அவனை அனுசரிப்பவர்கள் பெரிய கட்டளையைப் போல் பாவித்தனர். நாடகக் கம்பெனின் தலைவனிலிருந்து சேவகன் வரையில் அனைவருக்கும் உஸ்மானின் உள்ளம் குளி

'கவாய் உஸ்மான் சாகேப்!' அவ்வளவு பிரசித்தி அடைந்து விட்டான் அவன். பாரசீக நாடகக் கம்பெனியில் அவனுக்குத் தான் எல்லா கௌரவமும். பியாரியும் கூடச் சேர்ந்தாள்! அவன் வாழ்க்கைக்கு அவள் சத்துருவாக வந்தாளா? காதல் என்பது எல்லோரையும் கெடுத்து விடுகிறதா? மோஹம் தான் மற்றவரைத் தன் மாய வலையில் சிக்க வைத்ததா? உஸ்மானின் வாழ்க்கை ஆரம்பித்தது எப்படி? அது எவ்விதம் உச்ச நிலையை எட்டிக்கொண்டே போயிற்று? இவ்வாரம் ஆரம்பித்து அடுத்த வாரம் முடிவு பெறும் இந்த கன்னடக் கதையில் நீங்களே இந்தக் கேள்விகளுக்குத் தகுந்த பதிலைக் காண்பீர்கள்.

* * * * *

மொழிபெயர்த்தவர் ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

ரும் படிச் செய்வதே தங்களுடைய முக்யமான கடமை என்று தோன்றலாயிற்று: இவ்விதமாக பாரசீகக் கம்பெனியின் பிரபு உஸ்மான் என்றுயிற்று. நாடகங்களை ஸ்வீகரிக்க வேண்டுமானுலும் உஸ்மானின் கட்டளை பிறந்தாக வேண்டும்: புதிய நடிகர்களை நாடகக் கம்பெனிக்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமானுலும் உஸ்மான் ஒப்ப வேண்டும். நாடகங்களைப் பிரதர்சனம் செய்யவேண்டுமானுல் உஸ்மான் சம்மதம் வேண்டும்: இவ்விதமாக நாடகக் கம்பெனியின் சகலமான காரியங்களும் உஸ்மானின் இஷ்டப்படியே நடக்கவாரம்பித்தன.

பாரசீகக் கம்பெனியில் உஸ்மானே நாயகன். பியாரியே நாயகி உஸ்மானின் புகழ்ச்சியைச் செவியுற்று அவள் தானிருந்த கம்பெனியை விட்டு விட்டு நாயகி பாத்திரங்களை அபிநயிப்பதற்காக உஸ்மான் கம்பெனிக்கு வந்து சேர்ந்தாள். அவளை கம்பெனியில் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் பின்ன அபிப்பிராயங்கள் முளைத்தன. அநேக கம்பெனிகளையும், அவைகளின் முதலாளிகளையும் திவாளியாகச் செய்தவள் அவள் தான் என்று சில நடிகர்களின் நம்பிக்கை. அவள் கேட்கும் சம்பளம் தங்களுடைய யோக்கியதைக்கு மீறினது என்று கம்பெனியின் ஸ்தாபகர்களின் முனகல், ஆனுல் "அவளது சாரீரம் நன்ருகவிருக்கிறது. இருக்கட்டும்" என்பது உஸ்மானின் இச்சை. அதுவே மேலோங்கி நின்றது. பார்ப்பதற்கு ஒல்லி, மற்றும் வெளுத்த தேகம்; நீண்ட சுருட்டை மயிர்: விசாலமான மற்றும் சஞ்சலமுடைய கண்கள். கொஞ்சம் அடக்கமாகவிருந்தாலும் வடிவத்தை மாற்ருத அழகிய மூக்கு: அதில் ஒரு முத்து புதைத்த மூக்குத்தி; காதுகளில் இரண்டு வைர டோலக்குகள். ரோஜா வர்ணத்தில் ஸில்க்ப்லவ்ஸும், அதற்கு இசைந்தாற்போல் ஆரஞ்சு வர்ண ஸில்க் புடவையும். கால்களுக்கு பூவேலை செய்த ஜிகினு பாதரக்ஷைகள்; கையில் ஸில்க் 'மணிபர்ஸ்': வர்த்தையில் மனிதர்களை மயக்கும்படியான இனிமை. இவைகளில் உஸ்மான் மயங்கிப்போய்விட்டானே அல்லது பியாரியின் மதுரமான குரலுக்கு உள்ளத்தைப்பறி கொடுத்தானே!--அப்படியும் இப்படியும் பியாரி பிரதான நாயகியாக அந்த கம்பெனியில் நிலைத்தாள்.

உஸ்மானின், மற்றும் பியாரியின் சங்கீதம் அபிநயங்களை கண்டு களிக்க எண்ணி பல நாடுகளிலிருந்தும் ஜனங்கள் வரலாயினர். எவ்விடம் பார்த்தாலும் அவர்களது புகழ் பாட்டு தான். மூலை முடுக்குகளிலெல்லாம் அவர்களுடைய கீர்த்திக் கொடியானது பரவவாரம்பித்தது.

உஸ்மானின், மற்றும் பியாரியின், புகழ் பரவிய விதமே நடத்தையின் விஷயமும் எங்கும் பரவ வாரம்பித்தது. பியாரிக்கு விரோதமான நடிகாகள் அவள் மேல் பலவிதமான குற்றங்களை சுமத்தி, வெளியே பரவச் செய்தனர். அடிக்கடி துர் எண்ணம் உண்டாகும்படியாய் பத்திரிகைகளில்கூட சமாசாரங்கள் பிரசுரிக்கப்பட்டன. நாடக மேடையின் நாயகி உஸ்மானின் வாழ்விலும் தலையிடவாரம்பித்தாள். 'காதல்' என்னும் ஐஸ்வர்யத்திலிருந்து சூன்யமாக விருந்த உஸ்மானின் ஹ்ருதய கமலம் பியாரியை அன்புடன் வரவேற்றது. தான் யார், தன் நிலைமை எது என்பதையும், தன் கல்வி, பதவி அனைத்தையும் அவளுடைய நினைவில் அடியோடு மறந்துவிட்டான். உஸ்மான் நின்ற விடத்திலும், உட்கார்ந்த விடத்திலும், போகுமிடத்திலும் அவன் கண்ணிற்கு புலப்பட்டது பியாரியின் முகம் ஒன்று தான். தனக்கவள் கிடைத்த பொழுது ஒரு பக்தனைப்போல் தனது சர்வத்தையும் அவளிடம் ஒப்படைத்துவிடுவான். அவள் தன்னிடம் பராமுகமாக இருந்த பொழுது முழங்காலிட்டு பிச்சாரனைப்போல் ப்ரணய பிக்ஷை வேண்டுவான். அவள் கோபித்துக்கொண்டு தன்னுடன் பேசாமல் போனுல், தேவீ உபாஸகனைப்போல் அவளுடைய கிருபா கடாக்ஷம் தன் மீது சீக்கிரம் விழும்படி "குதா"வை வேண்டிக்கொள்வான்.

கடைசியில், மிருதுவானதும், தூய்மையானதும். புனிதமானதுமான உஸ்மானின் உள்ளம் பயங்கரமான துர்க்குணங்களின் பிறந்தகமாக மாறிவிட்டது. பியாரி தனது அழகிய கைகளால் முதன் முதல் கற்பித்த மதுபான பழக்கத்தினுல் உஸ்மான் மெய் மறந்தான். மனது வந்தால் மேடைமீது நன்ருக அபிநயிப்பான். இல்லாவிடில் அஷ்ட கோணலாகவும் எக்கச்சக்கமாகவும் நடித்து முடித்துவிடுவான்.

(அடுத்த வார இதழில் முடிவு பெறும்).

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1.
வி. பி. செலவு அணு 5.
ஜனனகால விவரம் or எழுதுமநேரம். சுமார் வயது தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

இவருக்கு வருமானம் சொல்பம்தான்



ஆனுலும் இவர் இப்பொழுது ரு. 500 க்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறர். தங்கள் பிற்கால உதவிக்கோ அல்லது தங்களுக்குப் பிற்காலம் தங்கள் மனைவி, குழந்தைகளின் பாதுகாப்புக்கோ தங்கள் ஆயுளை குறைந்த வருமானமுள்ளவர்கள் இன்ஷ்யூர் செய்து கொள்வதுதான் வழி என்பது இவருக்குத் தெரியும். ஆனுல் இவரால் மாதா மாதம் சேமிக்கக் கூடிய பணம் சாதாரணமாக இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் கொடுக்கும் பாலிஸிகள் எடுப்பதற்கு போதுமானதாயில்லை.

இந்த குறையை நீக்கவே நாங்கள் ரு. 500-க்கும், அதற்குக் குறைந்த தொகைகளுக்கும் இன்ஷ்யூர் செய்கிறேம். வழக்கமாயுள்ள டாக்டர் பரீக்ஷைகள் இவைகளுக்குத் தேவையில்லை:

யுனைடெட் இந்தியா பிராவிடெண்டு அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்
எஸ்பிளனேட் :: மதராஸ்.

For Fire & Motor Car Insurance Consult.
The UNITED INDIA FIRE & GENERAL INSURANCE Co., LTD.
United India Life Buildings, Esplanade, Madras.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

கருணயேலாகண்டே யீவிதமே
கல்யாண ஸுந்தர ராம!

அனுபல்லவி

பரமாத்முடு ஜீவாத்முடு யொகடை
பரகுசுண்டு பக்த பராதீனுனி

சரணம்

1. அந்ருதம்பாடடு அல்புல வேடடு
ஸுந்ருபுல கொலுவடு ஸூர்யுனி மறவடு

2. மாம்ஸமு முட்டடு மதுவுனு தாகடு பர-
ஹிம்ஸல ஸேயடு யெறுகனு மரவடு

3. மூடீஷணமுல வாடடு ஜீவன்—
முக்துடை திருகு முதமுனு ஜூபடு

4. வஞ்சன ஸேயடு பருலதோ பொங்கடு
சஞ்சல சித்துடை ஸௌக்யமு விடு வடு

5. ஸாக்ஷி யனி தெலிஸி யந்து லக்ஷ்யமு விடுவடு கஞ் —
ஜாக்ஷுனி த்யாகராஜ ரக்ஷகுடைன வானி

II

கல்யாண ஸுந்தர ராம!

பரமாத்முடு
ஜீவாத்முடு
ஒகடை
பரகு சுண்டு
பக்த பராதீனுனி
கருண யேலா கண்டே
யீ விதமே

அந்ருதம்பு ஆடடு

அல்புல வேடடு
ஸுந்ருபுல கொலுவடு
ஸூர்யுனி மறவடு

மாம்ஸமு முட்டடு
மது வுனு தாகடு
பர ஹிம்ஸல ஸேயடு
யெறுகனு மரவடு
மூடீஷணமுல வாடடு
ஜீவன் மூக்துடை
திருகு முதமுனு ஜூபடு

வஞ்சன ஸேயடு

பருலதோ பொங்கடு
சஞ்சல சித்துடை
ஸௌக்யமு விடுவடு

ஸாக்ஷி யனி தெலிஸி

யந்து
லக்ஷ்யமு விடு வடு
கஞ்ஜாக்ஷுனி
த்யாகராஜ ரக்ஷகுடு ஐன
வானி
கருண யேலா கண்டே
யீ விதமே

—அநந்த கல்யாண குணங்களுடன் விளங்கும் அழகு நிறைந்த ராமா!
—பரமாத்ம ஸ்வரூபம்
—ஜீவாத்ம ஸ்வரூபம் என்பவற்றை
—ஒருவனுக வேயிருந்து
—விளங்கச் செய்து வைத்துக்கொண்டு
—பக்தர்கள் வயப்பட்டுள்ள ஸ்ரீராம! உன்
—கருணை எவ்விதமென்ருல்
—இவ்விதம் தான் (சொல்வதற்கு ஸாத்தியமற்றது)
—(ஸ்ரீ ராமா! உன் கருணை கிடைக்கப் பெற்றவர்) பொய் பேச மாட்டார்கள்
—நீசர்களை வேண்டமாட்டார்கள்
—அரசர்களை அண்டி ஸேவை செய்யமாட்டார்கள்
—கடவுளான ஸூர்ய நாராயணனை மறக்க மாட்டார்கள்
—மாம்சத்தைக் கையாலும் தொட மாட்டார்கள்
—மதுபான வகைகளைக் குடிக்க மாட்டார்கள்
—ஜீவ வதை முதலியன செய்ய மாட்டார்கள்
—முக்தி மார்க்கத்தை மறக்க மாட்டார்கள்
—முவ்வாசையையும் விரும்பார்கள்
—ஜீவன் முக்தர்களாக
—ஸஞ்சரித்து அனுபவிக்கும் ஆனந்ததை காண்பிக்க மாட்டார்கள்
—வஞ்சனை, துரோகம் முதலானவை செய்ய மாட்டார்கள்
—இதரர்களுடன் பொய் பேச மாட்டார்கள்
—சஞ்சலமடைந்த மனமுடையவர்களாகி
—நித்யானந்த ஸுகமான ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஈடுபடுவதை இழக்க விரும்ப மாட்டார்கள்
—உலகனைத்திற்கும் காரணப் பொருளாய் விளங்கும் பரமன் ஒருவனே என்றறிந்து
—அவன் கிருபையை அடைவதில்
—முயற்சியை விடமாட்டார்கள்
—தாமரைக் கண்ணனும்
—த்யாகராஜனுக்கு ரக்ஷகனுகவும் வாய்ந்துள்ள
—அந்த ஸ்ரீராமனின்
—கருணைப் பெருக்கு எவ்விதமென்ருல்
—இவ்விதமேயாகும்

ருசிக்கு
ருசி
விலையும் மலிவு

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-13 TM

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

உண்மை
உறுதிக்கும்
உத்திர
வாதம்.
—:—
"ஷண்முகம்
பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு
& சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்றாகும்.

இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பகவத் கருணையின் தன்மை எவ்வித முள்ளதென்று விவரிக்க இயலாததாகும் என்ற உண்மையை விளக்கி, பகவத் கருணை கிடைக்கப்பெற்ற பக்தர்களின் குணாதிசயங்களை வர்ணிக்கிறார்.

கருணயேலாகண்டே:—பகவத் கருணை விசேஷத்திற்கு உதாரணமாக,

வாத்ஸல்யாத பயப்ரதானகரணாத் ஆர்த்தார்த்தி நிர்வாபணாத்
ஔதார் யாதக சோஷணாத கணிதச்ரேய: பத: ப்ராபணாத்
ஸேவ்ய: ஸ்ரீபதிரேகயே பகவான் ஏதேச ஷட் ஸாக்ஷிண||
ப்ரஹ்லாத: ச விபீஷண: ச கரிராட் பாஞ்சால்ய ஹல்யாத்ருவ:||

என்ற மேலே கண்ட ச்லோகம் அத்தாக்ஷியாகும். பகவான் பக்தர்களின் பக்திக்குக் கட்டுப்பட்டு அவர்களுக்கு அருள் புரிகிறார். பக்தர்களின் குணதோஷங்களைக் கவனிப்பதில்லை என்று,

வ்யாதஸ்யாச ரணம் த்ருவஸ்யச வய: வித்யாகஜேந்த்ரஸ்யகா
காஜாதி: விதுரஸ்ய யாதவபதே: உக்ரஸ்ய கிம் பௌருஷம் |
குப்ஜாயா: கமனீய ரூப மதிகம் கிம்தத் ஸுதாம்னோதனம்
பக்த்யா துஷ்யதி கேவலம் நதுகுணை: பக்தப்ரிய: கேசவ: ||

மேலே கண்ட ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் பகவான் பக்தர்களின் கஷ்டங்களை தீர்த்து அருள் புரிவதற்கு நான்கு கைகள் போதாதென்று அநேகமாயிரம் கைகள் கொண்டு விளங்குகிறார் என்று,

பவாப்தி முக்தி தீர்ஷுணாம் சரணம் ஸ சதுர்புஜ: |
ய: ஸஹஸ்ரபுஜோ பாதி நிஜ பக்த ஸமுத்ருதௌ|| மேலே கண்ட ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. பகவத் கருணையின் தன்மை விவரிக்க இயலாதது என்ற அபிப்பிராயமும் மேலே கண்ட ச்லோகங்களால் ஒலிக்கிறது. இவ்வபிப்ராயத்தையே ஸ்வாமிகளும் வெளியிட்டுள்ளார்.

பரமாத்முடு:—உலக மாய்கையின் கண் வயப்பட்டு, பெண்டு, பிள்ளை, வீடு, பணம், முதலானவற்றில் தன்னுடையது என்ற அபிமானம் கொண்டுழலும் வரை, தான்வேறாகவும், பரமாத்மா வேறாகவும் தோன்றும். மண், பெண், பொன் முதலானவற்றில் ஆசையை யொழித்து பரப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லயித்து ஞானக் கண்ணால் பார்க்கும்போது,

நாஹம் தேஹ: நேந்த்ரியாண்யந்தரங்கம்
நாஹங்கார: ப்ராணவர்க்கோ ந புத்தி: |
தாராபத்ய க்ஷேத்ரவித்தாதி தூர:
ஸாக்ஷீ நித்ய: ப்ரத்யகாத்மா சிவோஹம்||
நாஹம் ஜாத: ஜன்ம ம்ருத்யூ குதோமே
நாஹம் ப்ராண: க்ஷுத்பிபாஸே குதோமே |
நாஹம் சித்தம் சோகமோஹௌ குதோமே

நாஹம் கர்த்தா பந்த மோக்ஷௌ குதோமே|| என்று சொல்லப்படுவது போன்று ஜீவாத்மா பரமாத்ம ஸ்வரூபியாக விளங்குவதைக் காணலாகும். அவ்வித நிலைமையை யடைந்துள்ள மஹான்களையே ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார். இவ்வித பக்குவ நிலையை அடைய பகவத் கருணைதான் ப்ரதானமாக வேண்டும் என்ற அபிப்ராயம்கொண்டு தெரிவித்துள்ளார் என்றும் கொள்ளலாம்,

அந்ருதம்பாடடு:—பகவத் கருணை கிடைக்கப்பெற்ற பக்தர்களின் நடவடிக்கைகளை 'பக்துனி சாரித்ரமு' 'எந்தரோ மஹானு' 'அதடே தன்யுடு' 'இதே பாக்யமு' முதலான கீர்த்தனங்களில் காணலாகும், அக்குண விசேஷங்களையே இந்தக் கீர்த்தனத்தின் சரணங்களாலும் தெரிவித்துள்ளார்.

IV

ராகம் வராளி — ஆதி தாளம்

(39—வது மேள ஜன்யம். ஆ. ஸகரிக் மப தநிஸ் அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

; ப மா த பா மப மக ரீ ஸா	; ஸ நீ ஸ ரீ	ஸா ; ; க ரி
க ரு ண யே லா.....கண் டே	யீ . வி த	மே கல் .
கா மக மா பா பம தா பா ;	; மப மக மா	; பத நீ தப
யா . . ண ஸு ந் . . த ர	ரா	ம . . . .
தம		
. . (கருண)		

அனுபல்லவி

; மகா மா, பா பா பத நீ	ஸ்ா ; ஸ்ா ஸ்நி	ஸ க ரீ ஸ்ா ;
ப ர மாத் மு டு ஜீ . .	வாத் மு டு .	யொ . க டை
க்ா ம்ா க்ாரீ ஸ்ா ஸ்ா நீ தா	நீ ஸ்ா ஸ்ரி நி நி	ஸ்த தநி பப தம
ப ர கு சு ண் டு பக் .	த ப ரா . . தி	. . னு . . . னி . .
கம		
. . (கருண)		

சரணம்

நித பம க க ரி ரி ஸ்நி கரி கம பத	ஸ்நி ஸ்ரி க்க் ரிஸ்	நீ த ப மக ரிக
அ ந் ரு தம . பா . டடு அல் புல வே. டடு	ஸுந்ருபுல கொலுவடு	ஸௌர்யுனி மர வடு
கம		
. . (கருண)		

[மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்)

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

உங்கள்
அபிமானம் பெற்ற கடை
வெள்ளி சாமான்கள்
* சமீபத்திய மோஸ்தர்
* ரகம்
* விலைக்கு
உத்திரவாதம்:
ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனா பஜார்; மதராஸ்.
போன் : 3268.

இனம்! இனம்!! இனம்!!!
ஒரணா தபால்பில்லை அனுப்புகிறவர்களுக்கு 'விறலிவிடுதூது வசனம்' என்ற புத்தகம் இனம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்
ஒற்றுமை ஆபீஸ், : :
தியாகராய நகர், மதராஸ்.

வி.எச்.ஆர்
பெருங்காயம்

நவநாகரீகம்

★

ஒரு செருப்பு

★

காசினி எழுதியது

* * * 'வாசலில் பைசகிள் மணி சப்தம் கேட்கவில்லையா? பாரேன்'! என்று மாலினி ஆவலுடன் கேட்டாள்.

'வாசலில் ஓயாமல் சைக்கிள் மணி சப்தம் கேட்கிறது! ஒவ்வொரு தரமும் எழுந்து பார்க்க முடியுமா என்ன? ரோடில் போர சைகிள் மணி எல்லாம் இப்படித்தான் இந்த ஆத்திலே கேட்கிறது!' என்றாள் சுலோசனா.

மத்தியானம் நாலு மணி சுமார் இருக்கும். சுலோசனா அன்று தன் வீட்டிற்கு வந்து மத்தியானம் நேரம் போக்காகச் சீட்டாடும்படிச் சில சிநேகிதர்களைக் கூப்பிட்டிருந்தாள். மாலினி, நளினா தேவி, பங்கஜம் நான் எல்லாரும் போயிருந்தோம். ஆட்டம் முடிந்து சிற்றுண்டி சாப்பிட்டு, எல்லாருமாக உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது தான் மேற்சொன்ன சம்பாஷணை நடந்தது.

'இல்லை, நான் சைகிளில் எங்காத்து வேலைக்காரனை வரச் சொல்லி இருந்தேன்; அவன் தானுக்கும் என்று கேட்டேன்!' என்றாள் மாலினி.

'என்ன விசேஷம்? குழந்தைக்கு ஏதாவது உடம்பு சரியாக இல்லையா?' என்றாள் பங்கஜம்.

'உடம்பு எல்லாருக்கும் உன் புண்ணியத்தில் சரியாகத்தான் இருக்கிறது! வேறொரு சமாசாரம்!' என்று மாலினி வடுக்கென்று பதில் சொன்னாள்.

'பங்கஜம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'ஏதுக்காக அவளுடன் கோவிச்சுக்கொள்ள வேண்டும்? நீ எங்காத்து ஆள் வருவான், அவனா என்று கேட்டதில் இருந்து, நான் கூட என்னவோ என்றுதான் நினைத்துக் கொண்டேன்! இதெல்லாம் என்ன மூடு மந்திரம்? சமாசாரத்தைப் பளிச்சென்று சொல்லரதுதானே?' என்றாள் சுலோசனா.

'மனதிலுள்ள ரகசியத்தை லேலங்கடி லேலோ, வாய்விட்டுச் சொல்ல வேணும் லேலங்கடி லேலோ!' என்று நளினா தேவி பாடினாள்,

'ஒன்றுமில்லை! நான் ஒரு சடா—!' என்று மாலினி இழுத்தாற்போல் சொல்லிக்கொண்டிருக்கும்போதே: 'அம்மா, உங்காத்தில் இருந்து ஒரு வேலைக்காரன் வந்திருக்கான்! ஏதோ சாமான் கொண்டு வந்திருக்கானும்!' என்று சுலோசனாவீட்டு வேலைக்காரன் மாலினியிடம் சொன்னான்.

'வரச்சொல்லு,வரச்சொல்லு' என்று மாலினி சந்தோஷமாகச் சொன்னாள்.

வேலையாள் ஒரு பொட்டலத்துடன் உள்ளே வந்தான். 'இப்போதானா வந்தது?' என்று கேட்டுக்கொண்டே மாலினி பொட்டலத்தைப் பிரித்து ஒரு ஜதை குமிழ்—செருப்புகளை வெளியே எடுத்தாள்.

'அழகாக இருக்கே!' 'ரொம்பவும் நன்னா இருக்கே!', 'ஜோராக இருக்கே!; என்றெல்லாம் ஆளுக்கு ஒன்னாகச் சொன்னோம். உண்மையிலேயே அந்தச் செருப்பு மிகவும் நாசூக்காகவும் அழகாகவும் இருந்தது. இதைப் பாம்புத தோலினால் செய்திருந்தது. பாம்பின் படம் அழகாக பக்கிள் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தது. மாலினி மற்றொரு சிறிய பொட்டலத்தைப் பிரித்து பாம்புத் தோலினால் செய்த ஒரு கைப் பையையும் எடுத்தாள்.

'இதெல்லாம் உனக்கு ஏது?' என்று நளினாதேவி கேட்டாள்,

'எங்காத்துக்காரருக்கு ஒரு சிநேகிதர் இருக்கார். இவருக்கு வேட்டை ஆடுவதில் ரொம்பவும் இஷ்டம்; அதுக்கு ஏத்தாப்போல் காட்டு இலாகாவில் பெரிய வேலை, இரண்டு ஸர்ப்பங்களைச் சுட்டாராம்; உன் பெண்டாட்டிக்கு செருப்புத் தைத்து கொடு என்று தோலை அனுப்பினார்!' என்று மாலினி பெருமையுடன் சொல்லிக் கொண்டாள்.

'நீ சொல்லவே இல்லையே?' என்று சுலோசனா கேட்டாள்.

'இதைத் தைக்கச் சொல்லி ஷாபில் கொடுத்தேன், முடிந்தால் ஒரு பையும் தைத்துத் தரோம்: இன்றைக்குத்தான் தர முடியும் என்று விட்டார்கள். எனக்கு ஆத்திரமாக இருந்தது! அது தான் வந்தால் இங்கே கொண்டுவரச் சொன்னேன்! என்றாள் மாலினி,

'நானா இருந்தால் இன்று வந்தே இருக்க மாட்டேன்! வரும் வரையில் வீட்டிலேயே இருந்து இருப்பேன்! எவ்வளவு நன்றாக இருக்கிறது!' என்று சொல்லி, பங்கஜம் பெருமூச்சு விட்டாள்.

'நம்ம வீட்டுக்காரர்களுக்கு மட்டும் ஏன் இப்படி உபயோகமான சிநேகிதர்கள் இருக்கக் கூடாது?' என்று நளினாதேவி கேட்டாள்.

'உபயோகமா? நாம் வெளியில் புறப்படும் சமயம், அல்லது வீட்டில் பால் இல்லாத சமயம், வேலையாள் வெளியே போயிருக்கும் சமயம் எல்லாம் வந்து நம்ம பிராணனை வாங்குகிறார்கள்!' என்றாள் சுலோசனா. அந்த ஜதைச் செருப்பும், கைப்பையும் ரொம்பவும், நாசூக்காகவும், நேர்த்தியாகவும், அழகாகவும் தான் இருந்தது. மாலினி இதற்கு ஏற்ப ஒரு புடவை, சட்டை வாங்கி நாக கன்னிகை அலங்காரம் செய்து கொள்ளப் போவதாக சொல்லுகிறாள். அவளுக்கு பொருத்தமாகத்தான் இருக்கும்.

வெள்ளி

'வெள்ளிக்கு எச்சில் கிடையாது என்கிறார்களே? விலை அதிகம் ஆனதும், எச்சல், தீண்டல் எல்லாம் இல்லை என்று ஆகி விடுமோ?' என்றாள் லேடி சின்னையாவின் பெண்.

'அப்படி ஒன்றும் இல்லை. உங்களை விட, நம்ம பெரியவாளுக்கு எல்லாம் தெரியும். எச்சிலில் இருந்து அநேக வியாதிகள் ஒத்தரிடம் இருந்து, இன்னொருத்தருக்கு வரும்; எச்சில் கெடுதல் என்று நீங்கள் சாஸ்திரார்த்தம் சொல்லரேள். அவா கூடாது, பாவம், கண் அவிஞ்சு போயிடும் என்று சொன்னா; இத்தனை நாள் கழித்து, ஆராய்ச்சி பண்ணி, பூதக் கண்ணாடிப் பரிசோதனை செய்து, நீங்கள் சொல்லுவது, அவாளுக்கு நன்னாத் தெரிஞ்சு இருந்தது!' என்று என் அத்தை விடு விடு என்று சொன்னாள்.

'இதுக்கும், வெள்ளிப் பாத்திரத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்றாள் லேடி சின்னையாவின் பெண்.

'இது கூடா தெரியாது? எங்க அண்ணனைக் கேளு! சொல்லுவான்!' என்றாள் என் அத்தை.

விசாரித்ததில் விஷயம் விளங்கிற்று. வெள்ளியில் இந்த விஷக் கிருமிகள் சீக்கிரம் நசித்து விடுகிறதாம். இதைக் கண்டு பிடித்த இரண்டு நிபுணர்கள், வெள்ளி கலந்த ஒரு ரப்பர் போன்ற கறுப்புக் கலவையை குடிக்கும் டப்ளர்கள், பாடில்கள் ஓரங்களில்முலாம்பூசச் சொல்லுகிறார்களாம், குடித்து முடிந்து சில நேரத்துக்கெல்லாம், அந்த அலங்காரமான மேல் விளும்பு, தானே சுத்தமாகி விடுகிறதாம், சமாசாரம் எப்படி?

சர்வதேச ஸ்திரீகள் தினம்

வேப்பேரி ஸ்திரீகள் சங்கத்தில் சர்வதேச ஸ்திரீகள் தினம் கொண்டாடப்பட்டது. இதில் பல சங்கங்களும் கலந்துகொண்டன. சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதன், ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், ஸ்ரீமதி ஜானம்மாள், ஸ்ரீமதி அம்புஜம்மாள், ஸ்ரீமதி பார்வதி குமாரமங்கலம் முதலியோரைப் படத்தில் காணலாம்.

(பி. பி. பி,)

'நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச் சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயதுமுதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேல் செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

I. D. L. 71.	I. D. L. 81.	I. D. L. 91.	I. D. L. 96.
மாதர்களுக்குகந்த டானிக்	சூதக கஷ்டங்களுக்கு டானிக்	பிரசவத்திற்குப்பிறகு உதவும் டானிக்	கர்ப்பிணிகளுக்கு டானிக்

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

சித்திரமும் சிருங்காரமும்

★

மேஜர் பார்பரா — நடிப்பது அவ்வளவு சுலபமா ? — பில்லி வாக்கர் அடைந்த அனுபவம் — ஒரு ஹோட்டலுக்குச் சென்ற நடிகர் — "மெயில் ட்ரேயின்" — வேவு பார்க்கும் கதை — பம்பாய் நேஷனல் ஸ்டூடியோ — படப் பிடிப்பில் பெரியார் காட்டும் சிரத்தை — க்ரேடா கார்போவின் பெருமை — வெள்ளி விழாக் கோண்டாட்டம் — சிறப்பை எட்டிய வரலாறு — எதில் விருப்பம் அதிகம் ? — ஹாலிவுட்டில் இருக்கும் மனப்பான்மை — காதற் கதைகளில் பிறக்கும் ருசி.

"மேஜர் பார்பரா"

லண்டனில் ஆகாய விமானப் படையெடுப்பு மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலத்திலும் ஸ்டூடியோக்களில் படப்பிடிப்பு வேலை நடந்துகொண்டே தான் இருந்தது. இதனுல் இடையூறு ஏற்படவில்லை: சிலர் படப்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டவர்களானபோதிலும் யுத்த சேவையில் சேர்ந்திருந்தனர்: அவர்கள் கூடியவரை இரண்டு துறைகளிலும் தங்களது கவனத்தைச்செலுத்தி வருகின்றனர். ஜார்ஜ் பெர்னுட் ஷா எழுதிய "மேஜர் பார்பரா" என்ற நாடகத்தை டென்ஹாம் ஸ்டூடியோவில் படம் பிடிக்க ஏற்பாடு செய்து வந்தபோது சில ருசிகரமான சம்பவங்கள் நடந்தன. இப்படப் பிடிப்பு சமயத்தில் நாடகாசிரியர் ஷா வந்திருந்து பல யோசனைகளைக் கூறினுர். தார்.

இந்தப் படத்தில் ரக்ஷண்ய சேனையைச் சேர்ந்த 18 வயது யுவதியாக டெபோரா கெர் நடிக்கிருள்: ராபர்ட் நியூடன் என்பவர் இதில் பில்லி வாக்கராக நடிக்கிருர்: எடுத்தற்கெல்லாம் அவருக்கு அடிதடி சண்டைதான். நியூடன் டெபோராவை அறைய வேண்டிய சந்தர்ப்பம் கதையில் இருந்தது. அந்த அறை டெபோராவின் முகவாய்க்கட்டையில் விழுந்தது: ஒரு தடவை, இரண்டு தடவைகள். இவ்வாறு பல தடைகள் அவர் அறை வாங்கிக்கொண்டார். இவ்விதம் ஒத்திகை நடந்து கொண்டே போயிற்று: அப்போது ஒரு அடி அவளது மேல் உதடைத் தாக்கவே, ரத்தம் பிறீட்டுக் கொண்டு கிளம்பியது, அடிபட்ட இடம் வீக்கமும் கண்டது. மறு நாள் டெபோரா ஸ்டூடியோவுக்கு வீங்கிய உதடுடன் வந்து சேர்ந்தாள். புரொட்யூஸர் — டைரக்டர் அவளைப் பார்த்து பரிவுடன் "காதல் காரணமாகவோ கலை காரணமாகவோ ஏற்பட்ட எதுவும் ஒரு யுவதியைப் புண்படுத்தாது" என்ருர். டெபோராவும் அதை அங்கீகரித்தாள்.

இந்தப்படத்தில் பிரதான பாகத்தை மேற்கொண்ட வெண்டி ஹில்லர், ஒரு காட்சிக்கப்புறம் மற்றொரு காட்சியைப் பிடிப்பதற்குள் இருக்கும் இடைவேளையில், ஸோல்ஜர்களுக்காக நெசவு செய்வது வழக்கம். இம்மாதிரி சில வாரங்கள் நூலைப் பின்னல் போட்டுக் கொண்டிருந்தது காரணமாக அவளது விரல்கள் மேலே வேலை செய்ய மறுத்துவிட்டன. ஆகவே அவள் இந்த காரியத்தை நிறுத்த நேர்ந்தது. அப்போது படிப்பதற்கு ஒரு புத்தகத்தைத் தேடினுள் அவள்: பள்ளிக்கூட மாணவர்கள் படிக்கும் ஜூலெஸ்வெர்ன் என்பவர் எழுதிய நவீனம் ஒன்று அவள் கையில் அகப்பட்டது. இந்தப் புத்தகத்தை இதற்கடுத்த இரண்டு வார காலம் படித்துவிட்டு, மறுபடியும் தன் பழைய வேலையை அவள் ஆரம்பித்தாள்.

* * * *

ஒரு சங்கட நிலைமை

"மேஜர் பார்பரா"வில் கந்தை உடுத்திய ஏழை தம்பதிகளாக மெரி ஆல்ட்டும், டொனுல்ட் கால்தார்ப்பும் நடிக்கின்றனர்: டென்ஹாம் ஸ்டூடியோவில் இருப்பவர்களுக்கு இவர்களது வேஷம் நன்குதெரியும்: இது வெளியாருக்குத் தெரியாது என்ற விஷயத்தை இவ்விருவரும் மறந்து விட்டனர்: இதனுல் ஓரோர் சமயம் வேடிக்கையான நிலைமையும் ஏற்பட்டதுண்டு. பக்கத்தில் இருந்த ஹோட்டலுக்குள் ஒரு நாள் இவ்விருவரும் கந்தையை அணிந்து கொண்டுபோய்ச் சேர்ந்தனர். 16 பேர்களுக்கு அன்றிரவு போஜனத்திற்கு இடம் ஏற்பாடுபண்ணிக்கொடுக்கும்படி கோரினர். ஹோட்டல் சொந்தக்காரர் பயந்து போய்விட்டார். எதோ வேலையில்லாதார் வந்து கொம்மாளம் போடவிருக்கிருர்கள் என்றெண்ணி, ஏற்பாடு செய்வது சாத்தியமில்லை எனக்கூறி விட்டார். அவ்விருவரும் எவ்வளவோ கூறிப் பார்த்தும் லாபமில்லை. அதிகாரிகள் அவர்களை அடித்துத் துரத்த எண்ணிக்கொண்டிருந்த சமயம், அவர்களுடன் கௌரவ உடை தரித்து வந்த சிலர் முன் வந்து அவர்கள் யார் என்ற விஷயத்தை விளக்கிக் கூறினர். பிறகு நிலைமை திருப்திகரமாக முடிந்தது.

* * * *

இலக்கிய பட்டம் பெற்ருர்

ஸ்ரீ ஆர். ரமணி ('ரஞ்ஜன்') பி. ஏ. பல சங்கீத முறைகளைப்பற்றி ஆராய்ந்து எழுதிய கட்டுரையொன்றை பஹுமானித்து சென்னை சர்வகலாசாலையார் அவருக்கு "எம். லிட்" (மாஸ்டர் அப் லிடரேசா) என்ற பட்டத்தை அளித்திருக்கின்றனர்.

யார்மீது குறி ?

அலாஸ்டர் ஸிம்மும் பில்லிஸ் கல்வர்ட்டும் : "மெயில் டிரெயின்" படத்தில் ஒரு காட்சி.

"மெயில் டிரெயின்"

இம்மாதம் 21-ம்தேதி முதல் எல்பின்ஸ்டனில் "மெயில் ட்ரெயின்" என்ற ஆங்கிலப் படம் ஆரம்பமாகிறது. இப்படத்தின் கதை ஒரு உளவாளி ரகஸ்யம் அறிய முயற்சிப்பதுதான். கோர்டன் ஹார்க்கர்; அலாஸ்டர் ஸிம் முதலிய பிரசித்தர்கள் இதில் தோன்றியிருக்கின்றனர். கார்டன் ஹார்க்கர் இன்ஸ்பெக்டராகவும் அலாஸ்டர்ஸிம் ஸார்ஜண்டாகவும் இதில் திறமையுடன் நடித்திருக்கின்றனர். எதிரிகளது ரகசிய வேவு வேலைகளை இவர்கள் கண்டுபிடிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த படத்தில் வேடிக்கை அம்சத்திற்கும் குறைவே இல்லை. படத்தில் பல பிரமிப்பூட்டும் காட்சிகளும் இருக்கின்றன. தற்சமயம் இருக்கும் நிலைக்கு மிகவும் ஏற்ற படம் இது.

* * * *

ரூ. 60,000 பெருமானமுள்ள
ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம் அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிருர்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள்நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, (S.M.W) Dina Nagar (Punjab)

'கொஞ்சம் சிரிக்கக் கூடாதா, என்ன?"

"ஏ யாங்க் இன் தி ஆர். எ. எப்." என்ற படத்தில் டைரோன் பவரும் பெட்டி க்ராபிளும் நடிக்கும் ஒரு காட்சி.

பெரியார் சிரத்தை

சமீபத்தில் பரோடா கெயிக்வார் மஹாராஜா பம்பாய் நேஷனல் ஸ்டூடியோவுக்கு விஜயம் செய்தார், ஸ்டூடியோ டைரக்டர் மிஸ்டர் பஸல்பாய் அவரை வரவேற்ருர், ஸ்டூடியோவுக்குள் மஹாராஜாவை அழைத்துக் கொண்டுபோய் காண்பித்தனர். அவர்களது மஹத்தான ஏற்பாடுகளையெல்லாம் மஹாராஜா கெயிக்வார் பார்த்து பெரிதும் சந்தோஷப்பட்டார்: தவிரவும் ஆங்காங்கு மஹாராஜாவுக்கு விஷயங்களும் ஏற்பாடுகளும் விளக்கிக்கூறப்பட்டன, "ரோட்டி" என்றபடப்பிடிப்பு வேலையையும் மஹாராஜா சிறிது காலம் தங்கியிருந்து பார்த்தார். முடிவில் ஸ்டூடியோ சிப்பந்திகள் சிலருடன் மஹாராஜா தேனீர் அருந்தினுர்.

சிறிது காலமாக நேஷனல் ஸ்டூடியோவுக்கு அநேக பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருக்கின்றனர். ராஜப்பிரதிநிதி நிர்வாகசபை மெம்பர் கனம் ஸ்ரீ எம். எஸ். ஆனே. காலஞ்சென்ற மஹாகனம் ஸர் அக்பர் ஹைதரி முதலான சில பிரபலஸ்தர்கள் இங்கு விஜயம் செய்திருக்கின்றனர் என்பது இந்த ஸ்டூடியோவிடம் அதிகாரிகள் கொண்டுவரும் அக்கரையைக் காட்டுகிறது.

* * * *

புதிய படக் கம்பெனிகள்

'இதா பிக்சர்ஸ்' என்ற பெயருடன் ஒரு புதிய படப் பிடிப்பு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. "ஆதேஸ்" என்ற மகுடமிட்ட படத்தை முதன் முதலாக பிடிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருப்பதாவும், இதில் மிகவும் மதுரமாகப் பாடும் கோகிலா என்ற பெண்மணி நடிப்பதாகவும் தெரியவருகிறது.

முன்பு பம்பாய் டாக்கிஸிலிருந்த டைரக்டர் ஸ்ரீ என். ஆர். ஆச்சாரியா இப்போது படப் பிடிப்பிலும் ஈடுபட்டிருக்கிருர். "ஆச்சார்யா ஆர்ட் புரொட்யூஸர்ஸ்" என்ற பெயருடன் அவர் ஆரம்பித்திருக்கும் கம்பெனி "கன்வரா பாப்" என்ற படத்தை எடுக்கப்போவதாகவும் அதில் ஸ்ரீமதி ப்ரதிமா தாஸ் குப்தா நடிப்பார் என்றும் அறியவருகிறது.

* * *

நடிகை வெள்ளி விழா

மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியாருக்காக "இரட்டை முகமுள்ள ஸ்திரீ" என்ற படத்தில் க்ரேடா கார்போ நடிக்கிருர் என்பது நேயர்கள் அறிந்த விஷயம். இந்தப்படப் பூர்த்தியுடன் இந்த பிரபல நடிகையின் வெள்ளி விழாவும் நிறைவேறுகிறது. இந்தப் படத்துடன் அவர் மொத்தம் 25 படங்களில் நடித்திருக்கிருர்.

கார்போ ஸ்வீடன் தேசத்தில் பிறந்தவர்: சினிமா உலகில் புகுந்தபின் இவரது பெருமை மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகலாயிற்று. இந்தக் காலம் எல்லாம் இவர் அநேக நடிகர் நடிகைகளைப் பார்த்திருக்கிருர்: சிறிது காலம் புகழ் பெற்று பின்பு கீர்த்தி மங்கியவர் அநேகர்: ஆயினும் க்ரேடா கார்போவின் சிறப்பு சிறிதளவுக்காவது ஒரு சமயமும் குறைந்தது கிடையாது. ஒவ்வொரு படத்திலும் அவர் மேலும் பிரசித்தியடைந்தே வந்திருக்கிருர்.

இதுவரை இவர் நடித்த 24-படங்கள் ஹாலிவுட்டில் தான் தயாரிக்கப்பட்டவை. "தி ஸாகா அப் காஸ்டோ பெர்லிங்" என்ற படத்தில் தான் அவர் முதன் முதலில் நடித்தார். இது ஸ்வீடன் தேசத்தைத் தழுவிய படமாயினும், இதுதான் இவரது திறமை ஹாலிவுட்டுக்கும் எட்ட ஹேதுவாகியது. அடுத்தபடியாக இவர் ஹாலிவுட் வந்து சேர்ந்து அங்கு "டாரண்ட்" என்ற படத்தில் நடித்தார். இந்தப் படம் வெளியானதுமே கார்போவின் சிறப்பு எங்கும் பரவிவிட்டது: மிகவும் திறமை வாய்ந்த நடிகை என்று எல்லோரும் ஏகமனதாகக் கொண்டாடினர்: அவர் சினிமா வானில் பிரகாசிக்கும் ஒரு நக்ஷத்ரமாகிவிட்டார்.

இவர் நடித்த நான்காவது படம் "மாம்சமும் பிசாசும்" என்பது படம் பிடிக்கப்பட்ட காதற் கதைகளில் உன்னதமானது என்ற பிரசித்தி இப்படத்திற்கு இன்றும் இருந்து வருகிறது. இதில் கார்போவுடன் ஜான் கில்பர்ட் நடித்தார், இதற்கப்புறம் கார்போவின் கீர்த்தியை அறியாதார் கிடையாது.

"அன்ன கிரிஸ்டி' என்பது தான் கார்போ முதன் முதல் நடித்த பேசும் படம். "ஸூஸன் லனுக்ஸ்," "க்வீன் கிரிஸ்டினு," 'க்ராண்ட் ஹோடேல்" என்ற பல படங்கள் கார்போவின் அசாதாரண திறமைக்கு அத்தாக்ஷிகளாக இன்றும் விளங்குகின்றன இவர் ரேமன் நவாரோவுடன் நடித்த "மாதா ஹரி" படமும் சினிமா அபிமானிகளது உள்ளத்தை கொள்ளைகொண்டிருப்பதாகும், சினிமாத் தொழிலில் கார்போ மிகவும் ஈடுபட்டார்: மனமார்ந்த உழைப்பு பலனையும் தந்தது.

* * *

மோஹம் எதில்?

இப்போது ஹாலிவுட்டில் காதற் கதைகளைத்தான் அதிகம் ரஸிக்கின்றனராம். ஒரு ஸ்திரீயும் புருஷனும் சந்திக்க வேண்டும்: இருவரும் தங்கள் காதலைத் தெரிவிக்கவேண்டும்: இதில் சிறிதும் தாமதம் இருக்கக்கூடாது. இதைத்தான் ஹாலிவுட்டில் விரும்புகின்றனர்!

"நான் ஒரு தேவதையை மணந்தேன்" என்ற படத்தில் ஜீனட் மக்டானல்ட் ஒரு ரொட்டியைச் சாப்பிட்டுகொண்டிருக்கிருள்: அதை அவள் சாப்பிட்டு முடிப்பதற்குள் நெல்ஸன் எட்டி தன்னை மணக்கும்படி அவளை வேண்டுகிருன். காதல் இதில் எவ்வளவு சீக்கிரம் ஏற்படுகிறது தெரியுமா? உலகத்திலேயே இவ்வளவு அவசரம் அவசரமாக ஒருவரையொருவர் காதலித்தது கிடையாது என்கின்றனர் விஷயமறிந்தவர்கள். நெல்ஸன் எட்டி தனது காதலி ஒரு தேவதைஎன்று கனவு காண்கிருன். அவளை தாமதமின்றி கல்யாணம் செய்துகொள்கிருன். படத்தில் அரை பாகத்திற்கு மேலாக இதைப்பற்றித் தான்!

"உமன் அப் தி இயர்" (இந்த வருஷ ஸ்திரீ) என்ற படத்தில் ஸ்பென்ஸர் ட்ரேஸியும் காதரைன் ஹெப்பர்னும் நடிக்கின்றனர். தங்கள் பத்திரிகைகளில் இருவரும் பலமாகச் சண்டை போடுகின்றனர். ஒருவரையொருவர் இஷ்டப்படியெல்லாம் கண்டித்து எழுதுகின்றனர். ஆனுல் இருவரும் நேரில் சந்தித்ததுதான் தாமதம், இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர்.

"வீ வெர் டான்ஸிங்" என்ற படத்தில் நார்மா ஷியரரும் மெல்வின் டக்ளஸும் ஒருவருக்கொருவர் அறிமுகமாக்கப் படுகின்றனர்: பிறகு இருவரும் நடனம் புரிகின்றனர்: அப்போது டக்ளஸ் நார்மாவிடம் தான் அவளைக் காதலிப்பதாகக் கூறுகிருன் வாத்திய கோஷம் முடிந்ததும் தன்னை மணக்கும்படியும் அவன் கோருகிருன்: இருவரும் ஒரு மோட்டாரில் ஏறிக்கொண்டு கிளம்புகின்றனர். இதில் ஒரு வேடிக்கை: அதாவது அந்த நடனத்தன்று நார்மா வேறு ஒருவனை மணக்க நிச்சயித்திருப்பதை அறிவிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது.

* * * *

அட்டைப் படம்

கைகேயி வேஷத்தில் நடிக்கும் துர்க்கா கோட்டே.

திருவெண்காடு

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

தடிகள், திருவெண்காட்டில் ஓரிடத்தில் நிஷ்டையிலிருந்தார்.

இது விஷயமறிந்த அந்த நாட்டரசன் சேந்தனரிடம் கோபம் கொண்டான். தனது பரிவாரங்களுடன் காவிரிப்பூம்பட்டிணம் வந்து சேர்ந்தான், சேந்தனரைக் கூப்பிட்டான், 'வெண்காடரின் சொத்துக்களை நீயேன் கொள்ளையிட்டாய்' என்று அதட்டினன்: சேந்தனர் "எஜமானனின் கட்டளை! நான் என் செய்வேன்?" என்று கூறினன். அரசனுக்கு கோபம் மிகுந்தது. சேந்தனரைக் கைது செய்ய உத்திரவிட்டான். உடனே காவலர்களும் சேந்தனரைக் கட்டி. கையில் விலங்கு போட்டு சிறைக்கு அழைத்துச்சென்றனர்.

அரசனும் பட்டிணத்தடிகள் திருவெண்காட்டிலிருப்பதாகக் கேள்வியுற்று வெண்காடு வந்தான். பட்டிணத்தடிகளைக்கண்டான். பொருளனைத்தையும் விட்டு இப்படி பரதேசிக்கோலம் கொண்ட பலன் யாது என்று வினவினன். அடிகள் அரசனை நோக்கி "நீர் நிற்க நானமர" என பதிலுரைத்தனர். இதைக் கேட்டு வெட்கிய அரசனும் தங்கரடைந்தான்.

சேந்தனர் மனைவியின் முறையீடு

சேந்தனரைச் சிறைப்படுத்தி அவரது சொந்தப் பொருளையும், வெண்காடரின் பொருளென்று பறிமுதல் செய்து கொண்டான். சேந்தனரின் மனைவி, தன் மக்களுடன் வெண்காடு வந்து சேர்ந்து, பட்டிணத் தடிகளை வணங்கினள். விஷயத்தைச் சொல்லிக் கதறினள். அடிகள் அவளை சமாதானப்படுத்தினர். "நாளைய தினம் நடுப்பகலில் சேந்தனரை இங்கு காண்பீர்கள்" என உரைத்தார், அவர்களும் அன்றைய தினத்தை ஒரு யுகமாகக் கருதினர்கள். பகலை எதிர்பார்த்தார்கள்.

பிறகுபட்டிணத்தடிகள் ஸ்வேதவனப் பெருமானின் ஸன்னிதானம்சேர்ந்தார். ஓர் பாசுரத்தைப் பாடினர். பக்தவத்ஸலனகிய சிவபெருமான், பெரியவாரணப் பிள்ளையாரைக் கூப்பிட்டு, சேந்தனரின் விலங்குகளை நீக்கி, உடனே இங்கு அழைத்து வருவாயாக என்று ஆக்ஞாபித்தார்.

விநாயகக் கடவுளும் அவர் கட்டளைப்படி சிறைச்சாலை சென்றார். விநாயகர் வந்ததும் சிறைச்சாலைக் கதவுகள், தானகவே உடைந்து தூளாயின. சேந்தனரின் விலங்குகளும் தெறித்தன. இதைக் கண்ட சேந்தனர் பரவசமடைந்தார். பெரிய வாரணப் பிள்ளையார் சேந்தனரைக் கொண்டுவந்து, வெண்காட்டில் சிவபிரான் • ஸந்நதியில் விட்டு விட்டார், எல்லோரும் ஆனந்தமடைந்தார்கள். அரசனும் ஆச்சரியமடைந்தான். சேந்தனர் மனைவி மக்களுடன் அடிகளை வணங்கினர், "நானும் தங்களுடனிருந்து தங்களுக்குத் தொண்டு செய்ய அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தான் அதற்கடிகள், "உனக்கு கர்மயோகமே சிறந்தது. புத்திர களத்திராதிகளை ரட்சிக்கவேண்டும், தேவதைகளை ஆராதிக்கவேண்டும், திருப்பணி செய்ய வேண்டும். அதிலும் முக்கியமாக இவ்விலங்கு தெறித்த, விநாயகருக்கு ஆலயம் கட்டவேண்டும். இவருடைய ஆலயம் முன்பு இந்திரனல் கட்டப்பட்டது, இப்பொழுது ஜீர்ணமாகிவிட்டது. அவ்வாலயத்தை நன்கு திருப்பணி செய்வாயாக விநாயகரை எப்பொழுதும் மறவாது பூஜிப்பாயாக" என்று சொல்லி தன் நிஷ்டையிலமர்ந்தார்,

சேந்தனர் தன் மனைவி மக்களுட்னும், அங்கிருந்த இதர ஜனங்களுடனும் கோயிலில் உள்ள எல்லா தேவதைகளையும் தரிசித்து, தம் இல்லம் சென்றார். சேந்தனர் அடிகள் ஆணையைச் சிரமேற்கொண்டு, விலங்குதெறிந்த விநாயகருக்கு, திருப்பணி செய்து விநாயகக்கடவுளை நன்கு உபாஸித்து வந்தார்.

இப்பொழுதும் உத்ஸவ காலத்தில் அவ்விதம் நடத்தி, ஜனங்கள் விநாயகர் அருளைப் பெறுகிறார்கள். இவ்விநாயகருக்கு உத்தமமான 16 பெயர்களுண்டு. அதை தினம் ஜபிப்பதால் தான் நினைத்த காரியம் சீக்கிரம் சித்திக்கும், இவ்வத்தியாயத்தைப் படித்தாலும், படிக்கும்படி செய்தாலும், தன்னுடைய காரியங்கள் விக்கினமில்லாமல் பூர்த்தியடைகிறது.

கும்பகோணத்தின் அழைப்பு கேவல்ராம்ஸுக்கு

இதுவரை மற்றுங் கடைகள் மூலம் நம சரக்குகளை வாங்கி சந்தோஷமடைந்த நூற்றுகணக்கானவர்களுக்கும் நேரில் நம்மிடம் வாங்கி லாபம் பெறற பலருக்கும

அருகாமையிலிருந்து சேவை செய்ய

கேவல்ராம்ஸ் 'வைட் ஷாப்'

கிளை 1942ஷ மார்ச்சுமீ 18உ புதன்கிழமை 13 & 14 டபீர் மேலத் தெரு கும்பகோணம் விலாசத்தில் ஆரம்பம்.

உயர்ந்த ரக சரக்கு, குறைந்த நய விலையில் விற்கும் இடம் இதுவே.

கேவல்ராம்ஸ் உழைப்பு கும்பகோணத்திலே!

சென்றவார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கிறேன்— ஒளிவுமறைவின்றியும் சந்தேகத்திற்கிடமின்றியும் ஆசிய மக்களின் மீது ஆதிக்கம் கொள்ளும் நாள் முடிவுக்கு வந்து விட்டதென்பதை உணர வேண்டும். ஆசிய மக்களின் குற்றங்குறைகள் என்ன இருந்தாலும், கீழ் நாட்டு மக்கள் தங்களது விவகாரங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள அநுமதித்து விட வேண்டும். இதற்கு மாறுதலாகவுள்ள எதையும் அஸ்திவாரமாகக் கொண்ட உலக சமாதானம் நிலைக்காது" என்றும் ஸர் செட்டியார் தெரிவித்தார்.

* * * *

இலங்கை நிலைமை

பிரிட்டிஷ் சர்க்கார் அறிவிப்பதாவது:—

தற்போதுள்ள நெருக்கடியை முன்னிட்டு 'இலங்கையின் தளபதி'யென்ற ஓர் ராணுவ அதிகாரியின் பூர்ண ஆதிக்கத்தின் கீழ் இலங்கை வரும்.

இவ்வேலைக்கு வைஸ்-அட்மிரல் ஸர் ஜெப்ரே லேட்டன் நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்ற 10-ந்தேதியே அவர் இப்பதவியை ஏற்றுக்கொண்டார். இலங்கையிலுள்ள கடற்படை ராணுவ ஸிவில் அதிகாரிகளனைவரும் ஸர் லேட்டனின் அதிகாரத்துக்கு உட்படுவர்.

இலங்கையின் பாதுகாப்புக் கவசியமான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்வதும், ராணுவ ஸிவில் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதும் ஸர் லேட்டன் பொறுப்பு. எனினும் ஸிவில் நிர்வாகத்தில் தலையிடுவது அவசியமென அவர் எண்ணும் வரை அந்த நிர்வாகத்தை தற்போதைய அதிகாரிகளே நடத்தி வருவர்.

ரஷ்யா யுத்தம்

கிரீஸிலிருந்து இரண்டு ஜெர்மன் டிவிஷன்கள் ருமேனியாவைக் கடந்து ரஷ்யா செல்வதாக பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

ஸ்டாக்ஹோம் பத்திரிகையின் மாஸ்கோ நிருபர், ஸ்மாலன்ஸ்க்—வியாஸ்மா ரோடில் ரஷ்யர்கள் 11 இடங்களைப் பிடித்திருப்பதாகத் தெரிவிக்கிறார். லெனின்கிராட் முனையில் ரஷ்யர்கள் 39 முக்கிய இடங்களை அழித்திருப்பதாயும், ஜெர்மனியர் 5 பீரங்கிப் படைகளைக் கைவிட்டு ஓடியதாயும் அவர் கூறுகிறார்.

ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே குண்டு வீச்சு

சமீபத்தில் வியாழக்கிழமைத் தீவுக்கருகிலுள்ள தீவுகளை ஜபபானிய வெடி குண்டு எறியும் விமானங்கள் தாக்கின.

பிரிட்டிஷ் யுத்த செலவு

"சென்ற ஆறு வாரங்களில் பிரிட்டன் தினசரி 145 லக்ஷம் பவுன் வீதம் செலவு செய்து வந்திருக்கிறது. அடுத்த சில வாரங்களில் இவ்விகிதம் இன்னும் அதிகரிக்கும்" என்று பொக்கிஷ மந்திரியான ஸர் கிங்ஸ்லி வுட் காமன்ஸில் தெரிவித்தார். யுத்தச் செலவுக்காக நடை முதல் வருஷத்தில் 25 கோடி பவுனும் ஏப்ரல் மாதம் 1-ந்தேதியிலிருந்து ஜூன் மாத மத்திவரையுள்ள செலவுக்கு 100 கோடி பவுனும் அனுமதிக்க வேண்டுமென்று ஸர் கிங்ஸ்லிவுட் பிரேரித்தார்.

"சித்ரபாநு" வருஷ பஞ்சாங்கம்

ஸ்ரீ ஸி. ஜி. ராஜன் பீ. ஏ. கணித்த "சிரோன்மணி" திருக்கணித பஞ்சாங்கம் விலை 4-அணா. கிடைக்குமிடம், எம். துரைசாமி முதலியார் கம்பெனி, மலையப்ப பெருமாள் தெரு. ஜி. டி: மதராஸ். ஸ்ரீ ஸி. அப்பாசாமி ஜோஸியர் கணித்த "குமரன்" திருக்கணித பஞ்சாங்கம். விலை 3-அணா. பிரசுரித்தவர்; "குமரன்" பிரஸ், காஞ்சீபுரம்.

* * * *

வரப்பெற்றோம்

சென்னை, பார்க் டவுன், 2/52 வால்டாக்ஸ் ரோட், ஸ்ரீ கே. என். கே. டி. அண்டு பிரதர்ஸ எலக்ட்ரோ பிளேட்டிங் ஓர்க்ஸிலிருந்து ஓர் பேனா, பென்ஸில், இங்க் புட்டி வைக்குப்படியான ஸ்டாண்டு ஒன்று வரப்பெற்றோம். அது அழகிய பூவேலையுடன் நிக்கள் பிளேட்டிங் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே கோல்ட், ஸில்வர், நிக்கள், ஆக்ஸ்டைஸிங், பிரான்ஸிங், லாக்ரிங் முதலிய வேலைகள் செய்யப்படுகின்றன.

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு நன் கொடை யெனப் போற்றுகிறார்கள். எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ். 1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதருஸ். மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

ஏஜண்டுகள் தேவை

உயர்ந்த 80, 100 நெ. நூல் புடவைகள், ஜரிகை துப்பட்டாக்கள், ஷர்ட்டிங், கர்ச்சீப், துவாலை, துண்டுகள் முதலிய பல தினுசுகள், சகாய விலைக்கு விற்பனை செய்ய நாணயமுள்ள ஏஜண்டுகளும் வியாபாரிகளும் உடனே தேவை.

ஸ்ரீ கிருஷ்ண வீவிங் பாக்டரி, கோட்டார். (திருவாங்கூர்)

★

ஸோவியத் சங்க ஆரம்பம்

சென்னையில் சென்ற வாரம் ஸோவியத் நண்பர்கள் சங்கம் ஒன்று மேயர் ஸ்ரீ. வி. சர்க்கரை செட்டியாரால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. அச்சமயம் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தலைமை வகித்தார். (பி. பி. பி.)

★

★

பம்பாயில் சீன தினம்

பம்பாயில் ப்ராம்ஜி கவாஸ்ஜி நாடகசாலையில் பல சங்கக்காரர்களின் ஆதரவில் சீன தினம் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அச்சமயம் சீன ஸ்தானிகர் தலைமை பூண்டார். (ஜி. எஸ். .எ)

★

★

நகரில் அனுஷ்டானம்

சென்னை நகரில் வி. பி. ஹாலில் சீன தினம் லேடி ஹோப் தலைமையில் நடத்தப்பட்டது. அப்போது பலர் பேசினர். (பி. பி. பி.)

★

இயற்கை வைத்திய நூல்கள்

டாக்டர் கே. லக்ஷ்மண சர்மா

பி. ஏ., பி. எல்., என். டி., இயற்றியவை

மருந்தில்லா வைத்தியம்	0 4 0
பூர்ண சக்தி	0 4 0
உபவாஸ தத்வம்	0 4 0
பத்திய உணவு	0 2 0
குரு ரமண் வசன மாலை	0 12 0

BOOKS ON NATURE CURE

By Dr. Sarma K. Lakshman B. A. B. L., N. D.

PRACTICAL NATURE CURE	4 0 0
FASTING CURE	0 6 0
PRANAYAMA	0 2 0

By Dr. L. Kameswara Sarma M. A., N.

NATURAL CURE OF EYE DEFECTS	0 8 0
DRUGLESS HEALING	0 6 0

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor C.R. Srinivasan, B.A.

ஸ்ரீமதி கே. ஜானகி எழுதியது

சியாமளா

அல்லது

ஹரிஜனப் பெண்

ச்யாமளாமயக்கம் தெளிந்து, 'ஆ, இதென்ன ஆச்சரியம், நானிப்போது எங்கே இருக்கிறேன், கனவு காண்கின்றேனே, ஆ, பயமாய் இருக்கின்றதே, இருட்டாய் இருக்கின்றதே, நான் இங்கே எப்படி வந்தேன், நீலா, நளினு, ஒருவரையும் காணேம், அம்மா, அப்பா ஒருவரையும் காணேமே! நளினு எங்கு சென்ருய்—நான் எங்கேயிருக்கிறேன், ஆபத்பாந்தவா என்னைக் காப்பாற்றுபவர் ஒருவரும் இல்லையா? எனது நீலாவை கூட காணேமே! என் அன்பன் ஸ்ரீதரன். ஹா! இதென்ன சப்தம் யாரோ வருகின்ருர்கள் போலிருக்கிறது" என்கிருள்.

வந்தவன்:—யாரம்மா நீ நடு ராத்ரியிலே தனியாய் இங்கே இன்னு செய்யரே...நம்ப அயிலாண்டம்மா...இல்லே...கண்டுகிட்டேன். அயிலாண்டம்... அயிலாண்டம்...மாயமான்னு பூட்ரா, எத்தினி தரம் கூப்படரது ஒன்னை...பெரிய எயவா போச்சு...வூட்லே ரவ நேரம் நிக்கரது இல்லே, பின்னுலேயே வந்துகொண்டிருந்த அயிலாண்டம் சொம்ம கத்தாதே...போனு போவுதுன்னு சொம்ம இருந்தா என்னன்னமோ பேசரே... தெரு சிரிக்குது நீ செய்ர வேலையைப் பார்த்து...

அகி:-எவனையாவது இளுத்துகிட்டு போயிட்டேனு...

அவன்:—ஏ கூச்ச போடரே! நா ஒன்னே இன்னு சொல்லிட்டேன். ஏங்கே போயிருந்தே இந்நேரத்திலே, இப்படியே தேடிக்கிட்டு வரேன்! எங்கே கொம்மாளம் அடிச்சுகிட்டு கிடந்துட்டு வர்ரே...

அகி:—இதென்ன பேச்சு! சின்ன சின்ன பேச்சு! சிங்கார பேச்சு! இதெல்லாம் ஒன் பேலே தோஷமில்லே...சாவாச தோசம்.

அவன்:—நீ போயிருந்தேன்னு கேட்டா சாகஸம் பண்ரியே... நீ எக்கேடான்னு கெட்டு போ. ச்யாமளாவை நோக்கி அவன்... நீ ஏம்மா அளுவரே" என்று கேட்கிருன்.

ச்யா:—ஐயா ஆபத்பாந்தவன் தான் இப்பொழுது தங்களை அனுப்பினுர் போலிருக்கிறது, யாரோ துஷ்டர்கள் நான் தூங்கும் போது இங்கே கொண்டு வந்து விட்டு.. தயவு செய்து காப்பாத்த வேணும்...

வந்தவன்:—ஏ அம்மே! நீ யாரை தேடிக்கிட்டு இங்கே வந்தே...

ச்யா:—நான் யாரையும் தேடி வரவில்லை...நான் தூங்கும் போது.

வங்:—ஏ குட்டி! நீ பலே சோக்காய் இருக்குரே, நம்ம அயிலாண்டம் அடங்காம போயிட்டா, நான் ஒன்னை காப்பாத்தரேன. எளுந்திரு. என் கையை பிடிச்சுகிட்டு நட...நான் ஒலகத்துலே உள்ள வரையிலே ஒன்ன வைச்சுக்கரேன்...இங்கேயே குடிசை போட்டு கிட்டு அல்லாம் அக்கிராரத்திலிருந்து கொண்டாந்து கொடுக்கரேன், அயிலாண்டத்து கண்ணு முன்னுலே நாம்ப குடுத்தனம் செய்யுவோம்.

ச்யாமளா:—அடே பாவி! ஏனடா இந்த வீண் எண்ணம்? மதியற்ற பிசாசே......

வந்தவன்:—ஏ குட்டி! நீ கோவிச்சுக்கரது ஓர் அளவா தானிருக்குது, என்னு கண்ணு மணியே......பிறகு அவனருகே அவன் போகிருன்.

ச்யா:—அடே துராத்துமா ஏனடா, தகாத வார்த்தைகளை பேசி......

வந்தவன்:—அடே துராத்துமா என்று கொஞ்சி பேசும் என் தங்கமே, என் ராஜாத்தி பெத்த ரோஜா மவளே, ஓடியாந்துடு.

ச்யா:—ஆபத் பாந்தவா, என்னை இத்தருணம் காப்பாற்ற மாட்டாயா,

வந்தவன்:—அடி ஆத்தே, நீ மயிலே, மயிலேன்னு இறகு போடுவாய, இந்தாலே வாரேன் ...(பிடித்திழுக்கின்ருன்)

ச்யாமளா "என் அன்பா ஸ்ரீதரா! என்று கத்திக்கொண்டு மூர்ச்சையாளுள்.

ஸ்ரீதரன் அகஸ்மாத்தாய் அப்பக்கம் வர, ஓர் பெண்ணின் அபய குரலோடு அழுகை குரலும் கேட்க செவி சாய்த்து தன் காதலியின் குரலாக இருக்க கண்டு, "டேய். பாதகா, நீயார்? அப்பெண்ணை இம்ஸிக்க காரணம்......

வந்தவன்:—அடே நீ யாருடா அவன் கேக்கரது? உனக்கு இன்னுடா என் பெண்டாட்டியை சண்டை போட்டு கேட்டா...நீ எவண்டா கேக்கரது...

ஸ்ரீ:—சீ தரன்! என்ன வார்த்தைசொன்னுய், உன் பெண்டாட்டியா...அப்புறம்...

வங்:—அப்புறமாவது இப்புறமாவது, கொப்பு கர்னப்பு வாங்கி கொடுக்கல்லேன்னு கோவிச்சுகிட்டு, ஆத்தா வூட்டுக்கு போரா. அதுக்காவ நான் கண்டிக்கிறேன். நீ மத்தியஸ்தம் செய்ய வந்துட்டியோ உன் பல்லெ ஊத்துடுவேன்...

ஸ்ரீதர:—எபபேர்பட்ட அபாண்டவார்த்தையைச் சொல்ரே ...சீ ஓடு......

சந்திரனும் வைத்தியும் ஸ்ரீதரனை கொலை செய்ய எண்ணி அவனை துரத்திக் கொண்டே அப்பக்கம் வர, இதுதான்சமயம் என்று நினைத்து, தனது ரிவால்வரைக் குறிபார்த்து சுட்டான், தெய்வ சங்கல்பத்தால் அக்குறி அகிலாண்டத்தின் புருஷன் மார்பில் பாய்ந்து அவன் கீழே சாய்ந்தான்.

சந்திரனும், வைத்தியும், தமது குறி தப்பிப் போனதை எண்ணி மனம் நொந்தார்கள், இப்பொழுதும் தப்பித்து விட்டானே என்று எண்ணிய போதிலும் மேலுக்கு "ஸ்ரீதரா, நாங்கள் தான் அப்பாவியை சுட்டு கொன்றேம். நாங்கள் எதிர்பாராத விதமாய் இப்பக்கமாய் வரநேரிட்டது...

ஸ்ரீதர:—இந்தப்பக்கம் நீங்கள் வர......

சங்:—ஸ்ரீதரா, வைத்தி வீட்டில் கல்யாணம், அங்கு சென்று விட்டு திரும்புகின்றேன்.

ஸ்ரீதர்:— சர்வேஸ்வரன் தான் இந்த சமயத்தில் இங்கு கொண்டு வந்து விட்டான்...... இவள் தான் என் ச்யாமளா... மணி......

சந்திரன்:—(தனக்குள்), என்ன அழகு, அடாடா! ஸ்ரீதரா, உனது தந்தை என்னை உடனே வரும்படி சொல்லி அனுப்பியிருக்கின்ருர். நான் சென்று வருகின்றேன்...

ஸ்ரீதர:—(ச்யாமளாவின், மயக்கத்தை தெளிவித்து) ச்யாமளா, நீ இங்கு வர காரணம் என்ன?

ச்யாமளா தான் தனது காதலன் அருகே இருப்பதை அப்போதே உணர்ந்து, "அன்பரே, நான் காண்பது கணவா, அல்லது நினைவுதானு."

ஸ்ரீதர:— ச்யாமளா, நீ இத்துஷ்டனிடம் அகப்பட்டு கொண்ட விபரம் என்ன?

ச்யாமளா பிறகு நடந்த விபரத்தை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தாள்,

* * * *

இந்திரா:— (தனியாக) ஒழிந்தாள், தொலைந்தாள்...என் அன்பனை மணக்க இனி ஒரு விதமான இடைஞ்சலும் இல்லை. ஆ, இதோ, சந்திரன் வருகின்ருனே. சந்திரனே ஏது ரொம்ப நாளா கண்ணுலே படலே... பார்ப்பதே ரொம்ப அபூர்வமாப் போச்சு.

சங்:—அபூர்வமென்ன.. ..நான் உன்னை தேடி யலைந்தேன். நீ தான்...

இங்:—சூ, உனக்கு தான் வேலை ஜாஸ்தி......

சங்:—நான் என் சகோதரிக்கு அபிமான புத்ரனுய் ஆகி விட்டேன். இனி நீ என்னை காதலிப்பது......சந்தேகமேயில்லை......

இந்திரா:—எனது மாமாவிற்கு ஸ்ரீதரன் மேலிருக்கும் கோபம் சீக்கிரமே மாறி விடும், நேற்று அந்த ச்யாமளா தற்கொலை செய்து கொண்டாளாம், ஆகையால் ஸ்ரீதரன் என்னை மணக்க சம்மதித்து விடுவான்.

சங்:—ச்யாமளா, தற்கொலை செய்து கொண்டதாக் உனக்கு யார் சொன்னது...அவள் இங்

சுவாசத்தால் அவதிப்படுவோருக்கு மாய நிவாரணி

தவருமல் பெப்ஸ் உட்கொள்ளுங்கள்.

சுவாசகாசம், சுவாசப்பையைப் பலஹீனப்படுத்தும் ஜளிப்பு, இதர கோளாறுகளில் அவதிப்பட்டால் பெப்ஸ தவருமல் உட்கொள்ளுங்கள்; இந்த அற்புத மாத்திரைகள் தேவதாரு காட்டு, காற்றின் அரிய பலன்களை அளிக்கும்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் சேர்ந்து சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. எரிச்சலேற்பட்ட சுவாசக் குழாய்கள், தொண்டைக்கு பெப்ஸ் சமனமூட்டி, ஜளிப்பை அறுத்து சுலபமாக சுவாசிக்க உதவுகின்றது. எப்பொழுதும் பெப்ஸ் கைவசம் வைத்திருங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1. வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்,

எப்பொழுதும் பேப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்